
துணிகள்
வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
துணிகள்
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
ஸன்லைட்
சோப்பில்
தான்
SUNLIGHT
SOAP


அம்ருதா
ரத்த சுத்தி திராவகம்
உயர்ந்த பலவிருத்தி டானிக். இரத்தத்தை சுத்திகரித்து, விருத்தி செய்வது. வீரியமும் வலிவும் அளிப்பது.
Amrita
கேஸரி குடீரம் லிமிடெட், மதராஸ் 14.
ஒரிஸ்ஸா, நிஜாம சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ்நாடு முதலிய இடங்களுக்கு ஏஜெண்டுகள்
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெரம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை

கல்கி



KALKI ஏப்ரல் 9, 1950 4 அண



லிப்டன்ஸ்
என்றால்
சிறந்த டீ

LTZ-3

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Gardens Poonamallee High Road, Kilpauk, Madras



அவன் பிறப்புரிமை

பூரண ஆரோக்கியம்



உங்கள் குழந்தை சற்று சுகக்குறைவாக இருப்பதை நிவர்த்திப்பதினால் மட்டும் பலனில்லை. அவன் ஏன் நோயுற்றான், வியாதியின் மூலகாரணம் என்ன, என்பவைகளைத் தெரிந்துகொள்ளும் வரையில் திருப்தியுறாதீர்கள். கவனிக்கப்படாத இதுபோன்ற சிறிய விளங்காத கோளாறுகள்தான் ஈரல், குலை நோய்கள் உண்டாவதற்குக் காரணமாகி, மாதக்கணக்கில் மனக்கவலையைக் கொடுக்கின்றது.

அநுபவ ஆலோசனையை நாடுங்கள்

மேற்கூறிய ஆலோசனையை விரும்பும் உங்களுக்குச் சென்ற சுமார் 40 வருடங்களாகக் குழந்தைகளின் ஈரல், குலை நோய்களையே வைத்யம் செய்து அநுபவம் நிறைந்த ஜம்மி தயாராக இருக்கின்றனர். தக்க காலத்தில் கவனிக்கப்பட்டால் ஈரல், குலை, நோய்களைக் கண்டிப்பாய் குணப்படுத்தலாம். சீக்கிரம் ஆரம்பிக்கப்படும் சிகிச்சையினால், வியாதியினால் கஷ்டப்படும் நாட்களைக் குறைக்க முடியும்.

வியாதிக்கு உள்ளாகும் வயதின் விபரம்

நேரில் பரிசீலனை செய்து ஏற்பட்ட அநுபவ ஆராய்ச்சியிலிருந்து, இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள் இவ்வியாதியினால் அதிகமாக பாதிக்கப்படுகின்றன என்பது விளங்குகின்றது. உங்கள் குழந்தைகளுக்கு சரிவர வைத்திய பராமரிப்பு கிடைக்கும்படி செய்யுங்கள். குழந்தை வெளிப்பார்வைக்கு சாதாரணமாகத் தோற்ற மளித்தாலும், இந் நோயின் ஆக்ரமிப்பை டாக்டர்களினால் எளிதில் கண்டு கொள்ள முடியும்.



ஜம்மியின்

லிவர்க்யூர்

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி வியாதிகளுக்கும் அவைகள் வராமல் தடுப்பதற்கும். எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

பெரிய கடை தெரு, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி - பெரிய தெரு, கும்பகோணம் - ஆர்காட் ஸ்ரீனிவாஸச்சாரி தெரு, பெங்களூர் ஸிடி.

மற்ற சிகிச்சை ஸ்தாபனங்கள் :—

பம்பாய் - நாகப்பூர் - லக்னோ - கல்கத்தா - விஜயநகரம் - விஜயவாடா.

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்,

3, பிராடீஸ் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

பாரத்தின்மேல் இப்படிக் கடைகள் இருக்கக் கூடாதென்றும், போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கு "டிமிக்கி" கொடுக்கத்தான் அப்படி நடிக்கிறான் என்றும் பிறகு தெரிய வந்தது.

இச்சமாதிரியான கட(ன)மாடும் கடைகள் பல வருஷங்களாக நடந்து வருவதும், பாசி எவ்வளவு விலக்கினாலும் மறுபடியும் தண்ணீரை மூடிக் கொள்வதுபோல், போலீஸ் கான்ஸ்டபிள்கள் நகர்ந்தவுடன் மறுபடி அதே இடத்தை இவர்கள் அடைவதும் எனக்கு ஆச்சரியமாயிருக்கின்றன. போலீஸ் அதிகாரிகளுக்கு இம்மாதிரி கடைகளை அடியோடு ஒழிக்க முடியாதா? அப்படி இந்தக் கடைகள் இருந்து வருவதில் ஆட்சேபணையிராவிடில், இவர்களை நிர்ப்பயமாக வியாபாரம் செய்ய அநுமதித்து விடக் கூடாதா?

ஒரத்தநாடு
20—3—50 என். கல்யாணி

○●○

மொழிக் கொலை!

பல அறிஞர்களால் தொகுக்கப்பட்ட ஆங்கில அகராதியைப் புரட்டிப் பார்ப்போமானால் "தமிழ்" என்ற பதத்திற்கு "நல்ல சிறந்த இலக்கண இலக்கியச் சுவைகளை மிகுதியாகக் கொண்ட ஓர் திராவிட மொழி" என்று குறிப்பிடப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். அப்படிப்பட்ட ஓர் அழகிய மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட நமக்குத்தான் எவ்வளவு பெருமை என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா!

ஆனால் அவ்வித அருமையான மொழியைச் சிலர் துஷ்பிரயோகம் செய்து கொலை செய்வதைப் பார்த்தால் நம் உள்ளம் துடிக்கிறது. 'வட்டமேஜை'ப் பகுதியில் 'தமிழ் படும் பாடு' என்ற தலைப்புடன் கூடிய கடிதத்தில் திரு ரங்கநாதன் குறிப்பிட்டிருப்பது போன்ற சான்றுகள் இலங்கையில் பலவுள.

இதைப் பாருங்கள்: "பலய சாமான்கல் வில்கெப் பெடும்." இந்த போர்டைப் பார்த்து நான் சிரித்து விழுந்து கொண்டே ஆசாமி யார் என்று அறிய மெல்ல அந்த அறையுள் எட்டிப் பார்த்தேன். ஆனால் "வாங்க! உட்காருங்க! என்ன வேணும்!" என்று கேட்டுக் கொண்டே ஒரு நல்ல தமிழர் அசல் தமிழ் மொழியிலேயே உபசரிக்கத் தொடங்கி விட்டார். "இல்லே, சும்மா வந்தேன்" என்று சாக்குச் சொல்லித் தப்பித்து வெளியேறும்போது என் வாய் "கொலைகாரன்! கொலைஞன்!" என்று முணு முணுத்ததில் ஆச்சரியம் இல்லை அல்லவா!

இன்னும், "தமினில் ;மொளி,பெயத்துக் கொடுக்கப் பெடும்" "புதவிலே யாவாரம்" "சாமான் இங்கு விலே குரவு" இது போன்ற பொன் மொழிகளால் பொறிக்கப்பட்ட போர்டுகளைக் கொழும்பு மா நகரில் அலையாமல் காணலாம்.

இது நிற்க, இலங்கை அரசாங்கத்தார் மொழி பெயர்ப்பு மூலம் தமிழ் மொழியைப் படுத்தும் பாட்டைப் பார்த்தால் வாரத் தோறும் இடது சாரிக் கட்சிகள் இலங்கைச் சட்டசபையில் சர்க்கார் மேல் "நம்பிக்கையில்லாத்" தீர்மானம் கொண்டு வருவது போல் தினம் ஒன்று கொண்டு வர வேண்டுமென்றுதான் தோன்றுகிறது.

கடைசியாக, இவ்விதக் கொலையை நிவர்த்திக்கக் கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் "தமிழ் மொழி காக்கும் சங்கம்" என்ற ஒரு சங்கம் அமைத்துத் தமிழ் மொழியைத் துஷ்பிரயோகம் செய்வதை நிவர்த்திக்கப் பாடுபட்டால் எவ்வளவோ நன்மையாகவிருக்கும்.

வத்தளை, கொழும்பு
14—3—1950 ஜெ. தேவதாஸ்

○●○


எங்கள் ஊரில்!

நீங்கள் எழுதிய 'தேவகியின் கணவன்' என்ற தொடர் கதையை எங்கள் ஊரைப் பார்த்து விட்டுத்தான் எழுதினீர்களோ என்னவோ! தண்டாங்கோரையைப்போலவே எங்கள் ஊரிலும் பெண்களுக்கு என்று தனி உயர்தரப் பள்ளிக்கூடம் கிடையாது. அதில் பெண்களும் சிலர் படிக்கிறார்கள். ஆண்கள் பள்ளியில் பெண்கள் படும் அவதியைத்தான் தாங்கள் தத்ரூபமாய் எழுதி விட்டீர்கள். தண்டாங்கோரையில் தேவகி ஒருத்திபட்ட கஷ்டத்தை இந்த ஊர்ப் பெண்கள் எல்லோரும் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில பெற்றோர்கள் இப்படி அவமானப்பட்டுக் கொண்டாவது படிப்பானேன் என்று தங்கள் பெண்களைப் பள்ளியிலிருந்து நிறுத்திவிடுகிறார்கள்.

தண்டாங்கோரையைப்போல் இங்கு நாலு வகுப்புகளுக்கு மேல் பெஞ்சியும், நாற்காலியும் படிக்க வேண்டாம்! இவ்வூர்ப் பெண்கள் நிஜமாகவே படிக்க ஆசைப்படுகிறார்கள். ஆகவே, எங்கள் ஊரில் பெண் பள்ளிக்கூடம் கட்டினால் பக்கத்தில் இருக்கும் திருமழிசை, பேட்டை, மாங்காடு, காட்டுப்பாக்கம், குன்றத்தூர் முதலிய பல கிராமங்களிலிருந்து பெண்கள் கல்வி கற்க வருவார்கள்.

பூவிருந்தவல்லி
23—3—50 ஹேமா

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ம் "வாழ முடியும்!" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீமதி நீலாவதி அம்மாளுக்கு வழங்கப்பட்டது.



கையிலும் செலவு அதிகம். எங்களையும் எங்கள் பெற்றோர் (மாப்பிள்ளையின் பெற்றோரைவிட ஒரு படி அதிகமாகவே) கஷ்டப்பட்டுத்தான் வளர்க்கிறார்கள். இவ்வளவும் காணுமென்று ரொக்கமும் கொடுத்தால் அது அநியாயமாக இல்லையா? இதுவும் ஒருவித கறுப்பு மார்க்கெட் வியாபாரம்தான்.

இந்த அநியாயமான வரதட்சிணைப் பேயை ஒழிக்க எல்லாப் பெண்களும், பெண்களின் பெற்றோரும் ஒத்துழைத்தால் முடியும். பெற்றோர் தங்கள் பெண்கள் மணமாகாமல் இருந்து விடுவார்களென்று பயப்படாமல், 'பணம் கேட்பவருக்கு எங்கள் பெண்ணைக் கொடுப்பதில்லை' என்றும், அதுபோலவே பெண்களும் 'பணத்தின் ஆசையால் எங்களை அடையவரும் புருஷரை மணக்கச் சம்மதியோம்' என்றும் ஸ்டிரைக் செய்தால் இந்த ராக்ஷச வரதட்சிணைப் பேய் ஒழிகிறதா இல்லையா என்று பாருங்கள்.

புதுப்பேட்டை
27—3—50

லக்ஷ்மி

○●○

நட(ன)மாடும் கடைகள்



சில நாட்களுக்கு முன் சென்னைக்குப் போயிருந்தேன். நான் இதற்குமுன் அங்கு போனதில்லை. பல இடங்களைப் பார்த்துவிட்டு மாலை ஐந்து மணிக்குமேல் சைனாபஜாருக்குப் போனேன். பெரிய கடைகளின் வாசல்களிலும், ஜனங்கள் நடமாடும் பிளாட்பாரத்தின் மேலும் அநேக சில்லறைக் கடைகள் அமைந்திருந்தன. இப்படிப்பட்ட கடைகள் ஒன்றில் விற்கப்பட்ட சில்க் துணிகள் என் கவனத்தை இழுத்தது. நான் மேற்படி கடையண்டை போய், எனக்குப் பிடித்த ஒரு துணியை எடுத்து, விலை தீர்த்து, அந்த வியாபாரியிடம் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்து, மீதிப் பணத்தைக் கேட்டேன். சுமார் இரண்டு நிமிஷங்கள் ஆகியிருக்கலாம். நான் பாக்கிக்காகக் காத்திருக்கும்போதே மேற்படி வியாபாரி திடீரென்று சாக்கின்மேல் பரப்பப்பட்டிருந்த தன் சாக்கை சுருட்டிக் கொண்டு ஓட ஆரம்பித்தான். நான் கலவரப்படுவதை அறிந்த அவன் "இங்கேயே இருங்கள் அம்மா, வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே கூட்டத்தில் மறைந்து விட்டான். ஒன்றும் புரியாமல் நின்று கொண்டிருந்த என்னிடம் சிறிது நேரம் கழித்து வந்து எனக்குச் சேர வேண்டிய தொகையைக் கொடுத்தான். பிறகுதான் எனக்கு அவன் அப்படி ஓடியதின் மர்மம் தெரிய வந்தது. பிளாட்-

நூற்றுக்கு ஒருவருக்குக்கூட வேலை கிடைப்பதில்லை. தபால்காரர்கள், மெயில் பியூன்கள் வேலைக்குப் பரீட்சை வைக்கிறார்களென்று அங்கு சென்றால், அந்த வேலைகளுக்கு மூன்றும் பாரம் வரை படித்திருந்தால் போதும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் தேவையில்லை என்று சொல்லி விட்டனர். நான் வெட்கத்தை விட்டு எழுதுகின்றேன். ஒரு ஆபீஸ் பியூனாகவோ, வாட்ச்மேனாகவோ நியமித்தால் கூட நான் வேலை செய்யச் சம்மதம்தான். நான்கு வருடகாலம் வேலைக்காக அலைந்து மனம் புண்பட்டு விட்டது. செலவிற்கு பணமில்லையே யென்று சில பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், சிறு கதைகள் எழுதி அனுப்பினேன். இந் நிலையில் எனக்கு ஸ்டாம்பு செலவுதான் கண்ட பலன். அவைகள் என் பெயரைத் தாங்கி வெளி வர மறுத்துவிட்டன. "வேலை கிடைக்கவில்லையென்று மதுரையில் ஒருவர் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தார்" என்ற செய்தியைப் படிக்கும்பொழுது மனம் என்னை அந்நிலையில் நிறுத்திப் பார்க்கின்றது. நானும் அம்மாதிரி செய்துவிடுவேன் என்று பயப்படுகின்றார்கள் என் பெற்றோர்கள். சர்க்காரில் இதற்கொரு வழி செய்யாவிட்டால் பிற்காலத்தில் எப்படியிருக்குமென்று நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

திருப்பாச்சேத்தி
22—3—50 மு. சுந்தரம்

○●○

என் பிரார்த்தனை

இந்தியத் [illegible] தொகுதியில் 'நாடார்' ஜாதியைச் சேர்ந்த குடும்பங்களிலும் இந்த வரதட்சிணைப் பேய் கோர தாண்டவம் ஆடி வருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நானும் இந்த வகுப்பைச் சேர்ந்த பெண்தான். தாயற்ற என்னைக் கல்யாணம் செய்து கொடுக்குமுன் என் தகப்பனாரும் சகோதரரும் பட்ட கஷ்டத்தை நான் இன்னும் மறக்கவில்லை.

எங்கள் இனத்தாரில் 90 சத விகிதம் படித்த பெண்கள். எட்டாவது வரையிலோ, அல்லது எஸ். எஸ். எல். சி. முடித்தோ 'டிரெயினிங்' எடுத்து உபாத்திமைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். எப்படியும் வருஷம் 500 ரூபாய்க்குக் குறைவில்லாமல் குடும்பத்துக்கு உழைத்துப் போட லாயக்குள்ளவர்கள். அப்படியிருந்தும் 'ஏதோ பெண்ணைப் படிக்கவைத்தோம், கட்டிக் கொடுத்துக் கண் குளிரப் பார்த்தோம்' என்று பெற்றோருக்கு உண்டா? நகை நட்டு, பாத்திர பண்டம் மற்ற ஸ்ரீதனம் இந்த வரதட்சிணையும் கொடுக்க இந்தக் காலத்தில் எங்கே போவது? இதனாலேயே அநேக குடும்பங்களில் பெண்கள் நாங்கள் வேலைக்கு வந்த பின் சம்பாதித்துத் தங்களுக்கு நகைகள் தேடிக் கொள்ள வேண்டியதாகிறது. எங்கள் இனத்தாருக்கோ பவுனைக் கட்டி கட்டியாகத் தொங்கவிட்டுக் கொள்ளக்கூடச் சம்மதம்தான். அத்தனை மோகம் நகைகள் மேல். குறைந்தது 1000 ரூ. மதிப்புள்ள நகையில்லாத பெண்ணுக்கு வரன் கிடைப்பது குதிரைக் கொம்புதான். இத்தனை ரூபாய் சேர்த்து அந்தப்பெண் தன்னைத் தயார் செய்வதற்குள் அது 30 வயதை எட்டிப் பிடித்துவிடும்.



இப்பொழுதெல்லாம் பணக்காரக் குடும்பங்களில் வரதட்சிணை வாங்குவதில்லை. அவர்கள் பெருமையாக, "எங்கள் பையனுக்கு வரதட்சிணை ஒன்றும் தேவையில்லை. பெண் எங்கள் வீட்டுக்கு வரும்போது அதன் உபயோகத்திற்காக ஒரு ரோல்ஸ் ராய்ஸ் காரும், ஒரு நல்ல ரேடியோ செட்டும் கொண்டுவந்தால் போதும்" என்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்? ஆரஞ்சு வேண்டாம் ஆப்பிள் போதும் என்கிறார்களா?

இந்த வரதட்சிணைப் பேய் இன்னும் எத்தனை ரூபம்தான் எடுக்குமோ? தற்சமயம் எனக்கும் நான்கு வயதில் ஒரு பெண் குழந்தை இருக்கிறது. அதற்குக் கல்யாண வயது வருவதற்குள்ளாகவாவது இந்த வரதட்சிணைப் பேய் ஒழியாதா, பகவானே! என்று நான் தினம் வேண்டிக் கொள்ளுகிறேன்.

வடகரை
23—3—50 ராஜம்மாள் சீனிவாஸன்

○●○

இது ஒரு வியாபாரம்!

இந்தப் பஞ்சகாலத்தில் கூட வரதட்சிணை கொடுப்பது நிற்கவில்லை. தற்காலத்தில் எல்லா ஜாதியினரிலும், மதத்தினரிலும் வரதட்சிணை கொடுப்பது ஒரு மாமூல் ஆகிவிட்டது. பணமில்லாக் குறையினால், ஏழைக் குடும்பத்திலுள்ள பெண்கள் எவ்வளவு அழகிற் சிறந்து குணத்தில் நல்லவர்களாயிருந்தாலும், அவர்களை யாரும் மணக்க முன் வராமல், ஊரார் நிந்தைக்கு ஆளாகிய அநேகம் பெண்களை எனக்குத் தெரியும். மாப்பிள்ளையை அவர் பெற்றோர் படிக்க வைப்பதுபோலவே பெண்களாகிய எங்களையும் எங்கள் பெற்றோர் பி.ஏ. என்றும் எம்.ஏ. என்றும் அல்லது குறைந்தது எஸ். எஸ். எல். ஸி. வரையாவது படிக்க வைத்து ஆயிரக் கணக்கில் துணி மணிகளுக்குச் செலவழித்து ஆயிரக் கணக்கான தொகைக்கு ஆபரணங்கள் போடுகிறார்கள். ஆண்களை விடப் பெண்களுக்குத் துணி மணியிலும்

வட்ட மேஜை

★ வாழ முடியும்!

சென்ற வாரக் 'கல்கி'யில் 'அநாதைகள் யார்?' என்ற கட்டுரையைப் படித்தேன்.

இன்றைய வாழ்க்கைப் போக்கில் நடுத்தர வகுப்பார் நலியும் தன்மையை நன்றாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

சமீபத்தில் நடந்த சர்க்கரை (கிடைக்காத) திருவிழாவை எண்ணினால், "நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்" என்று பாரதியார் அன்று உருகியது நினைவிற்கு வருகிறது.

அளவுக்கு மீறிய ஆசையால் மக்களினத்திற்கு மனமாரத் துரோகம் செய்யும் வர்த்தகர்களைப் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்பது சரியான யோசனை.

கொடுமையைக் கண்டு உள்ளம் குமுறி எழவேண்டும் என்றான் பாரதி. அநீதமான அடிமைத் தனத்தை அறத்தால் வெல்ல வேண்டு மென்றார் காந்தியடிகள். இந்தப் பாடங்களைப் படித்து இதில் தேர்ச்சி பெற்ற நாம் இதை மற்ற விஷயங்களில் கைக்கொள்ள மறந்துவிடக் கூடாது.

கொள்ளை லாபம் அடிப்பதற்காக விலைகளைக் கட்டிவைத்துக் கொடுமனத்தைக் காட்டினால், அதைத் தகர்த்தெறிய பொது மக்களாகிய நாம், வாங்குவோராகிய நாம், தயாராகிவிட வேண்டும்.

குறிப்பிட்ட அந்தப் பொருள் (அநியாய விலையில்) வந்தால்தான், நாம் வாழ முடியும் என்ற நிலை, கொடுமைக்குத் தூபம் போட்டது போலாகும். தவிர அக்கிரமத்தை ஆதரித்துப் பாவத் தொழிலுக்குப் பகிரங்க உதவி செய்ததும் ஆகும். சர்க்கரை இல்லாப் பஞ்சமும், தீபாவளியும் நெருங்கிய உடனே மக்கள் பட்ட அவதியும் அலங்கோலமும் மறக்கக் கூடியதல்ல. தொண்டு கிழம் முதல், தொட்டிலில் உறங்கும் குழந்தை வரை அரிய தவம் செய்து, அரைக் கால் வீசையும், கால் வீசையும், பெற்ற கண்ணராவியை எந்த வார்த்தைகளால் வர்ணிப்பதென்று புரியவில்லை. அநியாயத்தை எதிர்த்து சர்க்கரை இல்லாமல் தீபாவளியை நடத்துவோம் என்ற துணிவு யாருக்கும் வரவில்லை. தீபாவளியின் லட்சியம் இந்த வெள்ளைச் சர்க்கரை அல்ல என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து இருந்தால் திருட்டு மார்க்கெட்டும் வளர்ந்திராது.


அதி அவசியமான சில மருந்துச் சாமான்களைத் தவிர மற்றப்படி உணவுப் பொருள்கள் எதுவானாலும், கொள்ளை லாபக்காரர்களுக்கு இடம் கொடுத்து வாக்கக் கூடாதென்பதை வற்புறுத்த விரும்புகிறேன். பணத்தையும் கொடுத்துப் பைத்தியக்காரப் பட்டமும் அல்லவா பெற்று விடுகிறோம்! நடுத்தர வகுப்பார் அநாதைகள் என்பதை விட, சில சமயம் அநாதைகளை விட மோசமாகி விடுகிறது அவர்கள் நிலை என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. கண்ட்ரோல்கள் இருப்பது ஒரு ஒரு விதத் தொல்லையென்றால், அது இல்லாமல் போவது அதைவிடப் பெருங் கேடாகி விடுகின்றது. 'இரக்கமென்ற ஒரு பொருள் இல்லாதார்' பெருகி வரும் இந்நாளில், வாழ்வின் எப்பக்கமும் தொல்லையே சூழ்ந்திருக்கிறது. ஆசை யென்னும் பேய்க்கு அடிமையாகாமல், மனித தர்மத்தைக் கொஞ்சமாவது கடைப்பிடித்தால் மக்கள் சற்று நிம்மதியுடன் வாழ முடியும். இதை வர்த்தகர்கள் உணர்வார்களா? உணர்வார்கள்; நடுத்தர வகுப்பார் சரியாக நடக்க ஆரம்பித்து விட்டால்.

தியாகராயநகர்
25—3—50 — நீலாவதி

○●○

வழியில்லையா?

பிரதி வருஷமும் சுமார் ஐம்பதினாயிரம் மாணவர்கள் எஸ். எஸ். எல். ஸி. பாஸ்செய்து வருகின்றார்கள். அதில் பதிமூன்றாயிரம் மாணவர்கள்தான் காலேஜ் படிப்பிற்குச் செல்பவர்கள். பாக்கி மாணவர்கள் அனைவரும் வேலை தேட முற்படுகின்றார்கள். நான் 1946ல் பாஸ் செய்தவன். நான் அப்ளிகேஷன் போடாத கம்பெனியே கிடையாது. எங்கும் வேலை காலியில்லை யென்ற ஒரே பல்லவிதான். நான்கு வருஷங்களுக்கு முன்பு பாஸ் செய்த எனக்கே வேலை கிடைக்காதபொழுது பின்பு பாஸ் செய்த



இரண்டு லட்சம் நபர்களுக்கு வேலை கிடைத்திருக்கு மென்று நிச்சயமாய்ச் சொல்வதற்கு இல்லை. 'எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்' ஸ்தாபனத்தின் மூலமாக

யேழு வெங்கடேசன்களைக் கண்டுபிடித்து விட்டோம். இன்னும் வலை போட்டுக் கொண்டே யிருக்கிறோம். முடியுமானால் அவர் போட்டோ ஒன்று அனுப்பி வையுங்கள் அடையாளத்திற்காக. நீங்கள் கவலைப்படாதீர்கள்.

இங்ஙனம்
கோடாக்கண்ட நாயுடு,
இன்ஸ்பெக்டர்.

5

20, நடுத்தெரு, பழஞ்சட்டி பாளையம்
24—3—50

இன்ஸ்பெக்டர் கோடாக்கண்டனுக்கு,

ஐயா, இத்துடன் வெங்கடேசனது போட்டோவையும் அனுப்பியிருக்கிறேன். அவர் இரண்டு நாட்களுக்கு முன்னால் போனவர் தாம்! இன்னும் வரவேயில்லை. என் பெண் அழுதுகொண்டே யிருக்கிறாள். வேண்டுமானால் பாதுகாப்புக் காவலை ரத்து செய்கிறேன் என்கிறாள். 'சினிமாவுக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டாம். மாதா மாதம் புடவை கேட்கமாட்டேன். டாய்லெட் அகௌண்ட்ஸ்க்கு இனி வேலையே இராது. நீங்கள் எப்படியாவது வந்து விடுங்கள்' என்கிறாள். எப்படியாவது நீங்கள் முயற்சி செய்யுங்கள்.

இங்ஙனம்
மூ. வே. ராமசாமி ஐயர்.

6

பழஞ்சட்டி பாளையம், போலீஸ் கோர்ட்டு
24—3—50

உயர்திரு ராமசாமிக்கு,

ஐயா, வந்தனம். ஆத்துமணலை எண்ணினாலும் எண்ணலாம்! ஆனால் உங்கள் மாப்பிள்ளைகளை எண்ணமுடியாது போலிருக்கிறதே! தினம் ஒரு லைக் அலிகைப் பிடிக்கிறதுபோல தினம் தினம் ஒரு டஜன் வெங்கடேசன்களைப் பிடித்துக் கொண்டு வந்து விடுகிறார்கள் நம்ம போலீஸ் புலிகள். அவர்களில் உங்கள் நிஜ மாப்பிள்ளை யார் என்று கண்டு பிடிக்க என்னாலும் முடியாது; உங்களாலும் முடியாது. ஒரு யோசனை சொல்கிறேன். உங்கள் பெண்ணைக் கூப்பிட்டு இந்த மாப்பிள்ளைகள் எதிரிலே நிற்கச் சொல்லுங்கள். நான் ஒரு பூமாலை தருகிறேன். உங்கள் பெண் அந்தப் பூமாலையைச் சுழற்றி எறியட்டும்! அவள் கற்புடையவளாயிருந்தால் பூமாலை அவள் கணவன் கழுத்திலே விழட்டும். என்ன யோசிக்கிறீர்கள்! அதெல்லாம் பார்க்காதீர்கள்......நாளைக்கே சுயம்வரம் நடத்தலாம். வேண்டிய ஏற்பாடுகளை நானே செய்கிறேன்.

இங்ஙனம்
கோடாக்கண்ட நாயுடு
இன்ஸ்பெக்டர்.

7

20, நடுத்தெரு, பழஞ்சட்டி பாளையம்
25—3—50

திரு கோடாக்கண்ட நாயுடுகாருக்கு,

வணக்கம் இத்தனை நாள் நான் உங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டேன். என் மாப்பிள்ளை எங்கேயும் போகவில்லை வீட்டிலேயே தான் இருந்தார். மூன்று நாட்கள் முன்பு வெங்கடேசன் வைக்கோல் அறைக்குள் சும்மா நுழைந்தான். அப்போது என் கடைக்குட்டி விச்சுப் பயல் வந்து மெதுவாகக் கதவைத் தான் போட்டு விட்டான். பிறகு என் தர்மபத்னி வந்து அந்த அறையின் ஜன்னலை மூடிப் பூட்டும் போட்டுவிட்டாள். மாப்பிள்ளை மூன்று நாளாய் அதற்குள்ளேயே பாதுகாப்புக் கைதியாக இருந்து இன்று யதேச்சையாக விடுதலையானார். சுயம் வரமெல்லாம் வேண்டாம். பூமாலையும் வேண்டாம். போலி வெங்கடேசன்களை நம்ப வேண்டாம். அவர்களை விடுதலை செய்யுங்கள்.

இங்ஙனம்
மூ. வே. ராமசாமி ஐயர்.

பொழுது புலர்ந்தது!

அமரகவி பாரதியாரின் அற்புதத் தீந்தமிழ்ப் பாடல்கள் பல சமீப காலத்தில் இசைத் தட்டுகளில் வெளி வந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தொடரில் 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்ற பாடலும், 'பொழுது புலர்ந்தது' என்ற பாடலும் ஸ்ரீமதி என். ஸி. வஸந்த கோகிலம் அவர்களால் பாடப்பட்டு, ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ் கம்பெனியின் நெ. 28149 இசைத் தட்டாக வெளிவந்திருக்கின்றன. இந்த இரு பாரதியார் கீதங்களையும் ஸ்ரீமதி வஸந்தகோகிலம் வழக்கம்போல் இனிமையாகவும் எடுப்பாகவும் பாடியிருக்கிறார்.

இறங்கிய கண்முகிழ்த்(து)
இரவும் எல்லுமே
உறங்குதி போய்' என
உளையக் கூறினான்.

[மறங்கிளர் செருவினுக்கு : மேலும் மேலும் வீரம் விளையும் யுத்தம் செய்ய; உரிமை மாண்டனை : இறந்த உரிமை கொண்டவன்தான் நீ; பிறங்கிய தசையொடு : இரத்தம் நிறைந்த மாமிசத்தோடு; நறவும் பெற்றனை : மதுவும் பெற்றாய்; சரி சரி யிருக்கட்டும்.

இறங்கிய கண் முகிழ்த்து : தூங்கி வழியும் கண்ணை மூடிக் கொண்டு; இரவும் எல்லுமே : இரவும் பகலுமே; உறங்குதி போ என : வீடு போய் நன்றாய் உறங்கு என்று; உளையக் கூறினான் : அந்த வீரனை கும்பகர்ணனது மனசு புண் படும்படியாகச் சொன்னான் ராவணன்.]

ராவணனுக்குக் கோபம் இன்னும் அதிகரிக்கிறது.

கும்பகர்ணனைப் பார்க்கச் சகிக்கவில்லை.

மானுடர் இருவரை
வணங்கி, மற்றும்அக்
கூனுடைக் குரங்கையுங்
கும்பிட்(டு)உய் தொழில்
ஊனுடை உம்பிக்கும்
உனக்கு மேகடன்,—
யானது நினைப்பெனோ!
எழுந்து போதியால்

[கூனுடை குரங்கையும் கும்பிட்டு உய் தொழில் : முதுகு வளைந்திருக்கிறதே அந்தக் குரங்குக்கு; அந்தக் குரங்கையும் கும்பிட்டுப் பிழைக்கிற காரியம்; ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன் : அந்தக் கொழுத்த பயல் விபீஷணனுக்கும் உனக்குமே ஒத்த காரியந் தான்; யானது நினைப்பெனோ : என்னால் அதை நினைக்கவும் முடியுமா; எழுந்து போதியால் : என் கண் முன் இராதே. எழுந்து எங்கேயாவது போய்த் தொலை என்றான் ராவணன்.]

அவமானமும் அச்சமும் கலந்து விட்டால் இப்படித்தான் பேசச் சொல்லும்.

ராவணனுக்குத் தன்னிடத்திலுள்ள பலக் குறைவு தெரியவே செய்கிறது. கோபமும் அடாத வார்த்தையும் தன்னிடத்தில் உள்ள பலக் குறைவினாலேயே உண்டாகின்றன.

★ ★ ★ தேடிக் கொடுங்கள்! ★ ★ ★

கோதண்டராமன்

1

20, நடுத்தெரு, பழஞ்சட்டி பாளையம்
22—3—50

போலீஸ் இன்ஸ்பெக்டர்
ஸ்ரீ கொடாக்கண்ட நாயுடுவுக்கு,

ஐயா, எனது மாப்பிள்ளை சீ. வி. வெங்கடேசன் லேக் அவிலையைப்போல இன்று காணமற் போய்விட்டார். அவர் அடையாளங்கள்: உயரம் நான்கு அடி பதினொரு அங்குலம். எடை 180 பவுண்டு. முகத்தில் முப்பத்தி மூன்று கிரிக்கெட் காயங்கள். அவரைக் கண்டு பிடித்துச் சொல்லுங்கள்.

இங்ஙனம்,
மூ. வே. ராமசாமி ஐயர்.

2

பழஞ்சட்டி பாளையம், போலீஸ் கோர்ட்டு
22—3—50

திரு ராமசாமி அவர்களுக்கு,

தங்கள் மருமகன் எந்தக் காரணத்தால் வெளியேறினார்? மனதில் துக்கமா? ஒரு வேளை மனைவியின் பாதுகாப்புக் கைதி என்ற வெட்கத்தினலா? காரணம் என்ன?

இங்ஙனம்,
கொடாக்கண்டன்,
இன்ஸ்பெக்டர்.

3

20, நடுத்தெரு, பழஞ்சட்டிபாளையம்
23—3—50

ஐயா, என் மருமகன் வெங்கடேசன் என் பெண்ணின் பாதுகாப்புக் கைதிதான். ஆனால் வீட்டை விட்டு எங்கும் போவார். அவரது மனைவி மிகவும் துக்கமாகவே யிருக்கிறாள். அவரைக் கண்டு பிடித்துச் சீக்கிரம் அனுப்புக.

இங்ஙனம்
மூ. வே. ராமசாமி ஐயர்.

4

பழஞ்சட்டி பாளையம், போலீஸ் கோர்ட்டு
23—3—50

திரு ராமசாமி அவர்களுக்கு,

உங்கள் அவசரத் தபால் இன்றே வந்து விட்டது. நாங்கள் இதுவரை சுமார் நூற்றி

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி

289 எழுந்து வெளியே போ!

முதல் நாள்ப் போரில் ராவணன் தோல்வி அடைந்தான் என்ற செய்தியைக் கேட்டதும் கும்பகர்ணனுக்குக் கோபம் ஒரு பக்கம் வந்தது, ஆத்திரம் ஒரு பக்கம் வந்தது.

ராவணனைப் பார்த்துக் கடுமையாய்ச் சொன்னான்:

"சீதையை விட்டுவிட வேண்டும்; தம்பி விபீஷணனோடு பழையபடி உறவு கொண்டாட வேண்டும், இதுதான் பிழைப்பதற்கான வழி. இது செய்ய உனக்கு மனமில்லையென்றால், ஒரேயடியாய் நம்முடைய சேனைகளையெல்லாம் திரட்டிப் பகைவர் மேல் செலுத்த வேண்டும். சில்லறையாகப் படைகளை விட்டு அவைகள் சிதறுண்டு போக இடங்கொடுத்தல் வெறும் தவறான யோசனை" என்று காரமாய்ச் சொன்னான் கும்பகர்ணன்.

* * *

சாதாரண காலங்களில் யுத்தத்தைச் சரியான முறையில் நடத்த வேண்டும் என்று சொன்னால் ராவணனுக்கு உவந்ததாகவே இருக்கும். கும்பகர்ணனை மெச்சியே இருப்பான்.

ஆனால் இப்போதோ தோல்வியுற்று அவமானத்தால் குழம்பியிருக்கிறது ராவணனது மனசு.

இந்தக் குழப்பம் காரணமாகக் கோபமே வருகிறது. ஏன்? கோப வெறியே உண்டாய் விடுகிறது. சொல்லுகிறான்:

"ஏ கும்பகர்ணா! உன்னைக் கூப்பிட்டு விட்டது யோசனை கேட்கவா: அல்ல. நீதான் போய் அந்த அற்பத் தொழில் மனிசப் பயல்களைக் கொன்றுவிட்டு வாயேன். அதை என்னிடத்தில் ஏன் வந்து சொல்ல வேண்டும்? எனக்கு யோசனை சொல்லுவதற்கான மந்திரியா நீ? அல்ல."

இந்தச் சவுடால்த்தனமான பேச்சு எதைக் காட்டுகிறது! பயந்தவன் நீ என்பதைத்தான் காட்டுகிறது!

"உன் வீரமெல்லாம் வெறும் ஆடம்பரம், வெற்றுரை. உண்மையில் உன் உள்ளத்தில் இருப்பது பயங்கொள்ளித்தனம் தான்."

'உறுவது தெரியஅன்(று)
உன்னைக் கூயது;—
சிறுதொழில் மனிசரைக்
கோறி சென்(று)!எனக்(கு)
அறிவுடை அமைச்சன்நீ
அல்லை; அஞ்சினை;
வெறுவிது உன்வீரம்'என்(று)
இவைவி ளம்பினான்.

[உறுவது தெரிய அன்று உன்னைக் கூயது: எனக்கான காரியத்தைத் தெரிந்து சொன்ன அல்ல உன்னைக் கூப்பிட்டு விட்டது; சிறுதொழில் மனிசரைக் கோறி சென்று: அற்பத் தொழில் செய்யும் மனிதரை நீ போய்க் கொல்லு; அது செய்யவில்லை என்னிடம் வந்து, 'இது செய், அது செய்' என்கிறாய். எனக்கு அறிவுடை அமைச்சன் நீ யல்லை: எனக்குப் புத்தி புகட்டக் கூடிய அறிஞனான மந்திரி நீ யல்ல; அஞ்சினை: உண்மையிலேயே நீ பயப்படுகிறாய்; வெறுவிது உன் வீரம்: உன் வீரப் பேச்செல்லாம் பொக்கான காரியம்தான்; என்று இவை விளம்பினான்: இந்த வகையாகப் பேசினான் ராவணன்.]

மேலும் பேசுகிறான் ராவணன்.

"உண்மையில், யுத்தம் செய்வதற்கான பதவியில் இருக்கிறாய் நீ. அதனால்ப் போர் புரியும் சிறந்த உரிமை உனக்கு இருக்கவே செய்கிறது. போருக்காகவே உன்னை வளர்த்தேன். மாமிசமோ, மதுவோ வேண்டிய மட்டும் பெற்றாய்."

'மறம்கிளர் செருவினுக்(கு)
உரிமை மாண்டனை!
பிறங்கிய தசையொடு
நறவும் பெற்றனை!—

"அப்படியானால் அண்ணா தன் கதைகளில் வர்ணிப்பதுபோல அவள் ஒரு ரதியாய்த்தானிருக்க வேண்டும், அம்மா!" என்று சொன்ன சரஸ்வதி என்னைப் பார்த்து. "ஏன் அண்ணா, அவள் முகத்தினிருந்து நிலவு பொழிந்து கொண்டிருக்குமோ?" என்று கேட்டாள்.

"போய்ப் பார்த்து விட்டுத்தான் வாயேன்" என்றேன் நான்.

அன்று மாலையே அவர்கள் பெண்ணைப் பார்த்து விட்டுத் திரும்பினர். சரஸ்வதி என்னைத்தேடி என் அறைக்கு வந்தாள்.

"இதோ பார் அண்ணா! உண்மையாய்ச் சொல்லு. அவளையா கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமென்றாய்?" என்றுகேட்டாள் வந்ததும் வராததுமாக.

"ஏன்? அவளைப் பார்த்தால் பெண்ணாய்த் தெரியவில்லையா?" என்றேன்.

"விளையாட்டு இருக்கட்டும்......அவள் தோற்றமே அருவருப்பைக் கொடுக்கிறதே! கறுப்பாய், ஒல்லியாய், முகத்தில் களையே யில்லாமல்......உன் லட்சியப் பெண்ணுக்கு நேர் விரோதமாய் இருக்கிறாளே, அவள்!" என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

இச்சமயம் என் தாயாரும் அறைக்குள் வந்தாள்.

"துரை! ஏன் கூடாது? அந்தப் பெண்ணைப் பார்த்தால்..." என்று ஆரம்பித்து என் தாயார் சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்கு முன்னர், "அம்மா! அவளிடம் நூறு குறையிருக்கும். ஆனால் அவளிடம் ஒரு தனிச் சிறப்பும் இருக்கிறது....அவள் பேசத் தெரிந்தவள் என்பதுதான் அது. வெறும் அழகும், படிப்பும் வாழ்க்கையைச் சோபிக்கச் செய்யாது" என்றேன் நான் தீர்மானமான குரலில்.

சரஸ்வதியும் என் தாயாரும் என்னை வியப்புடன் நோக்கினர்.

பதினாறு வயதுக்கு மேற்படாத ஒரு அழகிய படித்த பெண்ணைத் தான் கல்யாணம் செய்து கொள்வேன்' என்று சொல்லி வந்த நான், அப்படித் திடீரென்று மாறியது அவர்களுக்குப் புரியாத புதிராய்த் தானிருந்திருக்க வேண்டும்!

* * *

எனக்கும் சாந்தாவுக்கும் கல்யாணமான தினத்திலேயே பட்டாபிக்கும், சரஸ்வதிக்கும் கல்யாணமாயிற்று.

"நாம் இருவரும் ஒரு வருஷ காலமாக ஒரே அறையில் வசித்து வந்தும் வெளியிடத்தில் 'மாப்பிள்ளை' தேடினோமே! அதை நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது" என்றான் பட்டாபி கல்யாணமான மறுநாள்.

"அது கிடக்கட்டும். நான் லீவில் வந்தபோது ஒரு பார்சல் கொடுத்தனுப்பினாயே அதில் வைத்திருந்த கடிதத்தில் சாந்தா சம்பந்தமாய் என்ன எழுதியிருந்தாய்?" என்று கேட்டேன் நான்.

"இப்போது சொன்னால் என்ன குடி முழுகிப் போகிறது? 'இந்தப் பார்சலைக் கொண்டு வருபவன் அழகான வாலிபனாயிருப்பதைப் பார்த்து சாந்தாவை இவன் தலையில் எப்படியாவது கட்டிவிட முடியுமா என்று யோசனை செய்யாதே. கல்யாணத்தைப்பற்றி அவன் அபிப்பிராயங்களே புரட்சிகரமானவை. அவனுக்கேற்ற பெண்ணைப் பிரம்மா இனிமேல்தான் சிருஷ்டிக்க வேண்டும். சாந்தாவுக்கு மணாளனாகக் கிடைப்பது கடினம்' என்றுதான் எழுதியிருந்தேன்" என்றான் பட்டாபி புன்னகையுடன்.

"ஆமாம்; கல்யாணத்தைப் பற்றிய என் அபிப்பிராயமே புரட்சிகரமானதுதான்!" என்று சொல்லிச் சிரித்தேன்.

நல்ல யோசனை!



பால் கணக்குச் சம்பந்தமாக வழக்கு வந்தபோது, பால் கணக்கு எழுதப்பட்டிருந்த சுவரையே வக்கீல் சாட்சியம் கூற எடுத்துச் செல்கிறார்.

பட்டாபியின் தாயாரும் அக்கடிதத்தை மனதிற்குள்ளாகவே படித்துவிட்டு, "குறும்புக்காரன், வேறே வேலையில்லை அவனுக்கு" என்று மெதுவாகச் சொல்லிப் புன்னகை பூத்தாள்.

அப்புறம் கொஞ்ச நேரம் டில்லி வாழ்க்கையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். நான் அவர்கள் கேள்விகளுக்கு ஏதோ பதில் சொல்லிக் கொண்டிருந்தேனே யொழிய, 'சகஜமாய்ப் பேசிக் கொண்டிருந்த சாந்தா அப்படி நாணமடைந்து ஓடச் செய்யப் பட்டாபி என்ன எழுதியிருப்பான் கடிதத்தில்?' என்று என் உள்ளம் யோசனை செய்தபடியே இருந்தது.

காப்பியையும் பட்டாபியின் தாயாரே கொண்டு வந்து கொடுத்தாள்.

"உங்களை இங்கேயே சாப்பிட்டுவிட்டுக் கூடப் போகச் சொல்வேன். ஆனால் இது வேளை கெட்ட வேளையாயிருக்கிறது. இன்னொருநாள் கண்டிப்பாய் வாருங்கள்" என்றாள் பட்டாபியின் தாயார்.

"ஆகட்டும்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன்.

வீடு திரும்பும்போது சாந்தாவின் நினைவும், அக்கடித நினைவும் மாறி மாறி என் உள்ளத்தில் தோன்றி மறைந்தன. அத்துடன் என் தங்கை கல்யாணத்தைப் பற்றித் திட்டமான ஒரு யோசனையும் உருவாயிற்று.

"மாயவரம் போய்த் திரும்பி வர அரை நாளா? யார் யார் வீட்டுக்குப் போய் வம்பளந்துவிட்டு வருகிறாய்?" என்று கேட்டாள் என் தாயார்.

"பார்சலைக் கொடுத்துவிட்டு உன் பெண்ணுக்கும் ஒரு வரன் தேடிக் கொண்டு வந்தேன்!" என்றேன் என் தங்கை சரஸ்வதியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே.

"தங்கைக்குத் தேடினாயோ? அல்லது உனக்குத்தான் 'அழகான ஒருத்தி'யைத் தேடினாயோ, யாருக்குத் தெரியும்?" என்றாள் சரஸ்வதி வெடுக்கென்று.

"அப்படியும் தான் வைத்துக் கொள்ளேன். அம்மா! பஸ்டு கிளாஸ் வரன் பிடித்துவிட்டேன் சரஸ்வதிக்கு. வரன் எனக்கு நன்றாய்த் தெரிந்தவன். என் கூட டில்லியில் வேலையிலிருப்பவன். அவனை அருகில் வைத்துக்கொண்டே, ஊரெல்லாம் சரஸ்வதிக்கு வரன் தேடியதை நினைக்கும்போது எனக்கே சிரிப்பு வருகிறது" என்றேன் நான்.

"யார் அவன்?" என்று தாயார் கேட்டதற்குப் பதிலாக நண்பன் பட்டாபியைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தேன்.

கடைசியில், "இன்று அவன் வீட்டுக்குத்தான் பார்சலைக் கொடுத்துவிட்டு வரப் போயிருந்தேன். விதந்துவாய்ப் போன அவன் தாயாரும், கல்யாணத்திற்கு இருக்கும் தங்கையும் பட்ட மங்கலத் தெருவிலிருக்கும் தங்கள் சொந்த வீட்டில் இருந்து வருகிறார்கள்" என்றேன்.

"ஓஹோ! நீ போயிருந்த வீட்டில் கல்யாணத்திற்குப் பெண்ணிருக்கிறதா? அதுதான் அண்ணா திரும்பி வர இத்தனை நேரமாகி விட்டது! சரி, அம்மா! உன் கவலையில் பாதிக் கவலை தீர்ந்தாற்போல் வைத்துக் கொள். எப்போ அண்ணா நாங்கள் பெண் பார்க்கக் கிளம்புவது?" என்றெல்லாம் கேலியாகப் பேச ஆரம்பித்தாள் சரஸ்வதி.

அதற்கடுத்தநாள் நல்ல நாளாயிருந்ததால் என் தாயாரும் தங்கையும் பெண் பார்க்கக் கிளம்பினர். நான் வீட்டு விலாசத்தைக் கொடுத்தேனே யன்றிக் கூடப் போகவில்லை.

"அவளை நான் பார்த்து விட்டேன்; எனக்குப் பிடித்திருக்கிறது" என்றேன்.

கடிகாரக் கடையில்!



வாசலில் நிற்பவர்.—ஸார்! மணி என்ன?

கடிகாரரிப்பேர்க்காரர்:—இருங்கள், வெளியே வெய்யலைப் பார்த்துச் சொல்லுகிறேன்!

கடி எழுதுவான். உங்களுடைய ஹாஸ்யக் கதை யொன்றைப் போன வாரங் கூட ஏதோ ஒரு பத்திரிகையில் படித்தேன். நீங்கள் மகா குறும்புக்காரர் என்று அண்ணு எழுதியிருக்கிறுன். அப்படி யொன்றும் தெரியவில்லையே உங்களைப் பார்த்தால்" என்றுள் சாந்தா.

பட்டாபியின் தாயார், "சரிதான்! சமர்த்தாய்ப் பேசி விட்டாய்! வந்தவருக்குத் தாகத்திற்கு வேண்டுமா என்று கூடக் கேட்கத் தெரியாவிட்டாலும், அசட்டுப் பிசட்டென்று பேசத் தெரிந்திருக்கிறது. போய்க் காப்பி போட்டுக் கொண்டுவா!" என்று குறையாகச் சொன்னுள்.

எனக்கு அதைக்கேட்டு என்னவோ போலிருந்தது. சாந்தா அதைக் கேட்டுக் கோபங்கொண்டு உள்ளே போய் விடுவாள் என்று நான் எதிர்பார்த்ததற்கு மாருக அவள், "இருங்கள்; காப்பிக்கு ஏற்பாடு செய்து விட்டு வருகிறேன்" என்று சொல்லியபடி உள்ளே போய் விட்டாள்.

சாந்தா அப்படிச் சகஜமாய்ப் பேசுவதை நான் எப்படி எடுத்துக் கொள்வேனே என்று பயப்பட்டவள் போல, "அந்தக் காலத்தில் எங்களுக்கெல்லாம் யாராவது வேற்று மனிதர்கள் எதிரில்



படுத்திருப்பவர் (தூக்கத்தில் பிதற்றுகிறுர்):—சொப்பன வாழ்வில் மகிழ்ந்து .... சுப்ரமண்ய......... ஸ்வாமீ.........உன்னை மறந்தா......ல் அந்தோ அற்பப் பணப்பே.........ய் பிடித்தே......அறிவிழந்து......

திருடர்கள்:—? ? ? ...... ! ! !......

வரவே பயம்! இப்போது காலம் மாறி விட்டது! ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம் என்று கிளம்பிவிட்டார்கள். அதுவும், படித்த பெண்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்" என்றுள் பட்டாபியின் தாயார். அவள் முகத்தில் லேசாகப் புன்னகை படர்ந்தது.

அவள் மேலும் சொன்னுள்: "இந்தத் தங்கையின் மேல் அவனுக்குப் பிராணன். 'டில்லியில் வீடு கிடைத்தால் உன்னையும் சாந்தாவையும் அழைத்து வைத்துக் கொண்டு விடுவேன். உங்களை விட்டுத் தனியாக இருப்பது எனக்கு என்னவோ போலிருக்கிறது' என்று அடிக்கடி எழுதுகிறுன். ஆனல் என் கவலையெல்லாம் சாந்தாவை யாராவது நல்ல பையனுய்ப் பார்த்துக் கொடுத்து விட்டு, பட்டாபிக்கும் கல்யாணம் செய்துவிட வேண்டுமென்பதுதான்."

கல்யாணப்பேச்சு அவள் முகத்தில் வேதனை உணர்ச்சியை ஏற்படுத்தியது. அதிலிருந்து அந்த நினைவு எவ்வளவு தூரம் அவள் உள்ளத்தை வாட்டி வருகிறது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

நான் மேலே பேசுவதொன்றும் அறியாது மௌனமாயிருந்தபோது, 'ஹூம்... நாம் அவசரப் பட்டால் முடியுமா? எதற்கும் வேளையும் போதும் வரவேண்டும்!' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள்.

"ஸ்டவ்'வை மூட்டிக் காப்பிக்குத் தண்ணீர் வைத்து விட்டேன். ஆச்சு, ஐந்து நிமிஷத்தில் காப்பி 'ரெடி'யாகி விடும்" என்று சொல்லியபடியே வந்த சாந்தா, அம்மா கையில் வைத்துக் கொண்டிருந்த பார்சலைப் பார்த்ததும், "அம்மா! அந்தப் பார்சலைக் கொண்டா. அண்ணு என்ன அனுப்பி யிருக்கிறுனென்று பார்ப்போம்" என்றுள்.

அதைப் பிரிப்பது அவ்வளவு கஷ்டமாயில்லை. அதில் என்ன சாமான் இருந்தது என்பது கூட இருந்து 'பாக்' செய்த எனக்குத் தெரிந்தது. ஆனல் வைத்திருந்த கடிதத்தில் பட்டாபி என்ன எழுதி யிருந்தான் என்பதுதான் எனக்குத் தெரியாம லிருந்தது.

"அம்மா! அண்ணு கடுதாசிகூட ஒன்று வைத்திருக்கிறுன்" என்று சொல்லியபடியே அதைக் கையிலெடுத்துப் பரபரவென்று தனக்குள்ளாகவே வாசிக்க ஆரம்பித்த சாந்தா முழுவதும் படிப்பதற்குள்ளேயே அதைத் தாயாரின் கையில் கொடுத்துவிட்டு ஒன்றும் சொல்லாமல் உள்ளே ஓடிவிட்டாள். அவள் முகம் 'குப்'பென்று நாணத்தால் சிவந்ததை நான் கவனிக்காமல் இல்லை.

பேசத் தெரிந்தவள்

டி. ஜி. ஸ்ரீநிவாஸன்

எனக்குப் பட்ட மங்கலத் தெருவில் அந்த வீட்டைத் தேடிக் கண்டு பிடிப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது. காரணம் டில்லியிலிருந்து நான் புறப்பட்டபோது நண்பன் பட்டாபி குறித்துக் கொடுத்த விலாசத்தை நான் கெட்டுப் போக்கியிருந்ததுதான். கடைசியில், ஒருவிதமாய் அவன் சொன்ன சில அடையாளங்களை நினைவுக்குக் கொண்டு வந்து அவ்வீட்டைக் கண்டு பிடித்து உள்ளே நுழைந்தேன்.

கூடத்திலிருந்து யாரோ மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. மற்றப்படி அவ் வீட்டில் எங்கும் நிசப்தம் நிலவியது.

சற்றுத் தயங்கி, "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டேன் நான்.

"யார்?" என்று கேட்டபடி வந்தாள் ஒரு பெண். என்னைக் கண்டதும், அவள் "என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

"இது பட்டாபி ராமன் வீடுதானே?" என்று கேட்டேன்.

"ஆமாம்; ஆனால் அவர் இங்கேயில்லை. டில்லியில் வேலையா யிருக்கிறார். நீங்கள் அவரை அவசியம் பார்க்க வேண்டுமென்றால் அந்த ஊருக்குத்தான் போக வேண்டும்" என்று சொல்லிக் கல, கல வென்று சிரித்தாள் அவள்.

நான் அவளுக்குப் பதில் சொல்ல வாயெடுத்தபோது, "யார் சாந்தா?" என்று கேட்டபடியே வந்தாள் நடுத்தர வயதுள்ள ஒரு மாது. அவள் பட்டாபியின் தாயாராய்த் தானிருக்க வேண்டும் என்று ஊகித்தேன்.



"டில்லியிலிருந்து வருகிறேன். பட்டாபி இந்த பார்ஸலைத் தங்களிடம் சேர்ப்பித்து விடச் சொன்னான்" என்று சொல்லி விட்டுப் பையில் கொண்டு போயிருந்த பார்ஸலை அவளிடம் கொடுத்தேன்.

"ஓ! நீங்கள் டில்லியிலிருந்துதான் வருகிறீர்களா? பட்டாபி அண்ணா சௌக்யமாயிருக்கிறானா? எனக்கேதாவது கடுதாசி கொடுத்தானா?" என்றெல்லாம் சரமாரியாய்க் கேள்விகளைப் பொழிந்தாள் சாந்தா என்றழைக்கப்பட்ட அந்தப் பெண்.

"நீ கொஞ்சம் பேசாமலிரு, சாந்தா!" என்று சற்று அதட்டினாற் போலச் சொல்லிவிட்டு, "உங்களுக்கும் இந்த ஊர்தானா? எந்தத் தெருவில் குடியிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் பட்டாபியின் தாயார்.

"எனக்குச் சிவராமபுரம்... இவ்வூரிலும் சில உறவினர்கள் இருக்கிறார்கள்" என்றேன் நான்.

"பட்டாபி உடம்பொன்றும் இல்லாமலிருக்கிறானா? அவன் ஏன் லீவில் வரவில்லை! எப்பொழுது கேட்டெழுதினாலும் 'வேலை அதிகம்; லீவ் கிடைக்காது' என்று எழுதி விடுகிறானே! அப்படியா அங்கு அதிக வேலையிருக்கிறது?" என்று கேட்ட பட்டாபியின் தாயார், "ஏன் நின்றுகொண்டேயிருக்கிறீர்கள்? இப்படி உட்காருங்கள்" என்று நாற்காலியொன்றைச் சுட்டிக் காட்டினாள்.

"தற்சமயம் எல்லோருக்கும் வேலை அதிகம்தான். எனக்குக்கூட லீவ் கிடைப்பது சிரமமாய்த் தானிருந்தது. என் தங்கை கல்யாணத்தை எப்படியும் இந்த வருஷம் நடத்திவிட வேண்டுமென்றிருந்ததால் எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி லீவ் வாங்கினேன்" என்று சொன்னேன் நான்.

அதைக்கேட்ட பட்டாபியின் தாயார், சாந்தாவின் முகத்தைப் பார்த்து விட்டுப் பெருமூச்செறிந்தாள். அதன் அர்த்தம் அப்போது எனக்கு விளங்கவில்லை.

பின்னர் தனக்குத் தானே சொல்லிக் கொள்வது போல் "உங்கள் பெயரைக் கூடக் கேட்காமல் ஏதோ பேசிக் கொண்டேயிருக்கிறேனே" என்றாள் பட்டாபியின் தாயார்.

என் பெயரைச் சொன்னதும், "ஓ! நீங்கள்தானா அந்தக் கதை எழுதும் ஆசாமி! அண்ணா உங்களைப் பற்றி அடிக்

"வரும் அப்பா, வரும். கவலைப்படாதே; உடம்பைப் பார்த்துக் கொள்" என்று சொல்லிவிட்டு வந்தேன்.

பிறகு என் வேலையில் அவன் நினைவே இல்லாமல் போய் விட்டது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு காலையில் வந்த தபால்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பாடா, கடைசியில் 'அந்தப் பணம்' வந்தே விட்டது! முதலில் 'புரட்சி'க்குத்தான் சொல்ல வேண்டும்! இதைக் கேட்டதும் அவன் என்னமாய்க் குதிப்பான்!

பியூனைக் கூப்பிட்டு ரிக்ஷா கொண்டு வரச்சொல்லி ஆஸ்பத்திரிக்குப் போனேன். உள்ளே நுழைந்ததும் வாசலில் நின்ற ஒரு நர்ஸைப் பார்த்து, "மிஸ்டர் புரட்சி... இல்லை, தர்மலிங்கம் எங்கே இருக்கிறார்?" என்று கேட்டேன்.

அவன் பேசவில்லை. மௌனமாக ஆப்பரேஷன் அறைப் பக்கம் கையைக் காட்டினாள். அப்போதுதான் அவனுக்கு அன்று ஆப்பரேஷன் என்பது என் நினைவுக்கு வந்தது. நேராக அங்கே போனேன். ஆப்பரேஷன் அப்போதுதான் முடிந்திருந்தது. "மறுபடி அவன் நினைவு அவனுக்கு வர ஒரு மணி நேரமாவது ஆகும்" என்றார் டாக்டர். "ரொம்பவும் பலஹீனமான ஆசாமி! தாங்குகிறதுக்கு சக்தியில்லை. அதனால்தான் நேரமாகிறது!" என்றார் உதவி டாக்டர்.

அதற்குள் எனக்கு நேரமாகி விடவே நான் திரும்பி விட்டேன்.

சுமார் இரண்டு மணிக்குப் பியூன் உள்ளே வந்து தயங்கி நின்றான்.

"என்னடா?" என்றேன்.

"நம்ப புரட்சி, சார்..." என்று இழுத்தான்.

"தர்மலிங்கமா, என்ன அவனுக்கு?" என்று கேட்டேன்.

"உம்...போயிட்டாருங்க! பெண்டாட்டி, பிள்ளையைப் பார்க்கப் பரிதாபமா இருக்குங்க. இப்போ நான் ஆஸ்பத்திரியிலேருந்து தான் வரேன்......"

என்னால் பேச முடியவில்லை. எத்தனையோ நாட்களாக அவன் எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த அந்தப் பணம் இதோ வந்திருக்கிறது. ஆனால் அவன் இல்லை.

பகவானே, பூலோக சுவர்க்கத்தைத் தேடி இங்கு வந்த அவனுக்கு உன் சுவர்க்கத்தையே கொடுத்து விட்டாயா? அவன் புரட்சிக் காரன், சுவாமி! அவனுக்கு நீயாவது அங்கே சாந்தியைக் கொடு.

காலக்ஷேபம்

நியாயம்!

பிள்ளை:—அம்மா, சல்லடை வேண்டியிருக்கும் போதெல்லாம் அடுத்த வீட்டில் வாங்கி வருகிறாயே! நமக்கு இன்றைக்கு ஒரு சல்லடை வாங்கிக் கொண்டு வந்து விடட்டுமா?

அம்மா:— வேண்டாம், வேண்டாம்! அப்புறம் இரவல் கொடுக்கத்தான் சரியாயிருக்கும்!

★

எப்படி?

ஒருவர் தம் நண்பர் வீட்டுக் கல்யாணத்துக்குப் போயிருந்தார். சாப்பாடு முடிவதற்கு இரவு வெகுநேரமாகி விட்டது. மழையும் பிடித்துக் கொண்டது. நண்பர் விருந்தாளியிடம், "மழையாக இருக்கிறது. நீங்கள் வீட்டுக்குப் போக வேண்டாம். இங்கேயே இரவு தங்கி விடுங்கள்!" என்றார்.

சற்று நேரத்துக்கெல்லாம் விருந்தாளி எங்கேயோ போய்விட்டுச் சொட்டச் சொட்ட நனைந்து திரும்பி வந்தார்.

"ஏன், எங்கே போயிருந்தீர்கள்?" என்று கேட்டார் நண்பர்.

"இராத்திரி இங்கேயே தங்கச் சொன்னீர்களல்லவா? வீட்டுக்குப் போய்க் கம்பளிப் போர்வையை எடுத்துக் கொண்டு வந்தேன்!" என்றார் விருந்தாளி.

★

வாக்குறுதி!

"இந்த மோட்டார் காரை எனக்கு நீ விற்கும்போது என்ன உடைந்து போனாலும் போட்டுத் தருவதாகச் சொன்னாயல்லவா?"

"ஆமாம், என்ன உடைந்து விட்டது?"

"என் பற்கள் நாலும், என் முழங்கால்களும் உடைந்து விட்டன!"

★

கருணை!

வக்கீல் (நீதிபதியிடம்):—குற்றவாளியிடம் தயவு செய்து கொஞ்சம் கருணை காட்ட வேண்டும்.

நீதிபதி:—ஏன்? இதுதான் இவர் முதல் தடவையாகச் செய்யும் குற்றமா?

வக்கீல்:—இல்லை, இல்லை! இந்த வழக்குத்தான் என் முதல் வழக்கு!

வேலையோ முடியவேண்டும். 'ஈஸ்வரா!' என்று உட்கார்ந்து எழுதிக் கொண்டிருப்பான். ஆனால் வாய் மட்டும் முனகிக் கொண்டேயிருக்கும்.

"சே, என்ன பிழைப்பு! ஆபீஸிலேகூட எட்டு மணி வேலை கணக்கா முடியும். இங்கே......போனாப் போறது செய்யலாம். 'ஓவர்டைம்' அலவன்ஸாவது கொடுக்கிறாங்களா, அதுவும் கிடையாது. இங்கே இருக்கிற துரைகள் கேட்கக்கூட மாட்டாங்கள். நான்தான் சாகிறேன் வயிற்றுக்கில்லாமல்!"

பக்கத்திலிருப்பவர்கள் அவனைப் பார்த்துச் சிரிப்பார்கள். அவன் எரிந்து விழுவான். "உங்களைப் போன்ற ஆசாமிகளால்தான் மேலேயிருக்கிறவனுங்க இப்படி நடத்தறானுங்க. நீங்க மட்டும் புரட்சி செய்து......"

அதற்குள் நான், "இதோ பார், தம்பி தர்மலிங்கம்! சும்மா இரு. ஆபீஸ் நேரத்திலே கூச்சல் போடாதே!" என்று அடக்குவேன். புரட்சி அடங்கிவிடும்.

மேலே மின்சார விசிறி சுற்றிக் கொண்டேயிருக்கும்; விளக்கு எரிந்து கொண்டேயிருக்கும்.

* * *

'புரட்சி' ஒரு நாள் என்னிடம் வந்து தலையைச் சொறிந்து கொண்டு நின்றான்.

"சார், நான் வைத்தியம் செய்து கொள்ளப் போகிறேன். வயிற்றிலே என்னமோ ஆப்பரேஷன் செய்யணும் என்று டாக்டர் சொல்லுகிறார்!" என்றான்.

எனக்கு அது வியப்பாக இருந்தது.


ஆப்பரேஷன் செய்வதற்கு அவன் வயிற்றில் என்ன இருக்கப் போகிறது? வேளா வேளைக்கு உணவு கூட இல்லாமல் காய்ந்து கிடந்த வயிறு; டீயும் வெந்நீருமே நிரம்பக் குடித்த வயிறு; சுருங்கிப்போய்ப் புரட்சி செய்து கொண்டிருந்த வயிறு!

அதன் பிறகு நான்கைந்து நாட்களாகி விட்டன. ஒரு நாள் அவன் படுத்திருந்த சர்க்கார் ஆஸ்பத்திரிப் பக்கம் போயிருந்தேன். அப்படியே அவனையும் பார்க்கலாமென உள்ளே நுழைந்தேன். என்னைக் கண்டதும் அவன் கேட்ட முதல் கேள்வி இதுதான்:

"என் சார்! அந்தப் பணம் வந்து விட்டதா?"

எனக்கு முதலில் புரியவில்லை. "எந்தப் பணம்?" என்று கேட்டேன்.

"அதுதான் சார், விட்டுப்போன பஞ்சப் படி. இப்படி வந்து இங்கே கிடக்கிறேன். செலவு ஏராளமாக ஆகிறது. அது வந்தால் சௌகரியமாயிருக்கும்......"



கிறவர்கள் இல்லை. ஒரு லிங்கம் மாமனார் வீட்டில் இருக்கிறான். இரண்டு பேர் உள்ளூர்க்காரர்கள். அவர்களுடைய குடும்பங்கள் கொஞ்சம் பசையுள்ள குடும்பங்கள். ஆகவே அவர்களுக்கு வீட்டுக் கஷ்டம் தெரியவே தெரியாது. நான் பிரம்மசாரிக் கட்டை. என்னமோ பொழுது போக்குக்கு வேலை செய்கிறவன். பணத்தைப் பற்றிய கவலை இல்லை. போதாக் குறைக்குத் தர்மலிங்கம் சொல்வது போல 'இந்தப் பைத்தியக்காரப் பத்திரிகைக்காரர்கள் வேறு ஏதாவது அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள்!'

எஞ்சி நிற்பவன் அவன்தான். புரட்சி செய்தால் பணம் கிடைக்கும். தலைமைக் காரியாலயத்திற்கு மனு எழுத வேண்டும் என்று என்னவெல்லாமோ முனகிக்கொண்டிருப்பான். மற்றவர்களோ அதை லட்சியம் செய்யாமல் அப்பால் போய்விடுவார்கள். தேவை ஏற்பட்டால்தானே சார், புரட்சியெல்லாம்?

* * *

ஒரு நாள் தர்மலிங்கம் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தான். கடைசியில் ஒரு வழியாகக் கொஞ்சம் பஞ்சப்படி அதிகரித்திருப்பதாகச் சொன்னான். எத்தனை ஆசையோடு அந்தச் செய்தியை அவன் வரவேற்றான், தெரியுமா? ஆனால் ஒரு குறை. அந்தப் பஞ்சப்படியைக் கொடுப்பதாக முடிவு செய்திருந்தாலும், மொத்தமாக எல்லாக் கிளைகளுக்கும் தனித் தனி எவ்வளவு ஆகிறது என்பதைத் தெரிந்து கொண்ட பிறகுதான் அதைக் கொடுக்கலாமென மேலேயிருந்து கடிதம் வந்திருந்தது. உடனே அவன் கையில் பணம் கிடைக்கவில்லை. இருந்தாலும் அவன் அதை நம்பி வெங்காயக் கடை முதல் செருப்புக் கடை வரை கடன் வாங்கிவிட்டான். வீட்டுக்கு—மனைவிக்குத்தான்—ஒரு பட்டுச் சேலை எடுத்தான். "ஆறு மாசத்துப் பணம் சேர்த்துத் தரப் போறாங்க. இப்போ இல்லாட்டி வேறே எப்போ சார், நம்ம வாங்கப்



போறோம்?" என்று தன் செலவுக்குச் சப்பைக் கட்டுக் கட்டினான்.

அவன் துரதிர்ஷ்டம் என்று தான் நினைக்கிறேன். என்ன காரணத்தாலோ இரண்டு மாதங்களாகியும் அந்த விட்டுப்போன ஆறுமாதப் பஞ்சப்படி வந்துசேரவில்லை. தினம் காலையில் தபாலைப் பார்க்கும்போதெல்லாம் பக்கத்தில் வந்து நிற்பான். பிறகு பரிதாபமாக, "என் சார், அந்தப்பணம்..." என்று இழுப்பான். நான் "வரவில்லையே, அப்பா!" என்று சொல்லுவேன்.

"உம்......" என்று பெருமூச்சு விட்டுவிட்டு, அவன் அப்பால் செல்வான். வெங்காயக் கடை வேணு முதலி முதற்கொண்டு செருப்புக் கடை செக்கிரு வரைக்கும் தர்மலிங்கத்தின் இந்தப் பஞ்சப்படியை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

கொஞ்ச நாட்களாயிற்று. தர்மலிங்கத்துக்கு நம்பிக்கை போய்விட்டது. மறுபடியும் அவன் 'புரட்சி' செய்ய ஆரம்பித்துவிட்டான். "அதிகமா வேண்டாமப்பா, கொடுக்கிறேன்னு சொன்னதைக் கூடவா கொடுக்கக் கூடாது? இன்னும் கணக்குப் போடறாங்கள்! சும்மா கண்ணைத் துடைக்கிறானுக. மேலே இருக்கிற முதலாளி வர்க்கம் அமுக்கியிருக்கும். அவ்வளவுதான்! எல்லாருமா சேர்ந்து கேட்டால்தானே? அழுத பிள்ளைதான் பால் குடிக்கும். இங்கே இருக்கிற மகாராசன்களுக்குப் பாலே வேண்டியதில்லே......"—இதைச் சொல்லி விட்டுப் பக்கத்திலிருக்கிறவர்களை ஒரு தினுசாகப் பார்ப்பான். தன் புரட்சி உபதேசங்கள் ஏதாவது பயன் தருகின்றனவா என்று கவனிப்பான். உம்... ...நடக்காது! இவையெல்லாம் பால் வேண்டாத குழந்தைகள். புட்டிப் பால்தான் அவைகளுக்கு ஏராளமாய்க் கிடைக்கிறதே!

ஆபீஸ் வேலை கடுமையாகிச் சற்று அதிக நேரம் வேலை செய்ய நேரிட்டால் மற்றவர்கள் ஹோட்டலுக்குப் போய் ஒரு 'அடி' அடித்துவிட்டு வந்து செய்வார்கள். அவனுக்கோ 'பால்' காலியாயிருக்கும்;



பாவம், தர்மலிங்கம்!

துஷ்யந்தன்

புதுச்சேரிக்கு அவன் வந்தபோது அது பூலோக சுவர்க்கமாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு வந்தானோ, என்னவோ? அவன் ஏமாற்றம் அவனைப் பெரிய புரட்சிக்காரனாக மாற்றிவிட்டது. அதுதான் அவன் அடிக்கடி 'புரட்சி, புரட்சி' என்று ஜபம் செய்துகொண்டிருந்தான். வாயிலே ஜபம் இருந்தாலும் அவனைப் பார்த்தால் பரிதாபமாய் இருக்கும். ஒட்டிய கன்னம், உலர்ந்த உதடு, குழி விழுந்த கண்கள்—இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து வைத்தால் அதுதான் தர்மலிங்கத்தின் திருமுகம்.

எங்கள் பாங்கியிலேதான் அவனும் இருந்தான். எங்கேயோ இதற்கு முன்னால் ஒரு மலாயில் இருந்தானாம். புதுச்சேரி நல்ல இடம் என்று யாரோ சொன்னதைக் கேட்டு இங்கு வந்தான். நல்ல உழைப்பாளி. அரை கப் டீயைக் குடித்துவிட்டு அலுக்காமல் வேலை செய்வான். ஆனால் அவனுக்கு என்னவோ ஒரு பெரிய குறை இருந்து வந்தது. அதாவது, அவனுக்குச் சம்பளம் போதாது என்று முறையிட்டுக் கொண்டே இருப்பான். என்னிடம் சொல்வான்; தெருவிலே எலுமிச்சம்பழம் வியாபாரம் செய்கிறவனிடம் சொல்வான். இன்னும் பாங்கிக்கு வரும் வைர வியாபாரிகளிடமும் சொல்லி அழுவான்.

அப்படி ஒன்றும் அவன் குறைவாக வாங்கவில்லை. ஆனால் புதுச்சேரியின் விலைவாசிகளுக்கும் அவனுக்குக் கிடைத்த சம்பளத்துக்கும் சரிக்கட்டி வரவில்லை. அவ்வளவுதான்!

வெளியூரிலிருந்து வருகிறவர்கள், "என் சார், உங்களுக்கென்ன குறைச்சல்? தெருவெல்லாம் வைரம்; கடையெல்லாம் பாரிஸ் சென்ட்; ஜோரான சில்க்; முதல்தரமான சீமைச் சாராயம்........" என்று அவன் வயிற்றெரிச்சலைக்கொட்டிக்கொள்வார்கள்.


அப்போது பார்க்க வேண்டும் அவனை! சீறி விழுவான். "வாழ்க பிரான்ஸ் தேசம்! அதுமட்டும் வாழ்க! ஏழை மக்கள் அடியோடு ஒழிக! — இதுதான் இங்கே நடக்கிறதே! உங்கள் வைரமும் சில்க்கும் ஏழைகளின் வயிற்றை நிரப்பாது சார், அது காஞ்சு கிடக்கு. கைத்தொழில் நசித்துப் போச்சு. சுற்றுப்புறக் கிராமங்களிலுள்ள அத்தனை நெசவுக்காரரும் வெளியே அகதிகளாய்ப் போய்விட்டார்கள், தெரியுமா? சே, சே! ரொம்ப மோசம்! இந்த எழவுக்கு எங்கள் ஹெட் ஆபீஸ்காரனுங்க பழைய சம்பளத்திலேயே வேலை பாருடா என்கிறானுங்க. உப்பும் மிளகாயும், பருப்பும் வெங்காயமும் இங்கே விற்கிற விலை யாருக்குத் தெரிகிறது? அரிசியாம், அரிசி!"

இப்படி அவன் கூக்குரல் போடுவதைக் கேட்டு வீட்டுப் பக்கத்திலிருக்கும் ஜயசிங்கம் மெதுவாக, "அட. எம்பா! சத்தம் போடாதே! சும்மா இரு!" என்பான்.

தர்மலிங்கம் அப்போதுதான் மறுபடியும் புரட்சிக்காரனாக மாறுவான். "உன்னைப் போல் இங்கே இருக்கிறவங்கதான் காரியத்தைக் கெடுக்கிறீங்க! புரட்சி செய்யணும், தம்பி! அப்போதுதான் நிலைமை மாறும். உம், உனக்கென்ன ஜம்னு மாமனார் வீட்டுச் சோறு! சொகுசாய் வந்து இங்கே உட்கார்ந்திட்டே. வாங்கற சம்பளம் காப்பி செலவுக்குத்தானே? என்னைப் போல் சம்பளத்தை மட்டும் வைத்துக் கொண்டு பெண்டாட்டி பிள்ளையோடே குடித்தனம் பண்ணினா தெரியும்."

இதையெல்லாம் கேட்டு எனக்கு அவன் மேல் கோபம் உண்டாவதில்லை. இரக்கம்தான் தோன்றும். புரட்சிக்கு அடிப்படை தேவைதானே? பாவம், அவன் தேவைக்கு எல்லையேயில்லை. ஆனால், குடும்பம் மிகப் பெரியது. செலவுக்கு அவன் எங்கேதான் போவான்?

அவன் சொல்வது போல அவன் கூட இருந்தவர்கள் எல்லாருமே ஒரு விதத்தில் சம்பளத்தை நம்பி வாழ்க்கையை நடத்து




நளினி கிப்ஸ் உபயோகிக்கிறாள்—அவள் பற்கள் வெண்மையாகவும் ஒழுங்காகவும் இருக்கின்றன.



நளினி கிப்ஸ் டென்டிபிரிஸை விரும்புகிறாள். அவள் சிறுவயதிலிருந்தே அதை உபயோகித்து வருகிறாள்.



காலையிலும் மாலையிலும் எல்லா பற்களையும் கிப்ஸினால் தேய்க்கிறாள். மேலும் கீழுமாக, ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கமாக அல்ல.



அவள் பற்கள் பிரகாசமாகவும் வெண்மையாகவும் ஒழுங்காகவும் இருக்கின்றன. அது கிப்ஸ் டென்டிபிரிஸினால் தான்!

நீங்களும் கிப்ஸ் உபயோகிக்கிறீர்களா ?

சாம்பல், கரி, இவைபோன்ற இதர கரகரப்பான பல்துலக்கும் வஸ்துக்கள் பற்களுக்கும் ஈறுகளுக்கும் நாசம் விளைவிக்கக்கூடும். நுரை போல் மிருதுவான கிப்ஸ் டென்டிபிரிஸ் பற்களுக்கோ அல்லது ஈறுகளின் மிருதுவான பாகங்களுக்கோ ஒருபொழுதும் கெடுதல் செய்வதில்லை. கிப்ஸ் நீங்கள் எப்பொழுதும் ஒழுங்கான பற்களைப்பெற உதவுகிறது. வாய்க்கும் சுவாசத்திற்கும் புதுமணத்தை அளிக்கின்றது. மேலும் அதன் 3 கவர்ச்சிகரமான வர்ணங்களிலுள்ள டப்பிகளில் எதை தேர்ந்தெடுத்தாலும் உபயோகிக்க மிகவும் சௌகரியமாயிருக்கும்.



கிப்ஸ் டென்டிபிரிஸ்

ஒழுங்கான முறையில் பற்களை வெண்மையாக சுத்தம் செய்கிறது

விலையோ சொற்பம்—பலநாட்கள் நீடித்துவரும்

GD. 30-172 TM

மனைவியைத் தாறுமாறாகப் பேசி ஏசினார். வழக்கம்போல் அந்த அம்மாள் அதை லட்சியம் செய்யவில்லை. குண்டு ராவுக்கு மேலும் கோபம் அதிகரித்தது.

"கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் உனக்கு என்ன அத்தனை திமிர்? பிறந்த வீட்டுச் சொத்து இருக்கும் அகம்பாவமா?" என்று கேட்டுக் கொண்டே போய்ச் சீதம்மாளின் கன்னத்திலே அறைந்து விட்டார். அந்த அம்மாள் அழுது கொண்டே போய் மூலையில் படுத்து விட்டாள்.

கோபத்துடன் 'விர்' ரென்று வெளியே சென்று விட்ட குண்டுராவ் அன்று பகல் போஜனம், சாயந்திரம் டிபன் எல்லாவற்றையும் உள்ளூர் ஓட்டலிலே முடித்துக் கொண்டார்.

அஸ்தமித்து ஒரு மணி நேரம் ஆனதும் குண்டுராவுக்குக் கோபம் சற்றுத் தணிந்தது. இராப் பசியும் எடுத்தது. வீட்டுக்குப் போய்ப் பார்க்கலாம் என்று வீட்டுக்குப் போனார்.


வீட்டு வாசலை நெருங்கியபோது வாசற் கதவு சாத்தியிருந்தது. கதவைத் தட்டினார். உள்ளேயிருந்து குரல் இல்லை. விளக்கு வெளிச்சமும் காணோம். ராவுக்குச் சற்றுக் கவலை தட்டியது. மேலும் கதவைப் பலமாகத் தட்டி இரைந்து கூப்பிட்டார். பதிலே இல்லை. குண்டுராவின் கவலை அதிகரித்தது. சீதம்மாள் ரோஷம் பொறுக்காமல் பெண்புத்தி காரணமாக ஏதாவது விபரீதமாகச் செய்து கொண்டு விட்டாளோ?

பின்னும் இருமுறை கதவைத் தட்டிக் கூப்பிட்டுப் பார்த்தார். ஒருவேளை தன்னுடைய சொந்த வீடு என்ற கர்வத்தால் கதவைத் திறக்காமல் தன்னை அவமானப் படுத்துகிறாளோ என்று எண்ணினார். பல சந்தேகங்களும், சங்கடங்களும், குழப்பங்களும், பசியும் சேர்ந்து அவரை வாட்டி எடுத்தன.

எதற்கும் அடுத்த வீட்டில் விசாரிப்போம் என்று போய் விசாரித்தார்.

அடுத்த வீட்டுக்காரர் ஓடி வந்து, "த்ஸொ, த்ஸொ! மறந்தே போய் விட்டேன், ஸார்! உங்க வீட்டு அம்மாளும் என் சம்சாரமும் ஒரு மணி நேரத்துக்கு முந்திதான் கோயிலுக்குப் போனார்கள். கோயிலில் இன்று கருடவாகன உற்சவமாம். இரவு இராமாயண கதா காலட்சேபமாம். அதற்காகப் போயிருக்கிறார்கள். வருவதற்கு நேரமாகும் என்று சொல்லி உங்கள் வீட்டுச் சாவியை என்னிடம் கொடுத்துவிட்டுத் தாங்கள் வந்தால் கொடுக்கும்படி சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். சமையலறையில் ஒரு தட்டிலே பலகாரம் செய்து மூடி வைத்திருக்கிறதாம். உங்களை எடுத்துச் சாப்பிடச் சொன்னார்கள்" என்று சொல்லிச் சாவிக் கொத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்.

அன்று ஹனுமான் சீதாதேவியிடமிருந்து கணையாழியுடன் திரும்பி வந்து நல்ல சேதி சொன்னபோது, ராமருடைய முகத்தில் ஏற்பட்ட பிரகாசத்தைக் காட்டிலும் குண்டுராவின் முகம் அடுத்த வீட்டுக்காரர் சாவிக் கொத்தைக் கொடுத்தபோது பன்மடங்கு ஏற்பட்டது.



"அடடா! மனைவியைப்பற்றி இதற்குள் என்னவெல்லாம் எண்ணி விட்டேன்!" என்று தம்முடைய அசட்டுத்தனத்தை எண்ணிக் கொண்டே கதவண்டை ஓடிப்போய்ப் பார்த்தார். எதிரில் தெரிந்த தாழ்ப்பாள் திறந்தே கிடந்தது. ஆனால் தலைக்குமேலே இன்னொரு தாழ்ப்பாள் இருந்தது. வாசல் முகட்டோடு சேர்த்து நாதாங்கியை மாட்டி அதில் ஒரு பூட்டும் போடப்பட்டிருந்தது. தலைக்கு மேலே பார்வை செல்லாத இடத்தில் பூட்டி வைத்திருந்ததைக் குண்டுராவ் கவனிக்காததால் இத்தனை அனர்த்தம் ஏற்பட்டது!

குண்டுராவ் கோபத்தில் ஒரு அடி போட்டு விட்டால் அதைப் பிரமாதப் படுத்தி அவர் மனைவி வழக்கமில்லாத வழக்கமாய்க் கோபித்துக் கொண்டு விடுவாளா, என்ன?

குண்டுராவின் கோபம்

எம்.எஸ்.வி



குண்டுராவ் சற்று முன் கோபக்காரர். எடுத்ததற் கெல்லாம் அவர் தம்முடைய மனைவி மீது சீறி விழுவார். குண்டுராவின் தர்மபத்தினி சீதம்மாள் ராவின் கோபத்தை அவ்வளவாக லட்சியம் செய்வது கிடையாது. அடிக்கடி அவருக்கு முன் கோபம் வருவதும், தாறுமாறாகப் பேசுவதும், பின்னால் கோபம் தணிந்து விடுவதும் சீதம்மாளின் முப்பது வருஷ வாழ்க்கையில் அனுபவித்து அனுபவித்துச் சலித்துப்போன விஷயம். எனவே, ராவுஜியின் கோபத்தை அந்த அம்மாள் அவ்வளவாகப் பொருட் படுத்துவது கிடையாது. அதற்காகக் கவலைப்படுவதும் கிடையாது. ராவுஜிக்கு அதுவே ஒரு பெரிய கோபம். தன்னைத் தாலி கட்டிய மனைவியே லட்சியம் செய்யவில்லை என்றால் அவருக்குக் கோபம் வருமா, வராதா?

குண்டுராவ் ரிடயர்ட் பென்ஷன்தார். நீண்ட காலம் ரயில்வே இலாகாவில் உத்தியோகம் பார்த்து இப்போது 'ரிடயர்ட்' வாழ்க்கை நடத்துகிறார். அவர் மனைவிக்கு ஸ்திரீதனமாக வந்த சொத்து குண்டு ராவ் சம்பாதித்ததைக் காட்டிலும் அதிகம் இருந்தது. சென்னைக்கு அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் அந்த அம்மாளுக்கு ஒரு வீடும், கொஞ்சம் நிலபுலன்களும் இருந்தன. குண்டுராவும் அந்த அம்மாளும் அந்த வீட்டில்தான் வசித்து வந்தார்கள். குழந்தை குட்டிகள் என்று ஒரு உபத்திரவமும் கிடையாது.

மனைவிக்குப் பிறந்தகத்துச் சொத்து கொஞ்சம் இருக்கக்கொண்டுதான் தன்னை அவள் அலட்சியம் செய்கிறாள் என்பது ராவுஜியின் அந்தரங்க அபிப்பிராயம்.

குண்டுராவ் சற்று மெலிந்த தேகம். பிறக்கும் போதே சோப்ளாங்கியாகப் பிறந்ததால், பெயராவது சற்றுப் பலமாக இருக்கட்டும் என்று எண்ணி அவருடைய பெற்றோர் குண்டுராவ் என்று பெயரிட்டு அழைத்தார்கள்.

* * *

ஒரு நாள் காலை குண்டுராவ் பஞ்சபாத்திரமும் உத்தரணியுமாக ஸந்தியாவந்தனத்தில் ஈடுபட்டிருந்தார். சீதம்மாள் காலைக் காப்பியைப் பத்து நிமிஷம் முன்னதாகவே தயாரித்து விட்டாள்.

ஜபத்தை முடித்துக் கொண்டு குண்டுராவ் காப்பியைக் கையாலே எடுத்த போது அது ஆறிப் போயிருந்தது. அவ்வளவுதான்; குண்டுராவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.



வேதனைப்படுகிறன். அப்போது திடீரென்று அவன் மனம் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுகிறது. "நான் யார்? குழந்தை யார்? நான் எதற்காகக் கவலைப்படவேண்டும்?" என்று யோசிக்கிறன். அவன் இதயத்தில் அமைதி நிலவுகிறது. குழந்தையைப் பற்றி அவன் கவலைப்படவே இல்லை. ஆப்பரேஷன் வெற்றிகரமாக நடந்து குழந்தையும் பிழைத்துக் கொள்கிறது. டாக்டர் வெளியே வந்து ஜகந்நாதனிடம் இதைக் கூறியபோது அவனுக்கு மகிழ்ச்சியோ வருத்தமோ எதுவும் ஏற்படவில்லை. எறக்குறைய ஒரு பழுத்து முதிர்ந்த வேதாந்தியாகி விட்டான். 'தெய்வ சாபம்' என்ற கதை இதைச் சித்திரிக்கிறது. இதைப்போலவே இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு கதையும் சிந்தனைக்கு விருந்தாகவும் படிப்பதற்கு ரசமாகவும் அமைந்திருக்கிறது. ஆசிரியர்: பி. வி. சப்ரமணியன்; விலாசம்: 40 F. செங்குரெட்டி ரோடு, எழும்பூர், சென்னை; விலை ரூ. 1.

Guide Book on Dancing

முதன் முதலில் நடனம் ஆடியவர் நடராஜப் பெருமான்தான். அவர் இன்றும் ஆடிக்கொண்டுதான் இருக்கிறர்.

'தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயிர் தோறும் பயின்று'

கொண்டுதான் இருக்கிறது. அதன் விளைவாக நம் வீட்டிலும் பெண் குழந்தைகள் நடனம் ஆடத் தொடங்கிவிட்டனர். இவ்விதம் அகிலாண்ட கோடிப் பிரம்மாண்ட நாயகன் முதல் நம் வீட்டுக் குழந்தை வரை நடனம் ஆடும்போது, நாமும் இந்தக் கலையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாமா? இந்த நோக்கத்தை முன்னிட்டு நமது கல்வி இலாக்காக்காரர்கள் மேற்கண்ட புஸ்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புஸ்தகத்தைப் படித்தால், பரத நாட்டியம், மணிபுரி, கதகளி என்றெல்லாம் கூறப்படும் பலவகை நடனங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். அடைவு என்றால் என்ன என்றும், முத்திரைகள் ஒவ்வொன்றும எதைக் குறிக்கும் என்றும், இதை போன்ற இன்னும் பல நடன சம்பந்தமான விஷயங்களையும் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

[ஆசிரியர்: என். லக்ஷ்மணன்; பிரசுரம்: சென்னை மாகாணக் கல்வி இலாகா; விலை: ரூ. 1.]

கால் நடையில் 28,000 மைல்கள்


இந்தப் புஸ்தகத்தின் தலைப்பைப் பார்க்கும்போதே, 'அப்பப்பா! உலகத்தையா!! கால் நடையிலா!!! நிஜமாகவா!!!! என்ன ஆச்சரியம்!!!!!' என்றெல்லாம் நமக்கு மலைப்புக்குமேல் மலைப்பு ஏற்படுகிறது. அந்த மலைப்பை எழுதும்போது நமது அச்சகத்திலுள்ள ஆச்சரியக் குறிகள் எல்லாம் தீர்ந்துவிடும்போலிருக்கிறது. புஸ்தகத்தைப் படிக்கும்போது ஓரிடத்தில் நமக்குத் தூக்கி வாரிப் போடுகிறது; மற்றொரு இடத்தில் கண்ணீர் பொழியச் செய்கிறது! வேறொரு இடத்தில் சந்தோஷ மூட்டுகிறது! இப்படிப் பல ரஸங்கள் வாய்ந்த இந்தப் டஸ்தகம், மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது!

[எழுதியவர்: டி. கே. இராஜகோபால், உலக யாத்ரிகர், 50, வி. எம். தெரு, சென்னை-14; விலை: அணு 12.]

வரப்பெற்றோம்

காந்திமதி எழுதியவர்: ரத்தினம்; **சுசாப் கதைப் பாடல்கள்** இயற்றியவர்: அழ. வள்ளியப்பா; பிரசுரம்: குழந்தைப் பதிப்பகம், சென்னை 6; ஒவ்வொன்றும் விலை அணு 2.

மதிப்புக் குறைந்தது!



"வர வரப் போலீஸ்காரங்க மதிப்பிலே, நாம் எவ்வளவு கீழே போய்விட்டோம், பார்த்தாயா? முன்பு எல்லாம், என்னைப் பிடித்துக் கொடுத்தால் ரூ. 500 இனும் கொடுப்பதாகப் போடுவார்கள். இப்பொழுது இருபது ரூபாய் ஆக்கிவிட்டார்கள்!"

படித்துப் பார்!

இசை மணி மாலை

இனிய தமிழில் பாடி இசைக் கலையை வளர்க்கும் ஆர்வம் இப்பொழுதெல்லாம் நம் நாட்டில் வெகு வேகமாகப் பரவி வருகிறது. புராதன சாஹித்யங்கள் பல ஏட்டுப் பிரதியிலிருந்து அச்சு வாகனம் ஏறிப் புத்தக ரூபமாக வெளிவந்திருக்கின்றன.

கலை வளர்ச்சியோடு அதன் சாதனங்களும் வேகமாக வளர வேண்டும் அல்லவா? அந்தத் திருப்பணிக்கு ஸ்ரீ பெ. தூரன் அவர்கள் வெகு நாட்களுக்கு முன்பே அஸ்திவாரம் போட்டுவிட்டார். ஏற்கெனவே தமிழ் இசைக்கான சாஹித்யங்களை இயற்றி நூலாக வெளியிட்டிருக்கிறார்.

முருகப் பெருமானிடம் மாறாத நேயம் பூண்ட தூரன் இந்த இசை மணி மாலையில் அப்பெருமானிடம் தமக்குள்ள பேரன்பை அழகான சாஹித்யங்களின் வாயிலாக வெளியிட்டிருக்கிறார்.

சொல் நயம், பொருள் நயம், ஓசை நயம் முதலிய யாவும் பொருந்தி யிருந்தால்தான் கீர்த்தனங்கள் பாடுவோருக்கும் கேட்போருக்கும் ரஸமாயிருக்கும். அந்தப் பொருத்தம் இந்நூலில் நிறைவாக இடம்பெற்றிருக்கிறது.

உதாரணமாக, ஒரு கீர்த்தனத்தில்,

''கன்றை மேய்ப்பவன் கடலின் மேனியன்
கருதி நின்றவர் கவலை தீர்ப்பவன்
குன்றை ஏந்தியே குடை பிடிப்பவன்
கவிஞர் உளம் கோயில் கொண்டவன்''

என்ற சரணத்தைப் பாடிப் பாருங்கள். இதேபோல் ரஸமான சாஹித்தியங்கள் பல இருக்கின்றன இந்நூலில்.

சங்கீத கலாநிதி ஸ்ரீ முசிரி சுப்ரமண்ய ஐயர் அவர்கள் இந்நூலுக்கு விரிவான முன்னுரை எழுதியிருக்கிறார்.

சங்கீத வித்வான் ஸ்ரீ சிவராமகிருஷ்ண ஐயர் அவர்களும் ஸ்ரீ சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை அவர்களும் இந்நூலிலுள்ள சாஹித்யங்களுக்கு இசை வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

[இயற்றியவர்: ம. ப. பெரியசாமித் தூரன்; பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; விலை ரூ. 3-0-0.]

சீனத்துச் சிங்காரி

கிளியோபாட்ரா என்பவள் எகிப்து நாட்டுப் பேரழகி. அவள் மீது ஆண்டோனி என்ற ரோமநாட்டு வீரன் காதல் கொண்டான். அதன் விளைவாக ரோமநாட்டில் பெரிய சீர்குலைவுகள் நேர்ந்து, ராஜ்ய நிர்வாகம் தலைகீழாக மாறிவிட்டது.

இதை யெல்லாம் பார்த்த ஒரு இலக்கிய விமர்சகர் ''ஆகா! இந்தக் கிளியோபாட்ராவின் மூக்கின் நீளம் சற்றுக் குறைந்திருந்தால் இவ்வளவு உற்பாதங்கள் நேர்ந்திராதல்லவா!'' என்று கூறினார். அதாவது மூக்கின் நீளம் சற்றுக் குறைந்திருந்தால், கிளியோபாட்ரா அவ்வளவு அழகியாக இருந்திருக்க மாட்டாள்; ஆண்டோனியும் அவள் மீது அவ்வளவு காதல் கொண்டிருக்க மாட்டான்; ரோம சாம்ராஜ்யமும் நிலை பெற்றிருக்கும் என்ற பொருள் கொண்டு சொன்னார். மொத்தத்தில் முகத்தின் அழகை நன்றாக எடுத்துக் காட்டுவது எடுப்பான மூக்குதான் என்பது சாதாரணமாக உலகில் மூக்கால் பலனை ருக்குமேல் கொண்டுள்ள அபிப்பிராயம். ஆனால், சீனர்களுக்கு மூக்கு இருப்பதே தெரியாத அளவுக்குத் தட்டையாக இருக்கும் போது, அங்கே அழகு எப்படி யிருக்க முடியும்? சிங்காரம் எப்படி யிருக்க முடியும்? என்று தோன்றலாம். ஸ்ரீ சின்ன அண்ணாமலை எழுதிய 'சீனத்துச் சிங்காரி' என்ற கதையைப் படித்துப் பாருங்கள். அழகு என்பது முகத்தில் உள்ளதல்ல; அகத்தில் உள்ளதுதான் என்பது புலப்படும். உள்ளத்தின் அழகு சக்தி, தேசம், மதம் எல்லாம் கடந்தது என்பது தெரியும். இல்லையெனில் ஒரு தமிழ்நாட்டுச் சிறுவனும் சீனத்துச் சிறுமியும் அவ்வளவு அன்யோன்னியமாகப் பழக முடியுமா?

இது தவிர 1942-ம் வருஷத்திய புரட்சி இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள சங்கரபதிக் கோட்டை சமீபகால சரித்திரத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. இத்தகைய சுவை வாய்ந்த கதைகள் உள்ள தொகுதி இது.

சீன தேசத்துச் சிங்காரிகளைப் போலவே புஸ்தகமும், சீன தேசத்துச் சிங்காரக் குடைகளை அட்டையில் தாங்கி வருகிறது.

[ஆசிரியர்: சின்ன அண்ணாமலை; பிரசுரம்: தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை; விலை ரூ. 2 - 0 - 0.]

அரும்பும் மலரும்

ஐகதீசனுடைய குழந்தைக்கு ஆப்பரேஷன் நடக்கிறது. குழந்தை பிழைக்குமோ என்னவோ என்று அவன் அளவுகடந்த

'அப்படின்னா நான் உங்க பெட்டியிலிருந்து பணத்தைக் களவாடறேனா?'

'நீ களவாட வேண்டாம். என் தம்பி தான் களவாட நினைத்தான்னு வைச்சுக்கோ. அவனுக்கும் இந்தக் கதிதானே சேரும்?' என்றேன்.

'நீங்க சாவியைக் கிளிக்கூண்டிலே போட்டுவிட்டுப் போகிற வரையில் உங்கள் தம்பியே ஒரு நாளைக்கு அந்தக் கிளிக்கு விஷம் வைச்சுக் கொன்னுடப் போறாரு!' என்றாள்.

'கொன்றால் முருகன் அவன் குடும்பத்தையே நசிக்கப் போகும்படி செய்திடுவாரு!' என்றேன். பின்னால் கிளிக்கு விஷம் வைத்துக் கொன்று விடுவார்கள் என்ற எண்ணம் எனக்கு அப்பொழுதும் ஏற்படவில்லை.

"ஒரு நாள் அப்படியே நேர்ந்து விட்டது. ஒரு நாள் இரவு கடையிலிருந்து வீட்டிற்கு வந்தபொழுது கிளி கூண்டிலேயே செத்துக் கிடந்தது. என் மனைவி விசித்து விசித்து அழுது கொண்டு அதற்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள் 'மகா பாவி! கிளியை விஷம் வைத்துக் கொன்று விட்டான்!' என்று என் மனைவி என் தம்பியைக் காட்டி வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு கதறினாள். தம்பி தழுதழுத்த குரலில் அழுது கொண்டே, 'அண்ணி, பொய் சொல்லாதே! முருகன் இருக்காரு. முருகன் இருக்காரு!' என்று கதறினான்.

"என் குடும்ப ஐசுவரியம் அவ்வளவையும் சூறை விட்டவன் போல் நான் பிரமை பிடித்து நின்றேன். துக்கம் என் நெஞ்சை அடைத்தது. ஒரு புறம் கோபமும் ஆத்திரமும் பொங்கி எழுந்தது. கண்களில் நீர் மல்க அப்படியே சிலையாகச் சமைந்து விட்டேன்.

"என் மனைவிதான் கிளியைக் கொன்று விட்டுச் சாகஸம் செய்கிறாள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரிந்தது. அன்றிலிருந்து அவளோடு நான் பேசுவதில்லை. அண்ணி தன்மீது அபாண்டமாகக் கிளியைக் கொன்ற பழியைச் சுமத்தியபின் என் தம்பிக்கும் என் வீட்டிலிருக்க இஷ்டமில்லை. தனியாகப் பிரிந்து வியாபாரம் செய்ய ஆரம்பித்தான். எனக்கும் நாளுக்கு நாள் வியாபாரத்தில் நஷ்டத்தோடு கடனும் ஏற்பட ஆரம்பித்தது. என் மனைவியும் தகப்பன் வீட்டோடு போய் விட்டாள். எனக்கு ஒன்றிலுமே பிடித்தமில்லாததினால் இப்படிப் பரதேசிக் கோலம் பூண்டு ஊர் ஊராகச் சுற்றத் தொடங்கினேன்" என்று சொல்லி முடித்தார் சாமியார்.

மாயவரம் ஸ்டேஷனும் நெருங்கியது. சாமியார் குமரப்பனிடம் கிளியைக் கொடுத்துவிட்டு, "பத்திரம்! இது அரச மரத்துக் கிளி. ஆயிரம் பவுனைக் கொட்டினாலும் கிடைக்காது!" என்றார். குமரப்பனும் அதை ஆவலோடு வாங்கிப் பத்திரமாக வைத்துக் கொண்டான்.

மாயவரம் ஸ்டேஷனில் வண்டி நின்றது. எங்கள் பெட்டியிலிருந்த எல்லோரும் அங்கேயே இறங்கி விட்டோம். குமரன் கிளியிடம் கொஞ்சம் அஜாக்கிரதையாய் இருந்து விட்டான் போலிருக்கிறது. கிளி அவன் கையிலிருந்து தப்பிப் பறந்து ஓடிப்போய் விட்டது.

சாமியார் அதைப் பார்த்து விட்டு, "அடாடா! நீ ரொம்ப துரதிர்ஷ்டசாலி! ஹூம், அவ்வளவுதான் நீ செய்த பாக்கியம்!" என்று சொல்லிவிட்டுப் போனார்.

குமரப்பன் கைக் கெட்டிய புதையலை நழுவ விட்டவன் போல் இடிந்து போய் நின்று விட்டான். நான் அவனுக்கு ஆறுதல் சொன்னேன். "தம்பி, கவலைப் படாதே! கிளி போனால் போகட்டும். இதுவும் முருகன் அருள்தான்! இந்தக் கிளியினாலே நீயும் ஒருகாலத்தில் சாமியாராகப் போகும்படியாகி விட்டால்? நல்லவேளை! அந்தக் கிளி தப்பிப்போன வரையில் நல்லதுதான்!" என்றேன்.


அவன் முகத்தில் கவலை மறைந்து ஒரு பிரகாசம் தோன்றியது. "ஆமாம், அதுவும் வாஸ்தவம்தான்!" என்று சொல்லிக் கொண்டே அவன் நடந்தான்.



தாயார்:—என்னடா இது! பைத்தியம் மாதிரி, கண்ணை ஒடிச்சு முகத்திலே வைத்துக் கொண்டு நிற்கிறாயே?

பிள்ளை:—என்னைப் பார்க்கிற பெண்களெல்லாம் என் முகத்திலே கண்ணையே இல்லை என்று சொல்லுகிறதுகள்!

இருந்திச்சு. "வீட்டிலே அந்தக் கிளியிடம் என்னைப் போலவே என் சம்சாரம், என் தம்பி எல்லோரும் அபிமானமாகவும் பக்தியாகவும்தான் இருந்தாங்க. அந்தக் கிளியும் அன்னியரைத் தவிர வீட்டிலுள்ளவங்ககிட்டே சகஜமாகத்தான் பழகும். ஆனால் யார் கெடுதல் செய்தாலும் அதற்குப் பிடிக்காது. நாளுக்கு நாள் என் தம்பியிடம் என் சம்சாரத்துக்கு வெறுப்பு ஏற்பட்டது. இதற்குக் காரணம் என்னன்னு வியாபார விஷயத்திலே என் தம்பி பாகஸ்தனாயிருந்ததுதான். லாப நஷ்டத்திலே அவனுக்கும் சரி பாத்தியதை இருந்ததுதான். நாளா வட்டத்திலே காரணமில்லாமல் என் தம்பி பேரிலே என் சம்சாரத்துக்கு வெறுப்பு ஏற்பட்டிருப்பது எனக்குத் தெரிந்தது. நான் கடையிலே இருந்தால் தம்பி வீட்டிலே இருப்பான். தம்பி கடையிலே இருந்தால் நான் வீட்டிலே இருப்பேன். என் படுக்கையறையிலேதான் இரும்புப் பெட்டி இருந்தது என் தம்பியும் சம்சாரமும் அந்தப் பெட்டியைத் திறந்து ஒன்றை வைக்கவோ, எடுக்கவோ பூரண சுதந்திரம் கொடுத்திருந்தேன். சுவரில் அடித்திருந்த ஆணியில்தான் அந்தப் பெட்டியின் சாவி எப்பொழுதும் மாட்டியிருக்கும். என் படுக்கையறைக்கு வெளியேதான் கிளிக்கூண்டு தொங்கிக் கொண்டிருக்கும். அந்த இரும்புப் பெட்டியைத் திறப்பதோ, மூடுவதோ கிளிக்கு நன்றாகத் தெரியும். படுக்கையறையின் கதவைச் சாத்திக் கொண்டு பெட்டியைத் திறந்தால் கிளி கூச்சலிடும். 'திருடன், திருடன்!' என்று கத்தும். யாராயிருந்தாலும் அதன் எதிரிலேதான் பெட்டியைத் திறக்கவேண்டும். இப்படி இருக்கும் போது ஒருநாள் நான் பெட்டியில் வைத்த பணம் குறைந்தது போல் தோன்றியது. சம்சாரத்தைக் கேட்டேன். அவள் 'நான் அறியேன்' என்றாள். தம்பியைக் கேட்டேன். 'எனக்குத் தெரியாது, அண்ணா!' என்றான். என் மனது குழம்பியது. பேசாமல் விட்டுவிட்டேன். அந்த அறையில் அன்னியர் வரமுடியாதாகையால் மனைவியோ தம்பியோதான் பணத்தைக் கையாண்டிருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. என்றாவது ஒரு நாள் இது வெளிப்பட்டு விடும் என்று பேசாமல் விட்டுவிட்டேன். மறு முறை ஒரு நாள் பெட்டியில் வைத்த பணத்தில் குறைவு காணப் பட்டது. நான் என் மனைவியைக் கூப்பிட்டுக் கேட்டேன். கிளிக்கூண்டின் அருகில் நின்று 'எனக்குத் தெரியாது. உங்கள் தம்பிதான் பெட்டியைத் திறந்தார்?' என்றாள். 'முருகா, முருகா! தம்பியா எடுத்தான்? சரி நீ போ!' என்றேன். இந்தச் சமயம் என் மாமனார் அங்கே வந்தார். கிளி 'திருடன், திருடன்!' என்று கத்தியது. உடனே எனக்கு எல்லாம் விளங்கியது. மாமனாரின் தூண்டுதலினால் மனைவி செய்கிற அசட்டுத்தனம் இதுவென்று.



"ஒரு நாள் எனக்கொரு யோசனை தோன்றியது—பெட்டியைப் பூட்டி விட்டுக் கிளிக் கூண்டிற்குள் சாவியை வைத்து விட்டுப் போனால் என்னவென்று. இந்தச் சோதனையினால் பின்னால் என்ன நேரும் என்று நான் சிந்தித்துப் பார்க்கவில்லை. நினைத்தபடியே சாவியைக் கூண்டிற்குள் வைத்துவிட்டுப் போனேன். அன்று விசேஷமாக ஒன்றும் நேரவில்லை. கூண்டிற்குள் நான் போட்டு விட்டுப் போன சாவியை மற்றவர்கள் எடுக்கக் கிளி அனுமதிப்பதில்லை என்று மாத்திரம் என் மனைவியின் மூலமாகத் தெரிந்தது. மறுநாளிலிருந்து பெட்டிச் சாவியைக் கிளி கூண்டிற்குள்ளேயே போட்டு விட்டுப் போவதுதான் எனக்குச் சரியான மார்க்கமாகப் பட்டது. அப்படியே செய்தேன் ஒவ்வொரு நாளும்.

"ஒரு நாள் இரவு நான் கடையிலிருந்து வீட்டிற்கு வந்த பொழுது என் மனைவியின் வலது கை முழுதும் ரணமும் காயமுமாய் இருந்தது. காயத்திலெல்லாம் தேங்காய் எண்ணெயைத் தடவிக் கொண்டு 'ஆ. ஊ' என்று பிரலாபித்துக் கொண்டிருந்தாள். 'என்ன சமாசாரம்?' என்றேன். 'வர வர நம்ப வீட்டுக் கிளி துஷ்டனாப் போயிடுச்சு. சாயந்திரம் ஒரு வாழைப்பழம் கொடுக்கலாம்னு கூண்டைத் திறந்தேன்! கை முழுதும் கொத்தி விட்டது!' என்றாள்.

'வாழைப்பழம் கொடுக்கப் போனால் கொத்தறதுக்கு அதுக்குப் பைத்தியமா? நீ கூண்டிலே போட்டிருந்த சாவியை எடுக்கப் போயிருப்பே!' என்றேன்.

'அப்படித்தான் இருக்கட்டுமே! உங்க பெட்டிச் சாவியை எடுக்க எனக்கு உரிமை இல்லையா?' என்றாள்.

'தாராளமாய் உரிமை உண்டு. ஆனால் நான் கூண்டில் போட்டு விட்டுப் போன சாவியைப் பிறர் தொடாமல் பார்த்துக் கொள்வதைத்தானே அந்தக் கிளி தன் கடமையாய் நினைக்குது?'

மெல்லாம் சித்தியாகும். வீட்டிலே ஒரு துக்கமும் சேராது. கோடீசுவரன் வீட்டைப்போல் பணம் கொழிச்சுக்கிட்டிருக்கும். எடுத்த காரியமெல்லாம் நன்மையாய் முடியும். அரசமரத்துக் கிளி ஆயிரம் பொன் கொடுத்தாலும் கிடைக்காதப்பா!'' என்றார் சாமியார்.

வாலிபனின் முகம் மலர்ந்தது. ஆயிரம் பொன் கொடுத்தாலும் கிடைக்கக்கூடாத கிளியை ஒரு குறவனிடம் அவன் நாலணுவுக்கு வாங்கி விட்டதில் மகிழ்ச்சி ஏற்படாதா? அவன் ஆசையோடும் துடிப்போடும் ''காசு பணம் இருக்கட்டும்; நான் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துக்கணும்னு நினைக்கிறேன் ......'' என்றான்.

சாமியார் கண்டிப்பான குரலில் சொன்னார்: ''இந்தக் கிளி உன் கையிலிருக்கும் வரையில் எதுவும் நடக்கும். நீ நினைச்சதெல்லாம் நடக்கும். ஆசைப் பட்ட பெண்ணை நீ கூப்பிட வேண்டாம். அவளாகவே வருவாள். ஏன் தெரியுமா? இந்தக் கிளி சாதாரணக் கிளி இல்லே; அரசமரத்துக் கிளி! முருகப் பெருமானைப் போல!''

குமரப்பனின் உள்ளத்தில் பொங்கி எழும் ஆவலும் ஆசையும் முகத்தில் வழியத் தொடங்கியது. அப்பொழுதிலிருந்தே மனம் போனபடி ஆசைக் கனவுகளெல்லாம் காண ஆரம்பித்து விட்டான் என்பதற்கு அது அறிகுறியாக இருந்தது.


''அது சரி, சாமியாரே! இதைப்போல ஒரு கிளியினாலேதான் நீங்க இப்படிச் சாமியாராகி ஊருராய்ச் சுத்தறேன்னு சொன்னீங்களே, அது ஏன்?'' என்றேன் நான்.

இதைக் கேட்டதும் வாலிபனின் முகம் கவலையால் சுருங்கியது. அவன் வியாகூலத்தோடு சாமியாரின் முகத்தைப் பார்த்து விழித்தான். சாமியார் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, ''முருகா, பழனியப்பா!'' என்று சொல்லிவிட்டு. ''அதுவா? அது ஒரு கதை!'' என்று சொல்லியபடியே குமரப்பனைப் பார்த்து, ''தம்பி! கிளி வளர்த்தா நாமும் சாமியாராய்ப் போயிடுவோமோன்னு நீ பயப்படாதே! இது நான் செய்த புண்ணியம்; இதற்காக நான் கவலைப்படவில்லை!'' என்றார்.

''நான் அப்படி நினைக்கல்லேங்க'' என்றான் குமரப்பன் தன்னைச் சமாளித்துக்கொண்டு.

சாமியார் ஒரு தடவை கனைத்துக்கொண்டு, இரண்டு தடவை முருகனைக் கூவியழைத்து விட்டுக் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்:

''நான் சிறு பிள்ளையாய் இருக்கும் போது—அதாவது நல்ல, வாலிப வயசாய் தம்பி குமரப்பனைப் போல இருக்கும் போது, — ஒரு கிளி வளர்த்தேன். அது சாதாரணக் கிளி — அரசமரத்துக் கிளி இல்லை; புங்கமரத்துக் கிளி. ஆசைக்காக வளர்த்தேன். அப்போதுதான் ஜவுளி வியாபாரம் செய்யலாம்னு தொடங்கியிருந்தேன். வியாபாரத்திலே நஷ்டத்துக்குமேலே நஷ்டம் ஏற்பட்டது; காரணம் தெரியல்லே. ஒரு நாள் ஒரு சாமியாரு பிச்சைக்கு வந்தாரு. அவர் வீட்டிலே இருந்த கிளியைப் பார்த்துவிட்டு, 'ஹா! புங்கமரத்துக் கிளியில்லே இது. இதை வீட்டிலே வளர்த்தா தரித்திரமில்லே பிடிக்கும்'னு சொன்னாரு. உடனே நான் அவரை 'வேறு எந்த மரத்துக் கிளி வளர்த்தா வீட்டுக்கு க்ஷேமம்?'னு கேட்டேன். அவர் 'அரசமரத்துக் கிளி நல்லது' என்று சொல்லி, கிளி சாஸ்திரம்னு ஒரு புஸ்தகமும் கொடுத்துட்டுப் போனாரு. அந்தப் புஸ்தகத்தை வாங்கிப் படிச்சப்புறம் புங்கமரத்துக் கிளியைக் கூட்டை விட்டுத் துரத்தி விட்டுட்டு, அரசமரத்துக் கிளியின் அங்க அடையாளங்களெல்லாம் தெரிஞ்சு வைச்சுக்கிட்டுத் தேட ஆரம்பிச்சேன். ஒரு சமயம் ஒரு குறவன் நிறையக் கிளிகள் கொண்டு வந்து மார்க்கட்டிலே வித்துக் கிட்டிருந்தான். அதிலே தேடிப் பார்த்ததில் ஒரு அரசமரத்துக் கிளி அகப்பட்டது. ஒரு ரூபாய்க்கு இரண்டு ரூபாயாகக் கொடுத்துக் கிளியை வாங்கிக்கிட்டு வந்து கூட்டிலே வைச்சு வளர்க்க ஆரம்பித்தேன். அதிலேயிருந்து என் வீட்டிலே லக்ஷ்மி தாண்டவமாடினாள். முருகன் விளையாட ஆரம்பிச்சான். வியாபாரம் நாளுக்கு நாள் விருத்தியாச்சு. எனக்குப் பணம்னு ஜலமச





சாமியார் கிளியைக் கையால் தடவிக் கொடுத்துக் கொண்டே, "இது மாதிரி ஒரு கிளியை வளர்த்ததினாலேதான் இப்படி நான் சாமியாராகி ஊரூராய்ச் சுத்துகிறேன்" என்றார்.

இதைக் கேட்டதும் அந்த வாலிபனுக்குத் 'திக்' கென்றாற் போலிருந்தது. அவன் முகத்திலிருந்த சந்தோஷமும் ஆர்வமும் மறைந்து அதற்குப் பதிலாகச் சந்தேகம் நிறைந்தது.

சாமியார் மறுபடியும் பேச ஆரம்பித்தார்: "அரசமரத்தையும் தென்னை மரத்தையும் தெய்விகமான மரங்களென்று எண்ணி, நாமே கொண்டாடுகிற வழக்கமில்லையா? அதுபோல அரசமரத்திலேயும் தென்னை மரத்திலேயும் வளர்ந்த கிளிக்கு ஒரு தெய்விகம் இருக்கிறது. இந்தக் கிளி என் அப்பன் முருகனுக்குச் சமானம்" என்று சொல்லிவிட்டு வாலிபனைப் பார்த்து, "தம்பி குமரப்பா! ஜாக்கிரதை! இதை நீ ரொம்ப ஜாக்கிரதையாக வளர்க்கணும். முருகப் பெருமானையே வீட்டிலே வைச்சுப் பூசை செய்யறாப்போலே வளர்க்கணும். தெரியுமா? தீட்டுப்படக் கூடாது. ஆசாரமாய் இருக்கணும். கண்ட ஆகாரமெல்லாம் கொடுக்கக்கூடாது. அழகான கூண்டிலே வெளிச்சமும் காற்றும் இருக்கக்கூடிய இடத்திலே வைக்கணும் வேளா வேளையிலே நல்ல வாழைப்பழமும், மிளகாய்ப் பழம்—இதைத்தான் ஆகாரமாக் கொடுக்கணும். இல்லாவிட்டால் பருப்பும் சோறுமா நெய் விட்டுப் பிசைந்து வைக்கணும். வீட்டிலே இருக்கிறவங்க கெட்ட வார்த்தை பேசக் கூடாது. ஏனென்றால் கிளிப்பிள்ளை பாரு. அதுவும் அப்படியே பேசும். 'முருகா, முருகா!' ன்னு அதுக்கும் சொல்லிக் கொடுக்கணும். தெரிஞ்சுதா?" என்றார்.

வாலிபன் "ஆகட்டும்" என்று சொல்லித் தலையை ஆட்டினான்.

"இது இருக்கிற வரையிலே உனக்கு ஒரு குறையும் ஏற்படாது. விசேஷகாரிய

எனக்கு எதிரில் வந்து உட்கார்ந்த அந்த மனிதர் வாலிபன் கையிலிருந்த பச்சைக் கிளியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஐம்பது வயதுக்குமேலிருக்கும். அவருடைய முகத்தைப் பார்த்தால் நல்ல விவேகிபோலவும் அரைப் பைத்தியம் பிடித்தவர்போலவும் தோன்றியது. நெற்றியில் பெரிய சந்தனப் பொட்டு. தங்கத்தின் மத்தியில் சிவப்புக் கல் வைத்துப் பதித்தாற்போல் அந்தச் சந்தனப் பொட்டின் நடுவே ஒரு குங்குமப் பொட்டு. அடர்ந்து சுருங்கிய புருவம். அறிவும் அனுபவமும் நிறைந்த கண்கள். நரையோடிய குட்டையான தாடி. வெற்றிலைக் காவி ஏறிய பெரிய உதடு. கழுத்தைப் பிடிக்கும்படியாகக் கறுப்புக் கயிற்றில் கட்டிய ஒற்றை உத்திராக்ஷம். பூக்கரை போட்ட அழுக்கேறிய சால்வை ஒன்றைத் தேகம் முழுதும் மறைக்கும்படிப் போர்த்திக்கொண்டிருந்தார். அவரை அநேகர் பைத்தியக்காரர் என்று முடிவு கட்டினாலும் ஆச்சரியமில்லை; பெரிய தீர்க்கதரிசி என்று எண்ணும்படியாய் இருந்தாலும் ஆச்சரியமில்லை. அப்படிப்பட்ட உருவம்.

அவர் "முருகா, வேலப்பா, சுப்பிரமணியம்" என்று சொல்லிவிட்டு, ஒரு கணைப்புக் கனைத்துக்கொண்டு வாலிபனைப் பார்த்து, "இந்தக் கிளி உனக்கு ஏது அப்பனே?" என்றார்.

"ஒரு குறவனிடம் காலணாவுக்கு வாங்கினேன், கும்பகோணம் ஸ்டேஷனிலே" என்றான் வாலிபன்.

"பாக்கியசாலிதான், முருகா! ஷண்முகம்! ஹும், சரி! அதை இங்கே கொஞ்சம் கொடு?" என்றார்.

வாலிபன் கிளியை அவரிடம் கொடுத்தான். அவர் அதை வாங்கித் தடவிக்கொடுத்துக் கொண்டே, "வேலப்பா! முருகய்யா!" என்று முணுமுணுத்தார்.

"சரி, இவர் ஒரு முருகப் பித்தர்போல் இருக்கிறது!" என்று நான் எனக்குள் தீர்மானித்தேன்.

பெரியவர் கிளியைத் தடவிக் கொடுத்துக் கொண்டே 'உனக்கு முருகன் அருள் இருக்கிறது. நீ ரொம்ப பாக்கியவான்" என்றார் வாலிபனைப் பார்த்து. வாலிபனின் உள்ளத்தில் இந்த வார்த்தை பனிக்கட்டி வைத்தாற்போலிருந்தது. அவரைப் பார்த்துப் பணிவோடு பல்லை இளித்தான்.

"உன் பெயர் என்ன, அப்பனே?" என்றார் பெரியவர்.

"என் பெயரா? குமரப்பன்."

"நல்ல பெயர். அதனால்தான் இந்தக் கிளி உனக்குக் கிடைத்திருக்கிறது. ஆகா! ஷண்முகா! முருகா!" என்று சொல்லி அவர் கண்களை மூடிக்கொண்டார். வாலிபன் அவர் முகத்தையே பக்தியோடும் வினயத்தோடும் பார்த்துக் கொண்டிருந்தான்.

கண்ணை மூடிக்கொண்டு தீர்க்கமாக யோசிப்பவர்போல் இருந்து விட்டுக் கண்ணைத் திறந்தார் பெரியவர். "அப்பனே, குமரப்பா! இந்தக் கிளியை நீ வளர்க்கப் போகிறாயா?" என்று கேட்டார் அன்போடு.

வாலிபன் தயங்கியபடியே "ஆமாம்" என்றான்.


"ஆம். வளர்க்கத்தான் வேண்டும். கிளி வீட்டில் இருந்தால் முருகனே இருக்கிறமாதிரி. சகல ஐசுவரியமும் வந்து சேரும். ஏன் தெரியுமா? இது அரசமரத்துக் கிளி. அரசமரத்துக் கிளியும், தென்னமரத்துக் கிளியும் அகப்படுவது கடினம். உனக்குக் கிடைத்திருக்கிறது. பூர்வ ஜன்மத்திலே செய்த புண்ணியம். முருகப் பெருமான் அருள். ஆமாம், நீ ரொம்ப பாக்கியசாலி!" என்றார்.

அவர் வார்த்தையைக் கேட்டு வாலிபனின் மனதில் ஆனந்தம் பொங்கியது. அவன் அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டே வார்த்தை சொல்ல முடியாமல் திணறினான். எனக்குக்கூட அந்த அரைப் பைத்தியக்காரரின் பேச்சில் சிரத்தை விழுந்தது. மாயவரம் போய்ச் சேருகிற வரையில் பொழுது போக்கு வேண்டாமா? "அது சரி, சாமியாரே! இது அரசமரத்துக் கிளின்னு உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்றேன்.

"எல்லாக் கிளியும் பச்சையாகத்தான் இருக்கும். ஆனால் அரசமரத்துக் கிளி, தென்னைமரத்துக் கிளி — இதையெல்லாம் கண் பார்வையிலிருந்துதான் தெரிந்துகொள்ளணும். ஒருவர் கண்ணைப் பார்த்தவுடனே அவர் புத்திசாலி, நல்லவர் என்று நாம் தெரிந்து கொள்ளவில்லையா? அப்படித்தான்! இதிலே கொஞ்சம் பழக்கம் இருக்கணும். கிளி வளர்ப்பைப் பற்றிப் புஸ்தகம் படித்திருக்கணும்; கிளிகளை வளர்த்திருக்கணும்" என்றார்.



"ஓஹோ! அப்படியா? அரசமரத்துக் கிளி, கிளிகளிலேயே ரொம்ப உயர்ந்ததோ? உங்களுக்கு வளர்த்து அனுபவம் உண்டோ?" என்றேன்.



அரசமரத்துக் கிளி

கி. ரா. கோபாலன்

வண்டி வருவதற்கு இன்னும் ஐந்து நிமிஷங்கள் இருந்தன. நான் ஸ்டேஷனில் அப்படியும் இப்படியுமாக உலாவிக் கொண்டிருந்தேன். ஒரு குறவன் கையில் பச்சைக் கிளியுடன் என்னை நெருங்கி, "சாமி! பச்சைக் கிளி வேணுங்களா — பச்சைக் கிளி?" என்றான்.

எனக்குச் சிரிப்பு வந்தது. நான் பச்சைக் கிளி வாங்கி வளர்க்கக்கூடியவன் என்று அவன் நினைத்தது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்பதைக் குறித்துத் தான் எனக்குச் சிரிப்பு வந்தது. நான் "வேண்டாம், அப்பா!" என்றேன். உடனே எனக்குப் பக்கத்தில் நின்ற ஒரு வாலிபன் அந்தக் குறவனிடம், "இந்தக் கிளி என்ன விலை?" என்றான். குறவன் வாலிபனின் முகத்தைப் பார்த்தபடியே தயக்கத்துடன், "ஒரு ரூபாய்" என்றான்.

"நாலணாவுக்குத் தருவாயா?" என்றான் வாலிபன். குறவன் சிறிது நேரம் தயங்கியபடியே யோசித்துவிட்டு, "எட்டணா கொடுங்க" என்றான். "நாலணாத்தான்" என்றான் கண்டிப்பாக வாலிபன். குறவன் அவன் கையில் கிளியைக் கொடுத்துவிட்டு, "எடு காசை" என்றான். வாலிபன் காசை எடுத்து அவன் கையில் கொடுத்துவிட்டு ஒரு கையில் கிளியை வைத்துக் கொண்டு மறு கையால் அதைத் தடவி அழகு பார்த்துக்கொண்டு நின்றான்.


வண்டியும் வந்துவிட்டது; நான் ஏறிய பெட்டியிலேயே கிளியுடன் அந்த வாலிபனும் ஏறினான். அந்தப் பெட்டியில் இன்னும் இரண்டு மூன்று பேர்கள்தான் இருந்தனர். வாலிபன் கிளியோடு என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். வண்டி புறப்பட்டது. அந்தக் கிளியைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டுமென்ற சிரத்தை அவனுக்கு இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. அதைக் கீழே விடுவதும், கைவிரலை நீட்டி அதன்மீது அதை உட்கார வைப்பதும், தோளின் மீது உட்கார வைத்துக் கொள்வதுமாக அதோடு விளையாட ஆரம்பித்தான். எனக்கு அவனுடைய அஜாக்கிரதையில் அக்கறை ஏற்பட்டது. "ஏனப்பா, இப்படியெல்லாம் விளையாடினால் அது பறந்து போய்விடாதா?" என்றேன்.

"போனால் போகுது. இந்தக் கிளியை வளர்க்கணும்னு வாங்கல்லே. சும்மா விளையாடத்தான் வாங்கினேன்!" என்றான் அவன் அலட்சியமாக. அதற்குமேல் அவனிடம் ஒன்றும் பேசவில்லை.

அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றது. எங்கள் பெட்டியில் இன்னும் இரண்டொருவர் ஏறினர். அவர்களில் வயதான ஒருவர் எனக்கும் அந்த வாலிபனுக்கும் எதிரில் வந்து உட்கார்ந்தார். அந்த ஸ்டேஷனிலிருந்து வண்டி புறப்பட்டது.

இதோ

இன்றைய புதிய மாடல் '50 'ஓரியண்ட்'



விஞ்ஞான முறைப்படி சீர்திருத்தப் பட்டு, பல இயந்திர முன்னேற்றங்கள் அடங்கியிருப்பினும், 1950-ம் வருடத்திய ஓரியண்ட் விசிறிகள் பழைய விலைக்கே கிடைக்கின்றன.

இயந்திர கருவிகளால் முழுவதும் நிர்மாணிக்கப்பட்ட எங்களுடைய நூதன தொழிற்சாலையில் பெருவாரியான அளவில் ஓரியண்ட் விசிறிகள் தயாரிக்கப்படுவதே இதற்குக் காரணமாகும். மேலும் ஒவ்வொரு ஓரியண்ட் விசிறியும் தொழிற்சாலையிலிருந்து அனுப்பப்படுவதற்கு முன், ரகத்திற்காகவும், வேலைப்பாட்டிற்காகவும் பிரத்தியேகமாக பரீக்ஷிக்கப்படுகிறது என்பதை கவனியுங்கள்

ஓரியண்ட் ஏ. ஸி. டி. ஸி. விசிறிகள்

தி கல்கத்தா எலக்ட்ரிகல்
மான்யுபாக்சரிங் கம்பெனி
லிமிடெட்
4, லட்டிக்கர் தெரு, மதராஸ்.

இதர ஆபீஸ்கள்:- கல்கத்தா, பம்பாய், டெல்லி, பாட்னா, கான்பூர்.

சீலிங், டேபிள் விசிறிகளும், ரெயில்வே கோச்சு விசிறிகளும், மின்சார பம்புகளும், கைப்பம்புகளும், மின்சார மோட்டார்களும் பெருவாரியான அளவில் தயாரிப்பவர்கள்.

மதராஸ் ஆபீஸ் டெலிபோன் நெ. 2658

றேன்" என்று சொல்லி லக்ஷ்மியின் பதிலை எதிர்பாராமலே 'விர்'ரென்று அவன் அறையை விட்டுச் சென்று விட்டான்.

கிருஷ்ணன் தன்னை அவமதித்து விட்டானே என்று லக்ஷ்மி மிகவும் வேதனைப்பட்டாள். அவனுக்குச் சரியான பதில் சொல்லுவதற்குள் வெளியே சென்று விட்டானே என்று மிகவும் கவலையடைந்தாள். இருந்தாலும் முதல் முதலில் வேலைக்காக வெளியூருக்குச் செல்லும் அவனிடம் கடுமையாக நடந்து கொள்வதும் தவறு என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக்கொண்டாள்.

* * *

நாட்கள் உருண்டு ஓடின. கிருஷ்ணன் சென்னை நகரிலே காலந் தள்ளிக் கொண்டு வந்தான். ஒவ்வொரு நாளும், லக்ஷ்மியின் விவாகச் செய்தியை ஆவலுடன் எதிர்பார்த்தான். லக்ஷ்மியை நினைக்கும் போதெல்லாம், அவனுக்கு அவளுடைய ஆடம்பர வாழ்க்கையும் அகம்பாவமும்தான் தோன்றின.

கர்வம்! அதை அடக்க யாராலும் முடியாதா? அடுப்பில் கொதிக்கும் பால் பெருமிதத்துடன், பொங்கிப் பாத்திரத்துக்கு மேலே வந்து வெளி உலகத்தைக் காண வேண்டும் என்று துடிக்கிறது. பொங்கி வழியும் அந்தத் துடிப்பை ஒரு சில தண்ணீர்த் துளிகள் அடக்கி விடுகின்றன. ஆனால் பொங்கி வழியும் லக்ஷ்மியின் கர்வத்தை அடக்குவதற்கு மனித சக்தியால் முடியுமென்று கிருஷ்ணனுக்குத் தோன்றவில்லை.

பெண்ணைப் பார்க்க வருகிறவர்களையெல்லாம் லக்ஷ்மி உதாசீனம் செய்து வருவதாகக் கிருஷ்ணனுடைய தாயார் அவனுக்குக் கடிதம் எழுதியிருந்தாள். வரும் பிள்ளைகள் அவளுடைய கற்பனை லோகத்தில் குடியிருந்த மன்மதனை ஒத்திருக்கவில்லை என்பது கிருஷ்ணனுக்கும் அவன் தாயாருக்கும் எப்படித் தெரியும்?

இந்தச் சமயத்தில்தான் மனிதன் செய்ய முடியாத காரியத்தைத் தெய்வம் செய்து விட்டது. லக்ஷ்மியின் ஆடம்பரத்துக்கும் அகம்பாவத்துக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டது. மனிதனை வென்று விட்டதாக எண்ணியிருந்த லக்ஷ்மி விதிக்கு அடிமையானாள்.

* * *

ஒரு வருஷத்துக்குப் பிறகு 'லீவில்' ஊருக்கு வந்த கிருஷ்ணன் லக்ஷ்மியைப் பார்த்தான். ஒரு முறைக்கு இரு முறை கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தான். அவனால் நம்பவே முடியவில்லை. நாம் சென்னைக்குப் போவதற்கு முன் பார்த்த லக்ஷ்மியா இவள் என்று வியந்தான். அதைப் பற்றித் தனக்குத் தெரிவிக்காமல் செய்ததும் லக்ஷ்மியேதான் என்று அறிந்தபோது அவன் அடைந்த ஆச்சரியத்துக்கு எல்லையே இல்லை.

கிருஷ்ணனுக்கு அவன் தாயார் எல்லாவற்றையும் விவரமாகக் கூறினாள். மூன்று மாதங்களுக்கு முன் லக்ஷ்மி மெத்தைப் படி வழியாகக் கீழே இறங்கி வருகையில், நவீன 'பாஷ'னில் அணிந்திருந்த 'பூட்ஸ்' தடுக்கிக் கீழே விழுந்துவிட்டாள். அப்பொழுது அவளுடைய வலது கால் முறிந்துவிட்டது. எக்கச்சக்கமாக எலும்பு முறிந்து விட்டதால் அந்தக் காலைச் சரிப்படுத்த முடியாது என்று டாக்டர்கள் கூறி விட்டார்கள். அதனால் லக்ஷ்மியின் வலது கால் கொஞ்சம் ஊனமாகி விட்டது" என்றாள்.

லக்ஷ்மியின் கால் ஊனம் அவளுடைய நடையை மாற்றினதோடு மட்டுமல்லாமல், அவளுடைய மனப் போக்கையும் மாற்றிவிட்டது என்பதையும் கண்டான் கிருஷ்ணன்.

மறுநாள் கிருஷ்ணனுடைய தாயார் அவனிடம் வந்தாள். "நல்ல பிள்ளையாக யாராவது இருந்தால் லக்ஷ்மிக்குப் பாரேன்! முன்பெல்லாம் வரும் பிள்ளைகளை இவள் குறை சொல்லி ஒதுக்கினாள். இப்போது 'நொண்டி' என்று வருகிறவர்கள் லக்ஷ்மியை ஒதுக்கி விடுகிறார்கள். உன் மாமாவுக்கும் மாமிக்கும் மனம் உடைந்துவிட்டது" என்று அனுதாபத்தோடு சொன்னாள்.

"அம்மா. லக்ஷ்மியின் பழைய அகம்பாவ குணம் மாறி இருக்கிறதல்லவா?" என்றான் கிருஷ்ணன்.

"பழைய லக்ஷ்மியா இவள்? என்று நினைக்கவும் முடியாதபடி மாறியிருக்கிறாள்" என்றாள் தாயார்.

கிருஷ்ணன் மனம் மாறினான். அடக்க ஒடுக்கமான, குணம் நிறைந்த பெண் அவனுக்குக் கிடைத்துவிட்டாள். லக்ஷ்மியின் கால் ஊனம் கிருஷ்ணன் மனதில் தோன்றவில்லை. அவளுடைய மன மாற்றமே அவனுக்குத் திருப்தியை அளித்தது.

* * *

டேபிள்மீது கிடந்த தந்தியை நாலாவது தடவையாகப் படித்துப் பார்த்தான் கிருஷ்ணன். "லக்ஷ்மிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. தாயும் சேயும் சௌக்கியம்" என்ற வார்த்தைகள் மீண்டும் ஆனந்த வெள்ளத்தில் அவனை அமிழ்த்தின. அவனுடைய வாழ்க்கையின் லட்சியம் வெற்றி பெற்றது!

லட்சியத்தை எடுத்துச் சொல்லித் தன் தாயின் வார்த்தையையும் மீறி விட்டான்.

"அழகு இல்லாவிட்டாலும் பாதகமில்லை. அடக்க ஒடுக்கமாகவும் குணவதியாயும் உள்ள பெண்ணைப் பார். நான் உடனே கல்யாணம் செய்து கொள்ளுகிறேன்" என்று அடிக்கடி அவன் கூறின வார்த்தைகள் தாயாரின் நச்சரிப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டன.

* * *

லக்ஷ்மி நாகரிகப் பாதையிலே கடும் வேகத்தோடு சென்று கொண்டிருந்தாள். இயற்கை அழகோடு நாகரிகச் சின்னங்களையும் சேர்த்து மேலும் அழகாகவும் ஆடம்பரமாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பியது அவளுடைய மனம்.

"உன் அழகுக்கு எத்தனையோ வாலிபர்கள் 'நான், நீ' என்று வரமாட்டார்களா?" என்று லக்ஷ்மி ஆறு வயதுச் சிறுமியாக இருக்கும்பொழுதிருந்தே அவளைப் பார்ப்பவர்கள் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அந்தப் புகழுரை லக்ஷ்மியின் மனப் பீடத்திலே அணு அணுவாக வளர்ந்து கடைசியில் அவளை ஒரு கர்வியாக மாற்றி விட்டது. மானசீகமாகத் தனக்கு ஒரு மன்மதனையே சிருஷ்டித்துக் கொண்டு விட்டாள் லக்ஷ்மி.

தனது கற்பனை லோகத்திலே சிருஷ்டி செய்த புருஷனுக்கும் தன் மாமா மகனான கிருஷ்ணனுக்கும் உள்ள வித்தியாசத்தை எண்ணிப் பார்த்தாள் அவள். நல்ல வேளை, தான் அவனை ஏற்க மறுப்பதற்கு முன் அவனே முந்திக் கொண்டு விட்டான் என்று சந்தோஷப் பட்டாள். அழகை விரும்பாத, ஆடம்பரத்தை வெறுக்கும் கிருஷ்ணனுடன் வாழ்க்கை நந்தவனத்திலே உல்லாசமாக உலாவ முடியாது என்பது அவளுடைய எண்ணம்.

ஆனால் கிருஷ்ணனைப் பார்க்கும்போதெல்லாம் தன்னை மணக்க மறுத்து விட்டதை நினைத்து அவன் மீது அவளுக்குக் கோபமும் ஆச்சரியமும் உண்டாகும். தன்னுடைய போக்கை அவன் வெறுத்தான் என்பதற்காகக் கோபம்; அதே சமயத்தில் 'ஒரு பெண்ணின் அழகுக்கு அடிமையாகாத ஒரு யுவனும் இருக்கிறானே!' என்ற ஆச்சரியம்.

அன்று கிருஷ்ணன் தனக்குக் கிடைத்த உத்தியோகத்தை ஏற்கச் சென்னைக்குக் கிளம்பினான். ஊருக்குப் புறப்படுவதற்கு முன் தன் அத்தை மகளான லக்ஷ்மியிடம் சொல்லிக் கொள்ளுவதற்காக அவளுடைய அறைக்குச் சென்றான்.

லக்ஷ்மி கண்ணாடியின் முன் நின்று கொண்டு நாகரிக தெய்வங்களை வழிபட்டுக் கொண்டிருந்தாள். பின்னால் தன்னுடைய அத்தான் கிருஷ்ணன் நிற்பதைக் கண்டதும் அவளுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

"என்ன அத்தான், ரொம்ப அபூர்வமாக இருக்கிறதே!"


"இன்று சென்னைக்குப் போகிறேனல்லவா; உன்னிடம் சொல்லிக் கொண்டு போகலாம் என்று வந்தேன்" என்று சொன்னான் கிருஷ்ணன்.



"சென்னைக்குப் போனால் திரும்பி வருவதற்குக் கொஞ்சம் நாளாவது ஆகும் இல்லையா?"

"ஆகலாம். அதற்குள் உனக்குக் கல்யாணம் நிச்சயமானால் இரண்டு நாள் 'லீவ்' வந்து விட்டுப் போவேன்."

"அது இருக்கட்டும், அத்தான்! அடுத்த தடவை வரும்போது, எனக்கு வேண்டியதெல்லாம் வாங்கிக் கொண்டு.........." என்று லக்ஷ்மி சொல்லி முடிப்பதற்குள், கிருஷ்ணன் தொடர்ந்து, "லக்ஷ்மி, உன்னிடம் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது என்றுதான் சொல்லுகிறேன். எப்போதும் ஆடம்பரத்தில் ஆசை வைக்காதே! எல்லோரிடமும் மரியாதையாகப் பேசு. கர்வமாகவும் அலட்சியமாகவும் நடந்து கொள்ளுவது நல்லதல்ல. அழகு இருக்கிறது என்று அகம்பாவமாக இருக்காதே! ஆடம்பரத்தால் அழகு குலைந்து விடும் என்ற எண்ணத்தைவிட்டு விடு. நான் போய் வருகி



லட்சிய வெற்றி

பி. வி. ஆர்.

மேஜையின் மீதிருந்த தந்தியைப் பெருமிதத்துடன் பன்முறை படித்த கிருஷ்ணன் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினான். உவகை ஊட்டும் அந்தச் செய்தி அவனுடைய வாழ்க்கை நதியிலே வந்த புது வெள்ளம் போல இருந்தது.

கழிந்துபோன காலப் பாதையில் மூன்று வருஷக் கற்களை நோக்கிப் பின் சென்றது அவனுடைய மனம்.

* * *

அவன் ஒரு லட்சியவாதி. ஆடம்பரமே இல்லாது அடக்க ஒடுக்கமுள்ள பெண் யாராவது உண்டா என்று சிந்தித்த காலம் அது.

நிதானமாக ஒரே இடத்தில் நிலையாக இருந்த தன்னுடைய வாழ்க்கை ஏரியிலே ஒரு காட்டாறு வந்து சேருமோ என்று அவன் கலங்கிக் கொண்டிருந்தான். மாறுபட்ட இரண்டு லட்சிய சக்திகள் சேர்ந்து வாழ்க்கை எனும் வண்டியைச் செலுத்த முடியாது என்பது அவனுடைய திடமான எண்ணம்.

லக்ஷ்மியின் போக்கு அவனுக்குப் பிடிக்கவில்லை. மாமா பெண் என்னும் முறையிலேதான் அவளுடன் பேசினான்; தன்னுடைய வாழ்க்கைப் படகிலே பிரயாணம் செய்ய அருகதையற்றவள் என்று தெரிந்திருந்தும் அவளுடன் மிகவும் சகஜமாகப் பழகினான்.

அவனுடைய தாயார் சொல்வது போல் லக்ஷ்மி அழகிலே ரதிதான். ஆனால், கிருஷ்ணனின் மனம் அழகில் மட்டும் ஈடுபடவில்லை. குணம் என்னும் ஆபரணத்தையும் எண்ணிப் பார்த்தது. குணமில்லாத பெண்ணுக்கு அழகு இருப்பது நல்ல பாம்பு படம் எடுத்து ஆடும்போது இருக்கும் அழகைப் போலத்தான் என்று அடிக்கடி சொல்லி வந்தான்.

களங்கமற்ற வெண்மை நிறம். அதிலே ஒரு சிறிய தூசு படர்ந்தாலும் களங்கம் ஏற்பட்டு விடுகிறதல்லவா? சர்வ லக்ஷணமும் நிறைந்த லக்ஷ்மியை, கர்வமும் ஆடம்பரமும் ஆட்கொண்டு, அவனைக் கிருஷ்ணன் கட்டோடு வெறுக்கும்படி செய்து வந்தது.

மாமாவின் பெண்ணை மணம் செய்து கொள்ள மறுத்தான் கிருஷ்ணன். தன் அருமைத் தாயாரின் சொல்லை இதுவரையில் மீறி நடந்தறியாத அவன் தன்

படுத்தினால் அவர்கள் ஊக்கத்துடன் வேலை செய்வார்கள். ஆசியா நாடுகளில் கம்யூனிஸம் பரவுவதைத் தடுக்கச் சரியான வழி இதுதான். தோட்டக் கம்பெனிகளின் தலைமைக் காரியாலயங்கள் மட்டும் இங்குள்ள தோட்ட அதிகாரிகளுக்குப் போதிய அதிகாரமளித்து ஒத்துழைத்தால் தொழிலாளரைத் திருப்திப் படுத்தி விபரீதமான கொள்கைகளுக்கு இலங்கையில் சிறிதும் இடமில்லாதபடி செய்துவிடலாம்" என்று குறிப்பிட்டார். எனினும் அவரைப் போல நினைக்கும் தோட்டத் துரைமார்கள் எவ்வளவு பேர் இருக்கின்றனர்?

கட்சிப் போட்டியின் குளறுபடி!

கொழும்பு முனிசிபல் சபை மேயர் டாக்டர் குமாரன் ரத்தினம் மீது நம்பிக்கையில்லையென்று முனிசிபல் சபை நேற்றிரவு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. இந்தத் தீர்மானத்தின் வரலாறு ரசமானது. டாக்டர் ரத்தினம் ஒரு கட்சியையும் சேராத சுயேச்சை வாதி. ஆனால் பொது ஜனங்களின் அபிமானத்தைப் பெற்றவர். சென்ற வருட முடிவில் முனிசிபல் தேர்தல் நடந்த பொழுது சபையில் இடது சாரிக் கட்சிகளுக்கு மெஜாரிட்டியிருந்தது. அவர்கள் டாக்டர் ரத்தினத்தை மேயராகத் தேர்ந்தெடுத்தார்கள். அதன்பிறகு முனிசிபல் லஞ்சக் கமிஷன் அறிக்கை வெளியாகி மூன்று பேர்கள் அங்கத்தினர் பதவியை இழந்தார்கள். அந்த மூன்று ஸ்தானங்களுக்குத் தேர்தல் நடந்ததில் சர்க்கார் கட்சியான யு. என். பி. கட்சியை ஆதரிக்கக் கூடிய மூவர் தேர்ந்தெடுக்கப்பட்டதால் சபையில் கட்சி பலம் மாறியது.

உபதேர்தலின் பொழுது இடது சாரி அபேட்சகரை ஆதரித்து மேயர் ஒரு அறிக்கை விட்டாராம். இதை ஒரு காரணமாக வைத்து மேயர்மீது டாக்டர் சில்வா நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார். அது சபையின் நிர்வாகத்துக்கு சம்பந்தப்பட்டதல்லவென்றும் மேயரின் சொந்த ஹோதாவில் செய்யப்பட்ட காரியத்தைக் குறிப்பிடுவதென்றும் சொல்லிக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த உதவி மேயர், தீர்மானத்தை நிராகரித்தார். இந்தத் தீர்மானத்தைப் பற்றி நடந்த முதல் நாள் விவாதத்தின் பொழுது ஆயிரக் கணக்கான ஜனங்கள் சபைமீது படையெடுத்து வந்து காலரிகளை நிரப்பிக் கூக்குரலிட்டு அன்று கூட்டம் நடக்காதபடி செய்துவிட்டார்கள். அவர்களுடைய ஒரே நோக்கம் தீர்மானம் நிறைவேறி மேயர் ராஜினாமா செய்துவிடக் கூடாது என்பதுதான். இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு, காலரியிலிருந்த கூட்டத்தை மேயர் வெளியேற்றவில்லையென்றும், ஆகையால் மேயர் பதவியை வகிக்க அவர் திறமையுடையவரல்லவென்றும் ஸ்ரீ விஜயரத்ன இன்னொரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார். அது நேற்றிரவு நிறைவேறியுள்ளது. ஆயினும் மேயர் தமது பதவியை ராஜினாமாச் செய்யப் போவதில்லையென்று அறிவித்துவிட்டார்.

நிற்க, முதல் தீர்மானத்தை உதவி மேயர் நிராகரித்ததை ஆட்சேபித்து டாக்டர் சில்வா சுப்ரீம் கோர்ட்டில் மனுக்கொடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறார். இவ்விதம் கொழும்பு முனிசிபல் சபை விவகாரம் ஏகக் குழப்பமாயிருக்கிறது. இடது சாரிகளை ஆதரிப்பவர் மேயர் பதவியிலிருக்கக் கூடாது என்று அவரை வெளியேற்ற வலது சாரியினர் வெகு தீவிரமாக முயற்சித்து வருகின்றனர். இதற்கிடையில் ஒவ்வொரு வார்டிலும் நடக்கும் பொதுக் கூட்டங்களிலே டாக்டர் ரத்தினம் மேயர் பதவியிலிருந்து விலகக் கூடாதென்று ஜனங்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.

அற்ப ஆசை அதிக நஷ்டம்

இந்தியாவுக்குப் போகும் பிரயாணிகள் கையில் எழுபத்தைந்து ரூபாய்க்கு மேல் கொண்டு போகக் கூடாதென்பதும் அதற்கு மேல் கொண்டு போவதானால் எக்ஸ்சேஞ்ச் கண்ட்ரோலரின் அனுமதி வாங்கிப் போக வேண்டுமென்பதும் சட்டம். இந்தச் சட்டத்தை மீறி அநேகர் அதிகப் பணமும் தங்கமும்கொண்டுபோய் சுங்க பரிசோதனையின்பொழுது பறி கொடுக்கிறார்கள். சென்ற வாரம் ஒரு பிரயாணி இரண்டு பவுன்களையும் மற்றொருவர் ஒன்றரைப் பவுன் சங்கிலியையும் இன்னொருவர் நூறு ரூபாயையும் பறி கொடுத்தார். இத்துடன் மட்டுமல்ல. அவர்களுடைய அன்றையப் பிரயாணம் தடைப்பட்டதோடு மேற்கொண்டு அபராதமும் செலுத்த வேண்டியதாயிற்று. இரண்டு வருஷங்களுக்கு அதிகமாக இந்தச் சட்டம் அமுலில் இருப்பதினாலும் இலங்கையில் வாழும் இந்தியர்களிடையே தினசரி இதே பேச்சாயிருப்பதினாலும் அவர்கள் அறியாமல் அதிகப்பணம் எடுத்துச் சென்று அகப்பட்டுக் கொண்டவர்களல்ல. இது ஒரு சிலருடைய அற்ப ஆசையினால் எல்லாப் பிரயாணிகளும் கடுமையான சோதனைக்கு உட்பட்டுக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

1. வீட்டு வாடகை	20	0	0
2. இன்ஷ்யூரன்ஸ்	3	4	0
3. வாலண்டரி பிராவிடண்ட் பண்டு	5	0	0
4. பிராவிடண்ட் பண்டு	5	13	0
5. Recurring Deposit	10	0	0
6. Mutual Retirement Benefit Fund	5	0	0
7. கிலவரி (இஸ்திரி)	1	12	0
8. பால் (தினம் ½ படி)	9	0	0
9. காபி பவுடர் (3 பவுண்டு)	6	12	0
10. தயிர் (தினம் ¾ படி)	5	10	0
11. நெய் (1 படி)	9	0	0
12. விறகு (½ டன்)	5	8	0
13. அடுப்புக்கரி (½ மூட்டை)	1	10	0
14. ரயில்வே ஸீஸப் சக்கர	0	12	0
15. அரிசி	17	8	0
16. துவரம் பருப்பு	2	0	0
17. உளுந்து	2	0	0
18. புளி (1 வீசை)	1	6	0
19. வெல்லம் (1 வீசை)	1	6	0
20. சீனி	2	12	0
21. தீப்பெட்டி	0	2	0
22. டாய்லெட் சோப்	0	6	0
23. சலவை சோப்	0	10	0
24. காய்கறி, இலை	5	10	0
25. வத்தல்	1	6	0
26. கடுகு, வெந்தயம், சீரகம்	1	0	0
27. பாசிப் பயறு	1	0	0
28. க. எண்ணெய் 2 சொம்பு	9	0	0
29. கடலை எண்ணெய் 1 படி	3	0	0
30. தேங்காய் எண்ணெய் ½ படி	1	0	0
31. உப்பு	0	3	0
32. சலவை	2	0	0
33. க்ஷவரம்	1	8	0
34. தபால் செலவுகள்	1	0	0
35. துணி மணிகள்	15	0	0
36. புஸ்தகம், நோட்டு, பென்சில் முதலியன	25	0	0
37. நோட்டடுக்கு	3	0	0
38. சினிமா (1 தடவை)	1	12	0
39. எதிர்பாராதது	3	0	0
40. சில்லறைச் செலவுகள்	3	10	0
ஆகமொத்தம்	190	0	0

என் தாயார் ஸ்ரீரங்கத்துக்குப் போயிருந்த பொழுது, திடீரென்று 7-12-49ல் மரணமடைந்ததால், சாஸ்திரோக்தமாக செய்த உத்தரகிரியைச் செலவுகள் ரூ.500 ஆகிவிட்டன.

ஆகக் கூடி, எனக்கு மாதம் ஒன்று ரூ. 190 செலவாகிறது. என்னுடைய மாத வருவாயோ நூற்றறுபத்தைந்து ரூபாய்தான். ஆகையால் மாதா மாதம் எனக்கு ரூ 25 அதிகச் செலவாகிறது. சிக்கனமாகக் குடும்பம் நடத்துவதற்காக எனக்கு சென்ற வருஷம் ஆன அதிகச் செலவு ரூ. 300. என்னுடைய தாயாரின் திடீர் மரணத்தினால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத செலவு ரூ. 500. சென்ற வருஷத்தில் மட்டும் எண்ணூறு ரூபாய் கடன் பட்டிருக்கிறேன்.

வாழ்க்கைச் செலவுகள் மிகவும் அதிகமானதற்கு, விலைவாசி ஏற்றங்களே காரணம். இதனால் மத்திய வர்க்கத்தினர் எப்படிச் சந்தோஷமாக இருக்க முடியும்?

நமது இலங்கைக் கடிதம்

தோட்ட முதலாளி காட்டும் வழி

ரஜனி

கொழும்பு மார்ச் 29—

அதிக லாபம் பெறுவதில் ருசிகண்ட ஒரு ஐரோப்பியத் தோட்டத் துரை, தோட்டத்தின் லாபத்தைத் தொழிலாளர்களுடன் பங்கு போட்டுக் கொள்ள வேண்டுமென்று சொல்லுவதென்றால் ஆச்சரியம் அல்லவா? சில தினங்களுக்கு முன் இலங்கைக்கு விஜயம் செய்த பண்டித நேருவின் பிரசங்கத்தைக் கேட்ட பின் அந்த ஐரோப்பியர் அவ்வாறு கூற ஆரம்பித்திருக்கிறார். எனவே, நேருஜீயின் பிரசங்கம் இலங்கையிலுள்ளவர்களின் மனதை எவ்வளவு தூரம் கவர்ந்திருக்க வேண்டுமென்பதை மேற்படி சம்பவத்திலிருந்து ஊகித்துக் கொள்ளலாம். சென்ற வாரம் மொரவாக் கோராளைப் பகுதித் தோட்டத் துரைமார் சங்கத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் அதன் தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெறும் ஸ்ரீ ஆர். புரோடி பேசினார். பண்டித நேரு இலங்கைக்கு விஜயம் செய்தபொழுது குதிரைப் பந்தயத் திடலில் நிகழ்த்திய பிரசங்கத்திலே, உலகம் இன்று பரஸ்பர பீதியில் உயிர் வாழுகிறது என்று சொல்லியதை ஸ்ரீ புரோடி சுட்டிக்காட்டி, இந்த பீதி ஒழியவேண்டுமானால் தொழிலாளர்களிடம் முதலாளிகள் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

"வருங்காலம் பொதுஜனங்களின் கையிலிருக்கிறதென்று இந்தியப் பிரதமர் நமக்குச் சொல்லிவிட்டுப் போனது அர்த்தபுஷ்டியுடையது. தொழிலாளர்களுக்கு லாபத்தில் ஒரு சிறு பங்கு கொடுத்து உற்சாகப்



ஜே. கே. ஆர்.

ஒவ்வொரு மாகாண மந்திரி சபையும், தங்கள் வரவு செலவு திட்டத்தைச் சட்ட சபையில் சமர்ப்பித்து வரும் 'சீசன்' இது. நானும், 1949-ம் வருஷத்திய என்னுடைய 'குடும்ப வரவு செலவு'வை உங்கள் முன் சமர்ப்பித்திருக்கிறேன்.

நான் ஒரு ரயில்வே ஊழியன். இந்திய தீப கற்பத்தின் தென்கோடியிலுள்ள ஒரு ரயில்வே சந்திப்பில் சம்பள நிர்ணய கமிஷன் திட்டப்படி ரூ. 55-3-85 E. B. 4-125-130 கிரேடில், தற்சமயம் ரூ. 70 மாதச் சம்பளமாகப் பெறும் மூன்றாவது கிரேடு குமாஸ்தாவாக இருக்கிறேன். எனக்குப் பஞ்சப்படி என்று ரொக்கமாக ரூ. 45 கொடுக்கிறார்கள். என் ரக வேலைக்கு இலவச ரயில்வே வீடு கிடையாது. நான் வேலை செய்யும் நகரில் ஜனத் தொகை ஒரு லக்ஷம் பேர்களுக்குக் குறைவாயிருப்பதால், வீட்டு வாடகை அலவன்ஸ் என்று கொடுக்கப்படும் ரூ. 7-ம் கிடையாது. ஆகவே, நான் இருபது ரூபாய் வாடகை கொடுத்து ஒரு சிறிய வீட்டில் ஒண்டிக் குடித்தனம் இருந்து வருகிறேன்.

இதோடு எனக்கு வருஷத்தில் இரண்டு தடவை ரூ. 300 வீதம், என்னுடைய சொந்த நிலத்திலிருந்து வேறு வருமானம் கிடைக்கிறது. இவைகள் எல்லாம் சேர்த்து என்னுடைய மாத வருமானம் ரூ. 165.

நான் அரிசி ரேஷன் மாத்திரம் ரயில்வே தானியக் கடையில் கண்ட்ரோல் விலைக்கு (மலிவு விலைக்கல்ல) வாங்கிக் கொள்கிறேன். அதனால்தான் எனக்கு முழுப் பஞ்சப்படியையும் ரொக்கமாக ரூ. 45 என்று கொடுக்கிறார்கள். மற்ற எல்லாச் சாமான்களையும், மற்ற ஜனங்களைப் போல நகரிலுள்ள கடைகளில் வாங்கிக் கொள்ளுகிறேன்.

என் குடும்பத்தில் ஆறு நபர்கள். அதாவது நான், என் மனைவி, (என் விதவைத் தாய். அவள் 7-12-49ல் காலகதி யடைந்து விட்டாள்) பத்தொன்பதும், பதினேழும் வயது ஆன இரண்டு பையன்கள், ஒன்பது வயதுள்ள மகள் ஆக ஆறு பேர்.


என் மூத்த பையன் பி.ஏ., முதல் வகுப்பும் அடுத்த பையன் இண்டர் முதல் வகுப்பும், மகள் முதல் பாரமும் படிக்கிறார்கள். அவர்களுக்குப் பள்ளிச் சம்பளம் முறையே ரூ. 17; 14; 3 வீதம், முப்பத்து நாலு ரூபாய் பத்து மாதங்களுக்குக் கட்டுகிறேன். இதோடு ஸ்பெஷல் பீஸ் என்று தனியாகத் தரவேண்டி யிருக்கிறது.

இது தவிர, இந்திய யூனியனிலுள்ள எந்த இடத்திற்கும் போய் வர மூன்று செட் இலவசப் பாஸும், மூன்றிலொரு சார்ஜ் மாத்திரம் கொடுத்து வாங்கும் பாஸ்கள் ஆறு செட்டும் கிடைக்கிறது. இதனால் என் குடும்பத்துக்கு வருஷம் பூராவும் ரயில் பிரயாணச் செலவுகள் கிடையாது.

நான் நகரத்தில் வசிப்பதனாலும், அது ஒரு ரயில்வே சந்திப்பாயிருப்பதாலும், என் பந்துக்களும் மித்திரர்களும் அடிக்கடி என் வீட்டிற்கு விருந்தாளியாக வந்து விடுகிறார்கள். ஆனால் அவர்கள் அதிக நாட்கள் மாத்திரம் தங்குவதில்லை. தவிர, நான் பொடி போடுவதோ, வெற்றிலை பாக்கு புகையிலை உபயோகிப்பதோ, சிகரெட் பிடிப்பதோ கிடையாது. என் குடும்பத்தினர் மாத்திரம் மாதம் ஒரு முறை சினிமாவுக்கோ அல்லது நாடகத்துக்கோ போய்ப் பார்த்து வருவார்கள். நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, நான் சென்ற ஐந்து வருஷங்களில் ஒரு தடவைகூட சினிமாவுக்குச் சென்றதில்லை என்ற உண்மையைச் சொல்லி வைக்கிறேன். இருந்தாலும், அதன்மேல் வெறுப்புக் கிடையாது. எங்களுடைய ரயில்வே கிளப்பிலுள்ள ரேடியோ சங்கீதக் கச்சேரிகளைக் கேட்பதிலேயே என் மனதில் திருப்தியை உண்டாக்கிக் கொள்கிறேன்.

சாயங்காலம் தினந்தோறும், நான் ஆசனம் - பிராணாயாமம் முதலியவற்றை விடாமல் பயிற்சி செய்து வருகிறேன்.

இனி மாதா மாதம் சராசரி என் குடும்பச் செலவுகளைக் கொடுக்கிறேன்.





சுவேதாங்கன் சொன்னதைக் கேட்டதும் பீஜகுப்தன் திணுக்குற்றான். அடுத்த கணமே அவன் யசோதராவின் மீது புதைந்திருந்த தன் பார்வையைச் சட்டென்று அகற்றினான். யசோதராவும் பீஜகுப்தன் மீது படிந்திருந்த தன் பார்வையை அகற்றிச் சுவேதாங்கனைப் பார்க்கலானாள்.

பீஜகுப்தன் மிருத்யுஞ்ஜயரின் பக்கம் திரும்பி, "என், ஸ்வாமி! நகரத்தைச் சுற்றிப் பார்க்கப் போய் வருவது பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்னவோ?" என்று கேட்டான்.

"இன்று எனக்கு என்னவோ அலுப்பாயிருக்கிறது. ஆகவே, வெளியே புறப்பட வேண்டும் என்று தோன்றவில்லை. நீங்கள் எல்லோரும் வேண்டுமானால் போய் வாருங்களேன்!" என்றார் மிருத்யுஞ்ஜயர்.

சுவேதாங்கன் யசோதராவைப் பார்த்து, "தேவி யசோதரா! தாங்கள் போகவில்லையா?" என்று கேட்டான்.

யசோதரா இலேசாகச் சிரித்து, "இங்கே உட்கார்ந்துதான் நான் என்ன செய்யப் போகிறேன்?" என்றாள்.

பீஜகுப்தன் ஏதோ யோசித்தவாறு, "எனக்கும் இன்று வெளியே போக வேண்டும் என்று தோன்றவில்லை" என்றான்.

"அப்படியானால் சுவேதாங்கரையாவது அழைத்துப் போகத் தாங்கள் எனக்கு அநுமதி தருவீர்கள் அல்லவா?" என்று பீஜகுப்தனிடம் கேட்டாள் யசோதரா.

"தாராளமாக அழைத்துப் போங்கள். எனக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை" என்றான் பீஜகுப்தன். என்ன இருந்தாலும் அந்த வார்த்தை அவன் விருப்பத்துக்கு விரோதமாகவேதான் அவனுடைய வாயிலிருந்து வெளி வந்தது.

பீஜகுப்தனுடைய அநுமதியைப் பெற்றதும் யசோதரா "ஸ்வாமி! நாம் புறப்படுவோமா?" என்று சுவேதாங்கனைப் பார்த்துக் கேட்டாள்.

சுவேதாங்கன் அம்மாதிரிச் சந்தர்ப்பத்தைத்தானே எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்! உடனே அவன் மிகவும் மகிழ்ச்சியுடன், "இதோ நான் தயார்!" என்று சொல்லி எழுந்தான்.

பீஜகுப்தனும் அநுமதி யளிக்கும் பாவனையில் தலையை அசைத்தான். அடுத்த கணமே யசோதரா சுவேதாங்கனை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள். (தொடரும்)

ஒரு பொருளிடத்தில் வைராக்கியம் ஏற்பட்டு விட்டது என்றால் அந்தப் பொருள் நமக்குத் திளைத்துத் திகைத்து விட்டது. அதனிடம் நமக்குப் பரிபூரண திருப்தி ஏற்பட்டு விட்டது என்றுதான் அர்த்தம். அன்பு என்னும் சொல் ஆசையைக் குறிக்கிறது அல்லவா? அதே போல வைராக்கியம் என்னும் சொல் திருப்தியைத்தான் குறிக்கிறது. நாம் இதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மறக்கக்கூடாது" என்றான்.



இதைச் சொல்லி முடித்ததும், பீஜகுப்தனின் பார்வை எதேச்சையாக யசோதராவின் பக்கம் திரும்பியது. யசோதராவின் கண்களும் பீஜகுப்தனின் கண்களும் ஒன்றை யொன்று நோக்கின.

சிறிது நேரம் வரை அங்கே மௌனம் ஆட்சி செலுத்தியது. அந்த மௌனத்திலே மரண அமைதி குடி யிருந்தது; துயரத்தின் சாயை படர்ந்திருந்தது. ஊசி விழுந்தாலும் ஓசை கேட்கும் அளவுக்கு அங்கே ஓசை அடங்கிவிட்டது. சுவேதாங்கன் மட்டும் ஏதோ தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். மற்றவர்களும் என்ன பேசுவது என்று புரியாமல் மௌனமே உரு வெடுத்தவர்களாக உட்கார்ந்திருந்தனர். சுவேதாங்கன் சம்பந்தா சம்பந்த மில்லாமல் அங்கே அநுசிதமான வார்த்தைகளை அல்லவா சொல்லி விட்டான்? அது மட்டுமா? தன் எஜமானனான பீஜகுப்தனுடைய பேச்சைக் கண்டித்துப் பேசினானே. அது அவனுடைய மாபெரும் குற்றம் அல்லவா? அதை நினைக்க நினைக்கச் சுவேதாங்கனுக்கு மனவருத்தம் மிகவும் மேலிட்டது.


யசோதரா சுவேதாங்கனின் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவனுடைய முகம் மிகவும் களையிழந்து காணப்பட்டது. அவள் சுவேதாங்கனின் உள்ளத்து உணர்ச்சிகளை ஒருவாறு புரிந்து கொண்டாள். அவள் அங்கே நிலவியிருந்த மௌனத்தைக் கலைத்துப் பீஜகுப்தனைப் பார்த்து, "என், ஸ்வாமி! இங்கே இன்னும் எவ்வளவு நாட்கள் தங்குவதாக உத்தேசம்?" என்று கேட்டாள்.

"நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. இப்பொழுதே பாடலி புத்திரத்துக்குத் திரும்பிப் போய் விடுவோமா என்று ஒரு சமயம் தோன்றுகிறது. ஆனால் அடுத்த கணமே இன்னும் கொஞ்ச நாட்கள் இங்கே தங்கித்தான் செல்வோமே என்றும் தோன்றுகிறது" என்றான் பீஜகுப்தன். பிறகு மிருத்யுஞ்ஜயரின் பக்கம் திரும்பி, "என், ஸ்வாமி! தாங்கள் இங்கே இன்னும் எத்தனை நாட்கள் தங்குவதாக உத்தேசித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

மிருத்யுஞ்ஜயர் யசோதராவின் பக்கம் திரும்பிப் பார்த்து, "என் இஷ்டத்துக்கு இங்கு இடமே இல்லை. யசோதராவின் விருப்பத்துக்கு இணங்க நான் இங்கே வந்திருக்கிறேன். ஆகவே அவளுடைய விருப்பத்தைப் பொறுத்திருக்கிறது நான் இங்கிருந்து புறப்படுவது!" என்றார்.

பீஜகுப்தன் யசோதராவைப் பார்த்தான். அவள் இலேசாகப் புன்முறுவல் பூத்துக் கொண்டிருந்தாள். யசோதரா அன்று சிரித்த அந்த மனோமோகனச் சிரிப்பிலே, ஒரு வித இந்திர ஜால ஒளி 'தக தக' வென்று கண்ணைப் பறிப்பது போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பீஜகுப்தன் அன்றுதான் முதல் தடவையாக யசோதராவின் எழில் மிக்க ரூபலாவண்யத்தைக் கண்டான். அமிர்தத்தை வர்ஷித்துக் கொண்டிருந்த அவளுடைய அந்த ரூபலாவண்யத்திலே அவன் தன் மனதையே பறி கொடுத்தும் விட்டான். அப்படியே அதை அள்ளிப் பருகிவிட வேண்டும் என்னும் அவா அவனை உந்தித் தள்ளியது. ஆகவே வைத்த கண் வாங்காமல் அவன் தன் பார்வையினாலேயே அவளுடைய ரூபலாவண்யத்தைப் பருகத் தொடங்கி விட்டான். அப்பொழுது யசோதராவும் அவனையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அதைக் கண்ணுற்ற மிருத்யுஞ்ஜயர் தம் பார்வையை வேறுபுறம் திருப்பி வெளியுலகைப் பார்க்கலானார்.

அக்காட்சியைக் காணச் சுவேதாங்கனுக்குச் சகிக்கவில்லை. அவன், "ஸ்வாமி! நகரத்தைச் சுற்றிப் பார்த்து வரப் போக வேண்டும் என்று சொன்னீர்களே, இன்று புறப்படுவதாக உத்தேசமில்லையா?" என்று பீஜகுப்தனைப் பார்த்துக் கேட்டான்.



சென்ற மார்ச்சு மாதம் 10-ந் தேதி கடலூரில் நடந்த கூடாரச் சினிமா மகாநாட்டில், திரு ஆர். டி. கோவிந்தன் வரவேற்புரை நிகழ்த்துகிறார். கீழே: ஸ்ரீமதி குட்டியம்மாளு அம்மாள் எம். எல். ஏ. மகாநாட்டில் பிரசங்கம் செய்கிறார்.



சுவேதாங்கனுக்குப் பேசச் சரியான சந்தர்ப்பம் ஒன்று வாய்த்தது. அவன் மிருத்யுஞ்ஜயரின் கட்சியை ஆதரித்து, "ஸ்வாமி! உண்மை என்பது என்ன? அதை எப்பொழுதாவது அறிந்துகொள்ள முடியுமா, அல்லது இதுவரை யாராவது அறிந்து கொள்ளத்தான் முடிந்திருக்கிறதா? நன்கு நீர் ஆராய்ந்து பார்த்தால், நமக்குச் சாதகமான சூழ்நிலையைத்தான் நாம் உண்மை என்று மாற்றுப் பெயர் கொண்டு அழைக்கிறோம் என்பது தெளிவாக விளங்கும். இன்னுமொரு விஷயம். சூழ்நிலை எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அது நிமிஷத்துக்கு நிமிஷம் மாறும் தன்மை வாய்ந்தது என்பதையும் நாம் மறக்கக் கூடாது" என்றான்.

மிருத்யுஞ்ஜயரின் முகத்திலே இலேசாக இளநகை படர்ந்தது. அவர் மிகவும் அன்புடன், "குழந்தாய் சுவேதாங்கா! நீ சொல்லும் விஷயம் உண்மையாக இருந்த பொழுதிலும் இப்பொழுது நம்மிடையே எழுந்திருக்கும் பிரச்னையைச் சரியாக விளக்கித் தீர்த்து வைப்பதாக அமையவில்லை" என்றார். பிறகு பக்கத்திலிருந்த பீஜகுப்தனைத் திரும்பிப் பார்த்து, "என் பீஜகுப்தா? நீ சொன்ன விஷயத்தை இன்னும் தெளிவாகச் சற்றுப் புரியும்படி சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

சுவேதாங்கனின் அநுசிதமான பதிலைக் கேட்டுப் பீஜகுப்தன் மிகவும் மனம் நொந்து போய்விட்டான். இருந்தாலும் அவன் வறட்சி ததும்பிய குரலில், "நான் சொன்ன விஷயம் மிகவும் தெளிவானது. இன்னும் அதை விளக்கிச் சொல்லுவது என்றால் அது எப்படி என்றுதான் எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் எனக்குத் தெரிந்த வரையில் விளக்கிச் சொல்லுகிறேன். அதாவது மனிதன் உண்மையில் ஒருபொழுதும் வைராக்கிய புருஷனாக ஆவதில்லை; ஆகவும் முடியாது. வைராக்கியம் என்பது மரணத்துக்கு அறிகுறி. சாதாரணமாக நாம் வைராக்கியம் என்று சொல்லுகிறோமே, எதைத் தெரியுமா? அன்பு இடம் பெயர்வதைத்தான் நாம் அப்படிச் சொல்லுகிறோம். ஒரு பொருள் மீது வைத்துள்ள அன்பை மாற்றி இன்னொரு பொருள்மீது வைப்பதைத்தான் நாம் பொதுவாக வைராக்கியம் என்று மாற்றுப் பெயர் கொண்டு அழைக்கிறோம். ஆகவே நாம் சொல்லும் வைராக்கியத்துக்கு வெறுப்பு என்று அர்த்தம் கொள்ளுவது சரியல்ல; திருப்தி என்று அர்த்தம் கொள்ளுவதுதான் பொருந்தும்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

யார் பாக்கியசாலி?

சித்திரலேகா பீஜகுப்தனுடைய வாழ்க்கையிலிருந்து அவனுடைய விருப்பத்தை அறியாமலே வெளியேறி விட்டாள். அதே போல் யசோதாராவும் அவனுடைய வாழ்க்கையில் அவனுடைய விருப்பத்தை உணராமலே வந்து புகுந்தாள். இதைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்த பீஜகுப்தன் தன்னை அறியாமலே 'களுக்'கென்று சிரித்து விட்டான். அவனுக்கு வாழ்க்கையே ஒரு பெரும் புதிராகத் தோன்றியது.

காசி நகரத்தின் கோலாகலத்திலே, பீஜகுப்தன் தன்னுடைய உள்ளத்தில் உண்டாகி யிருக்கும் புயலை ஒருவாறு அடக்கி விடலாம் என்று எண்ணினான். ஆனால் அவன் எவ்வளவோ முயற்சி செய்தும் அந்தக் காரியம் கைகூடவில்லை. உள்ளத்திலே வீசிக்கொண்டிருந்த புயல் திசை மாறி அடித்தது; அவ்வளவுதான். நிழற்படம் போல் அவனுடைய கண்களுக்கெதிரே நர்த்தனம் புரிந்து கொண்டிருந்த நடன ராணி சித்திரலேகாவின் சித்திரம் மறைந்தது. அதன் ஸ்தானத்தில் யசோதாராவின் உருவப்படம் வந்து நின்றது. துயரத்துடிப்பு இன்பத் துடிப்பாக மாறியது. பீஜகுப்தனும் அவனுடன் கூடவந்தவர்களும் காசிக்கு வந்து கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆகிவிட்டது.



அன்று ஒருநாள் மாலை, எல்லோரும் உட்கார்ந்து காசி நகரத்தின் எழில் மிக்க காட்சிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். பேச்சின் தொடர்ச்சியில் மிருத்யுஞ்ஜயர், "எனக்கு இந்தப் புண்ணிய பூமி காசியிலேயே வாசம் செய்ய வேண்டும் என்றுதான் ஆசையா யிருக்கிறது. ஆனால் என்ன செய்வது? இன்னும் இந்தக் குடும்ப பந்தனத்திலேயே நான் உழலவேண்டி யிருக்கிறதே! குடும்ப பந்தனத்திலிருந்து விடுவித்துக் கொண்டபின் அல்லவா நான் காசி வாசத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்?" என்றார். அதைச் சொல்லி முடித்ததும் அவர் பொருள் புதைந்த பார்வையில் பீஜகுப்தனை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தார்.

மிருத்யுஞ்ஜயர் சொன்ன விஷயத்தின் பொருளைப் புரிந்துகொள்ள முயற்சிக்காமலேயே பீஜகுப்தன், "ஸ்வாமி! ஆசையுள்ளவனுக்கும் ஆசையில்லாதவனுக்கும், பற்று உள்ளவனுக்கும், பற்று அற்றவனுக்கும், கிருஹஸ்தனுக்கும், சந்நியாசிக்கும் அதிக வித்தியாசம் ஒன்றும் இல்லை. இருக்கும் வித்தியாசமும் மிக மிகக் குறைவானது தான். இன்னும் ஊடுருவி உண்மையை ஆராய்ந்து பார்ப்போமானால் துளிக்கூட வித்தியாசம் இல்லையென்று கூடச் சொல்லி விடலாம்" என்றான். அதைச் சொன்னதும் அவனுக்குச் சிரிப்புப் பீறிட்டுக் கொண்டு வந்தது. அவன் வந்த சிரிப்பை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "ஸ்வாமி, நான் சொல்லுவது தங்களுக்குப் புதிர் போடுவது போலிருக்கலாம். ஆச்சரியத்தையும் அவநம்பிக்கையையும் ஏக காலத்தில் விளைவிக்கலாம். ஆனால் நான் சொல்லுவது அவ்வளவும் உண்மை. அதில் துளிக்கூடப் பொய்க் கலப்பே கிடையாது" என்றான்.

போகவிட மாட்டேன். தெரியுமா?" என்றான் மிகவும் அழுத்தந் திருத்தமாக.

"போக விடமாட்டீர்களா? அப்படியானால் என்னைத் தடுத்து நிறுத்தி விடுவீர்களோ?" என்று கேட்டாள் சித்திரலேகா.

"தடுத்து நிறுத்துவதா? அதுவும் உன்னைத் தடுத்து நிறுத்துவதா? பலம் இல்லாதவன் பலமுள்ளவனைப் பிடித்து நிறுத்துவது என்பது எங்கேயாவது நடக்கக் கூடிய காரியமா?—நான் உன்னை வேண்டிக் கொள்ளலாம்; கெஞ்சிக் கேட்டுக் கொள்ளலாம்; மன்றாடிப் பார்க்கலாம். இதைத் தவிர நான் வேறு என்ன செய்ய முடியும்? என்னைக் கெடுத்தது—கீழே பிடித்துத் தள்ளியது நீதான் என்பதையாவது ஒப்புக் கொள்ளுகிறாய் அல்லவா?"

"நான் தங்களைக் கெடுத்தேனா? கீழே பிடித்துத் தள்ளினேனா? நன்றாயிருக்கிறதே, தாங்கள் சொல்லுவது! தாங்களே தான் தங்களைக் கெடுத்துக் கொண்டீர்கள்; கீழே பிடித்துத் தள்ளிக் கொண்டீர்கள். அதற்கு நான் எந்த விதத்திலும் பொறுப்பாளியில்லை. ஆயினும் தாங்கள் கெடுவதற்கு நானும் ஒரு கருவியாக—சாதனமாக இருந்திருக்கிறேன் என்பதை வேண்டுமானால் ஒப்புக் கொள்ளுகிறேன்" என்றாள் சித்திரலேகா.

"சரி, அதுவே போதும். நான்தான் என்னைக் கெடுத்துக் கொண்டேன்; நானாகவேதான் கீழே விழுந்தேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதே போல் நான் தானே என்னைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும்? நானாகவேதானே என்னை உயர் தூக்கி விட்டுக் கொள்ள வேண்டும்? நான் கெடுவதற்கு நீயும் ஒரு சாதனமாக—கருவியாக இருந்ததாக ஒப்புக் கொள்ளுகிறாயே! அம்மாதிரியே நான் சீர் திருந்துவதற்கும் ஒரு சாதனமாக — கருவியாக இருக்க வேண்டியது உன் கடமை அல்லவா?" என்று கேட்டான் குமாரகிரி.

அதைக் கேட்டதும் சித்திரலேகா தலை குனிந்தாள். குமாரகிரியையே இவ்வளவு நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்த அவளுடைய கண்கள் பூமியில் புதைந்தன. "தாங்கள் சொல்லுவது நியாயம்தான்!" என்று ஒரே வாக்கியத்தில் பதில் சொல்லி நிறுத்தினாள் அவள்.

"அப்படியானால் என் வேண்டுகோளை நிராகரிக்க மாட்டாய் அல்லவா? நான் என் சாதனையைப் பூர்த்தி செய்து கொள்ளும் வரை சில தினங்களாவது தங்கி யிருப்பாய் அல்லவா?" என்று கேட்டான் குமாரகிரி.

சித்திரலேகா சிறிது நேரம்வரை மௌனமாக நின்றாள். பிறகு அவள் மெதுவான குரலில், "யோகி! இதற்காகத் தங்களுக்கு எத்தனை நாட்கள் அவகாசம் வேண்டும்?" என்று கேட்டாள்.



"அவகாசமா? எதற்கு? நான் வெற்றி பெற்று விட்டால் அப்புறம் உனக்கு என்னுடன் இருப்பதில் என்ன ஆட்சேபணை? நான் வெற்றி பெற்று விட்டால், நான் போகும் பாதை சரியான பாதை என்று ஆகிவிடுகிறதல்லவா? என் வழி சரியான வழியாக இருந்தால் அதைப் பின்பற்றுவதற்கென்ன?" என்றான் குமாரகிரி.

"முடியாது. நான் தங்கள் வழியே போக முடியாது. இருந்தாலும் தாங்கள் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுவதனால் தற்சமயம் தங்களுடன் தங்கச் சம்மதிக்கிறேன். ஆனால் எனக்கு எப்பொழுதாவது இங்கிருந்து போய்விட வேண்டும் என்று தோன்றினால் தங்களிடம் சொல்லுகிறேன். அப்பொழுது தாங்கள் என்னைத் தடுக்கக் கூடாது. தடுத்தாலும் நான் கேட்க மாட்டேன். தெரிந்ததா?" என்றாள் சித்திரலேகா.

நடனராணி சொன்ன விஷயங்கள் மிகக் கசப்பாக இருந்த பொழுதிலும் முற்றிலும் உண்மையானவை என்பது அவனுக்குத் தெளிவாக விளங்கியது. அவன் தன்னுடைய பலவீனத்தையும் நன்கு உணர்ந்து கொண்டான். தன் தோல்வியின் பயங்கர ரூபத்தையும் அவன் தன் மனக் கண்களால் கற்பனை செய்து பார்த்தான். பிறகு அவன் தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான். சிறிது நேரத்துக் கெல்லாம் அவன் எழுந்து நின்றான். அவன் முகத்திலே படிந்திருந்த வெறுப்பு மறைந்தது. கண்களில் பழையபடி பிரகாசம் ஏற்பட்டது. "நடன ராணி! நீ சொல்வது உண்மைதான். நான் உனக்கு என்னையே ஆத்ம சமர்ப்பணம் செய்துவிட்டேன் என்பதும் வாஸ்தவம். நான் உன்னைக் காட்டிலும் பலம் குன்றியவன் என்பதும் ஊர்ஜிதமாயிற்று. கடவுள் உன் மூலமாகத் தலைக் கேறியிருந்த என் கர்வத்தைக் குலைத்து விட்டார்; என் சிறுமையை எனக்குத் தெற்றென விளக்கி விட்டார். ஆகவே நான் மேலே செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றியும் ஒருவாறு தீர்மானம் செய்து கொண்டு விட்டேன். முதல் காரியமாக நான் உன்னை வெற்றி கொள்ளுவேன். நான் உன்னை வெற்றி கொள்ள விரும்புவது உன்னைக் காதலிப்பதற்காக அல்ல. உன்னை எப்படியாவது வெற்றி கொள்ள வேண்டும். அதப் பாதாளத்தில் விழுந்து கொண்டிருக்கும் நம்மை நாமே உயரத் தூக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஒரு நோக்கத்தைத் தவிர வேறொன்றுமில்லை. புரிந்ததா? இனி வருங் காலத்தில் நீ குமாரகிரியை இவ்வளவு பலம் குன்றியவனாகக் காணமாட்டாய்; காணவும் முடியாது. இது நிச்சயம். என் சொல்லை நீ பரிபூரணமாக நம்பலாம்" என்றான்.

சித்திரலேகா தன் குரலில் கம்பீரத்தை வரவழைத்துக் கொண்டு, "இந்த விஷயத்தில் குருதேவருக்கு என்னால் இயன்ற உதவியைச் செய்ய விரும்புகிறேன்" என்றாள்.

"எப்படி?" என்று கேட்டான் குமாரகிரி.


"நான் குருதேவரின் ஆசிரமத்தை விட்டு வெளியேற விரும்புகிறேன். ஏனெனில் குருதேவரின் மார்க்கத்திலே நாம் இடையூறாகக் குறுக்கே நிற்கிறோம் என்பதை நான் நன்கு உணருகிறேன். பிறருக்கு இடைஞ்சல் செய்வது மகா பாதகம் அல்லவா? ஆகவே, குருதேவா! எனக்கு ஆசிரமத்தை விட்டு வெளியேற அநுமதி அளியுங்கள்!" என்று மிகவும் பணிவுடன் சொன்னாள் சித்திரலேகா.

"நடன ராணி! அது முடியாத காரியம். நீ என் ஆசிரமத்தை விட்டு வெளியேற முடியாது. நீ இங்கிருந்து போய்விட்டால் அப்புறம் நான் யாரை வெற்றி கொள்ளுவது? நீ என்னுடன்தான் இருக்க வேண்டும். தெரிந்ததா?" என்றான் குமாரகிரி.

"யோகி! தாங்கள் என்மீது வெற்றி கொள்ள வேண்டுமா? எதற்காக? தாங்கள் தங்களையே அல்லவா வெற்றி கொள்ள வேண்டும்? நான் இங்கே இருக்கும் வரையில் தங்களால் தங்களை வெற்றி கொள்ள முடியாது என்பதை நான் நன்கு அறிவேன். ஆகவேதான் நான் இங்கிருந்து வெளியேற விரும்புகிறேன். நான் வெளியேறிப் போனால்தான் தங்களுக்கு நன்மை ஏற்படும். புரிகிறதா?" என்றாள் சித்திரலேகா.

குமாரகிரியின் முகம் சிவந்தது. அவன் மிகவும் கடுமையான குரலில், "கூடாது. நீ வெளியேறக் கூடாது. நீ என்னுடனேயேதான் இருக்க வேண்டும். என்னை நீ பலமே இல்லாதவன் என்று எண்ணிவிட்டாய் என்பது உன் பேச்சிலிருந்து நன்றாகத் தெரிகிறது. நீ இங்கிருந்து போய் விட்டால் என்னுடைய விரோத மனப்பான்மையும் போய்விடும். அப்புறம் நான் என்னையே எப்படி வெற்றி கொள்ள முடியும்? நான் என்னிடம் பிரயோகித்துப் பார்க்கப் போகும் சோதனைக்கு ஒரு சாதனம் — ஒரு கருவி வேண்டும் அல்லவா? கடவுளாகப் பார்த்து அதற்காகத் தான் உன்னை இங்கே என்னிடம் அனுப்பி வைத்திருக்கிறார். நான் தோல்வியுற்றேன். ஆனால் தோல்வி என்ற வார்த்தைக்கே என் வாழ்க்கையில் இடமில்லை. நான் முற்றிலும் வெற்றி பெறும் வரை உன்னை இங்கிருந்து





"நடனராணி! நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று குமாரகிரி சொன்னான் அல்லவா? அதைக் கேட்டதும் சித்திரலேகா 'கல கல' வென்று சிரித்தாள். "தாங்கள் என்னைக் காதலிக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் தங்களைக் காதலிக்கவில்லையே! அதற்கென்ன செய்வது? ஒரு கணமாவது தங்கள்மீது ஆட்சி செலுத்திவிட வேண்டும். தங்களை அடக்கி ஆண்டுவிட வேண்டும் என்ற ஆசை என் உள்ளத்தில் எழுந்தது. அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக நான் முயற்சி செய்தேன். அந்த முயற்சியில் வெற்றியும் கண்டேன். அதனால் என்ன வந்துவிட்டது? என்னவோ நான் நினைத்த காரியம் கைகூடிற்று. அவ்வளவுதானே? ஆண்மீது ஆட்சி செலுத்த வேண்டும். ஆணை அடக்கி ஆளவேண்டும் என்று ஒரு பெண் நினைத்தால் அவள் அந்த ஆணைக் காதலிப்பதாக அர்த்தம் கொள்ளக் கூடாது. அவள் அப்படிச் செய்வது காதலுக்கு அறிகுறியும் ஆகாது. ஏனெனில் இயற்கை பெண்களைப் பிறர்மீது ஆட்சி செலுத்துவதற்காகவோ, பிறரை அடக்கி ஆளுவதற்காகவோ சிருஷ்டிக்கவில்லை. பிறருக்கு அடங்கி நடப்பதற்காகவேதான் அவர்களைச் சிருஷ்டித்திருக்கிறது. பெண்கள் ஆண்களின் காலடிகளில் ஆத்ம சமர்ப்பணம் செய்வதற்காகவேதான் படைக்கப்பட்டிருக்கிறார்கள். பெண் தன்னைக் காட்டிலும் பலக் குறைவான மனிதனைக் காதலிக்க மாட்டாள். அப்படிக் காதலிப்பதும் அவளால் முடியாத காரியம். எவனொருவன் பெண்ணின் கையிலே பெட்டிப் பாம்பாக அடங்கி விடுகிறானோ, அவன் ஏழேழு பிறவி யெடுத்தாலும் அந்தப்பெண்ணின் காதலுக்குப் பாத்திரனாக முடியாது. பெண்ணின் போக்கே அலாதி. ஆணின் காலடிகளில் ஆத்ம சமர்ப்பணம் செய்வதும், 'தான் தனி, தன் காதலன் தனி' என்னும் வித்தியாச உணர்ச்சியை விட்டு ஒழித்து ஒருயிர் ஈருடலாக ஆவதும் தான் பெண்ணின் இயல்பு. ஆகவே பெண் தன்னை வெற்றி கொண்டு அடக்கி ஆளும் திறமை வாய்ந்த ஆடவனைத்தான் காதலிப்பாள். யோகி குமாரகிரி! இயற்கையின் நியதி எப்படி விசித்திரமாயிருக்கிறது, பார்த்தீர்களா? இவ்வளவு தூரம் நான் சொன்னதன் சாரம் என்ன? ஆணின் அன்பு பெண்ணை அடக்கி ஆளுவதாக அமைய வேண்டும். பெண்ணின் காதல் ஆணின் கையில் தன்னையே ஒப்படைத்து விடுவதாக இருக்க வேண்டும் என்பதுதான். ஆனால் நம் இருவர் விஷயத்திலும் இதற்கு நேர் மாறாக அல்லவா நடந்திருக்கிறது! நான் தங்களுக்கு எஜமானியாகி விட்டேன். தாங்களோ எனக்கு அடிமையாகி விட்டீர்கள். நான் தங்களை அடக்கி ஆண்டு விட்டேன்; தங்களை என் கைக்குள்ளேயே கடப் போட்டுக் கொண்டு விட்டேன். தாங்களோ என்னிடம் தங்களையே ஆத்ம சமர்ப்பணம் செய்து விட்டீர்கள். அது மட்டுமா? சூத்திரதாரி போல நான் ஆட்டும் விதம் எல்லாம் ஆடவும் தயாராகி விட்டீர்கள். அப்படியிருக்கும்பொழுது தாங்கள் எந்தப் பலத்தைக் கொண்டு இவ்வளவு துணிச்சலாக என் காதலைப் பெற விரும்புகிறீர்கள்?" என்று கேட்டாள்.

யோகி குமாரகிரி மௌனமாக அவள் சொல்லுவதை யெல்லாம் கேட்டான்.



தமிழ் மக்களின் வாழ்க்கையை ஆனந்த மயமாகச் செய்வதற்குப் பேருதவி . செய்திருப்பவர்களில் ஸ்ரீமதி டி. ஏ. மதுரம் முதன்மை ஸ்தானம் வகிக்கிறார். அவருடைய நடிப்புத் திறமையும் அழுந்தத் திருத்தமாய் அழகாகப் பேசும் திறமையும் பிரசித்தி பெற்றவை. ஸ்ரீமதி டி. ஏ. மதுரம் நடித்த நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்ப் படங்களிலிருந்து எடுத்த சில தோற்றங்களை இங்கே காணலாம்.


டி.எ.மதுரம்

வது தன் கணவனுடன் வாதாடி மகனை மன்னிக்கும்படி செய்யவேண்டும் என ஆவல்கொண்டாள். ஒரு நாள் தன் கணவன் சந்தோஷமா யிருக்கும் சமயம் பார்த்து நாருடீனைப் பற்றிப் பேசினாள். அவன் எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டான். கடைசியில் நாருடீனுக்கு அடக்கத்தின் அவசியத்தைக் கற்பிக்காமல் அவனை மன்னிக்க முடியாது என்று அவன் கூறி விட்டான்.



இதைக் கேட்ட மந்திரியின் மனைவி கூறினாள்:

"நீங்கள் சொல்வது ரொம்ப சரி. நம்முடைய மகனுக்கு அடக்கத்தைக் கற்பிக்க நான் ஒரு யோசனை கூறுகிறேன். இரவு நேரங் கழித்துத்தான் நாருடீன் வருகிறான். அவன் வரும் சமயம் நீங்கள் கதவுக்குப் பின் மறைந்திருங்கள். அவன் வரும் சமயம் பார்த்து அவனைக் கொல்வதற்குப் பாய்வது போல் கத்தியுடன் அவன் மீது பாயுங்கள். அப்பொழுது நான் குறுக்கிட்டு அவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கும்படி கெஞ்சுகிறேன். அவனும் என் உதவியால் உயிர் பெற்றதாக நினைத்துக் கொள்வான். அவனுக்கு நல்ல புத்தி உண்டாகி விடும். அப்புறம் நீங்கள் விதிக்கும் நிபந்தனைப்படி அவன் பேரழகியை அடையட்டும்."

இந்த ஏற்பாட்டை மந்திரி காதலன் ஒப்புக் கொண்டான். நடுநிசியில் தன் வீட்டு வாசற் கதவிற்குப் பின் கையில் வாளுடன் மறைந்திருந்தான். வழக்கம் போல் நாருடீன் உள்ளே நுழைந்தான். அச்சமயம் திடீரென காதலன் அவன் மீது பாய்ந்து அவனைக் கீழே விழ்த்தினான். உடனே அவனைக் கொல்லப் போவது போல் தன் வாளை வீசினான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த மந்திரியின் மனைவி குறுக்கே புகுந்து தன் கணவன் கையைப் பிடித்துக் கொண்டு, "நாதா! கோபம் கொள்ள வேண்டாம். என்ன இருந்தாலும் நாருடீன் நம்முடைய மகன் அல்லவா? அவனை மன்னித்து அவனுக்கு உயிர்ப்பிச்சை அளியுங்கள்" என்று மன்றாடினாள்.

நாருடீனும் தன் தந்தையின் காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டான். ஒரு புறம் மனைவியும் மற்றொரு புறம் தன் குமாரனும் வேண்டிக் கொள்ளவே மந்திரியின் மனம் இளகிவிட்டது. மகனை மன்னித்துவிட்டு "முட்டாளே, பெரும் தவறு செய்து விட்டாய். உன் தாய் தலையிடாவிட்டால் உன் உயிர் இதற்குள் எமலோகம் போய்ச் சேர்ந்திருக்கும். பாரசீகப் பேரழகியை நீ உயிரைப் போல் நேசிப்பதால் அவளை நீயே அடைவாயாக. ஆனால் அவளை இனி அடிமைப் பெண்ணாகப் பாவிக்கலாகாது. அவளை மனைவியாக ஏற்றுக் கொள். அவளை நீ விற்கக் கூடாது. அவளை விட்டுப் பிரியவும் கூடாது. இந்த நிபந்தனைப்படி நடப்பதாக வாக்களிப்பாயா?" என்றான். (தொடரும்)

> ### மொத்தம் எவ்வளவு?
>
> சந்திரிகையின் தந்தை ஒருநாள் அவளுக்கு ஒரு பைசா கொடுத்தார். இரண்டாவது நாள் இரண்டு பைசாக் கொடுத்தார். மூன்றாவது நாள் நான்கு பைசாக்கள் கொடுத்தார். இப்படி முதல் நாள் கொடுத்ததைப்போல் மறுநாள் இரண்டு மடங்காக இருக்கும்படி முப்பது நாள் கொடுத்து வந்தார். மாத முடிவில் சந்திரிகையிடம் எவ்வளவு இருக்கும்?
>
> (விடை அடுத்த இதழில்)

செய்த தவறை அறிந்து விட்டானானால் உடனே அதை அரசனிடம் சொல்லுவான். அரசன் விரும்பிய லட்சணங்களுள்ள அடிமைப் பெண்ணை வாங்கி, அவளை நான் என் மகனுக்குத் தானம் செய்துவிட்டதாகக் கூறுவான். அந்தப் பெண்ணை அடைய அரசனைவிட நம் மகன்தான் அதிகத் தகுதியுள்ளவன் என்று நான் கருதியதாக ஸவி அரசனிடம் கோள் சொல்வான். இதைக் கேட்டால் அரசன் என்மீது எவ்வளவு கோபம் கொள்வான் என்பதை நினைக்கவே என் மனம் நடுங்குகிறது. நம் மகனுடைய அசட்டுத் தனத்தினால் நமக்கு என்னென்ன ஆபத்து ஏற்படப் போகிறதோ?" என்றான்.


இதைக் கேட்ட அவன் மனைவி அவனுக்கு ஆறுதல் கூறினாள்: "நீங்கள் நினைப்பது போன்ற கஷ்டங்கள் நமக்கு நேராது. நீங்கள் அனாவசியமாகக் கவலைப்படாதீர்கள். நமக்கு என்ன பணம் இல்லையா? பதினாயிரம் தங்க நாணயங்களை வீசினால் இன்னும் ஓர் அடிமைப் பெண் கிடைப்பாள். அப்படிக் கிடைத்து விட்டால் பாரசீகப் பேரழகியை நம் மகன் நூருடீனே வைத்துக் கொண்டு போகட்டும். இதற்குள் மந்திரி ஸவி நடந்தவற்றை அரசனிடம் சொல்லிவிட்டால் அதற்கும் நீங்கள் அஞ்ச வேண்டாம். நீங்கள் வாங்கின அடிமைப் பெண் அரசன் விரும்பும் குணங்கள் படைத்தவள் அல்ல என்று சொல்லிவிடுங்கள்."

மனைவியின் ஆறுதல் மொழிகளைக் கேட்ட காஹனின் கவலை சற்றுக் குறைந்தது. ஆனால் தன் மகன் மீது ஏற்பட்ட கோபம் மாத்திரம் அவனுக்குத் தணியவில்லை.

தன் தந்தை கோபமடைந்திருப்பதை அறிந்த நூருடீன் அவனை நேருக்கு நேராக உடனே சந்திக்க விரும்பவில்லை. அன்று அவன் வீட்டிற்கு வெகு நேரம் கழித்துத்தான் திரும்பினான். தந்தை படுக்கப் போய்விட்டார் என்பதை அறிந்த பிறகு வந்து மெல்லக் கதவைத் திறந்தான். காலையில் யாரும் எழுந்திருப்பதற்கு முன்பே நூருடீன் வெளியே சென்றுவிட்டான்.

அதிகாலையில் எழுந்திருந்து வெளியே செல்வதும் இரவு வெகு நேரம் கழித்து வீடு திரும்புவதுமாக ஒரு மாதம் கழிந்தது. தன் மகன் இவ்வாறு தகப்பனுக்கு பயந்து பகல் வேளையில் வீட்டில் தங்குவதில்லை என்பதை அறிந்த அவன் தாயார் அவன்மீது அனுதாபம் கொண்டாள். எப்படியா

அது என்ன வார்த்தை?





பாப்பா மலர்

அடிமைப் பெண்

ரா. நா

2. தந்தையின் சீற்றம்

நூருடீனால் கீழே தள்ளப்பட்ட காவற் பெண்கள் தங்கள் எஜமானியிடம் நடந்ததைக் கூறினர். இதைக் கேட்ட அவள் உடை தரித்துக் கொண்டு பேரழகியின் அறைக்குச் சென்றாள். ஆனால் அங்கே நூருடீனைக் காணவில்லை. பேரழகியைப் பார்த்து விட்டு மந்திரியின் மனைவி, "பெண்ணே! அரசனின் நாயகியாகப் போகும் நீ என் மகனுடன் எப்படிப் பேசிக் கொண்டிருக்கலாம்?" என்று கேட்டாள்.

இதற்கு அவள், "அம்மணி! நான் என்ன செய்வது? என்னைத் தனக்கு மணம் செய்து கொடுக்க மந்திரி ஒப்புக்கொண்டு விட்டதாக உங்கள் புதல்வர் இப்போது என்னிடம் சொன்னாரே" என்றாள்.

இதைக் கேட்ட மந்திரியின் மனைவி அழுதாள். "பெண்ணே! நூருடீன் கூறியதெல்லாம் சுத்தப் பொய். உன்னால் என்னென்ன ஆபத்தெல்லாம் நேரிடப் போகிறதோ அறியேன்" என்று கூறி மேலும் அழுதாள்.

மந்திரி காஹன் அரசாங்க வேலைகளைப் பார்த்து விட்டு வீட்டிற்குத் திரும்பியவுடன் தன் மனைவி கண்ணும் கண்ணீருமாய் அழுதுகொண்டிருப்பதைக் கண்டான். மிகுந்த கவலையுடன் தன் மனைவியைப் பார்த்து, "நீ வருந்துவதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டான். நடந்த விஷயத்தைக் கேட்டுத் தன் மகன் மீது அளவிலாக் கோபம் கொண்டான். ஒரு நிமிஷம் யோசித்துப் பார்த்தான். நூருடீனும் பாரசீகப் பேரழகியும் ஒருவரையொருவர் மனப்பூர்வமாகக் காதலித்ததால் அவளை அரசனிடம் கொண்டுபோய்விட அவன் இஷ்டப்படவில்லை. அரசனிடம் போன பிறகு அழகி அவனிடம் பிரியமாக நடந்து கொள்ளாவிட்டால் என்ன செய்வது என்று அவன் கவலை கொண்டான். 'அரசனுடைய பணத்தை வீணாக்கி விட்டோமே' என்று ஒரு புறம் வருத்தம்; மற்றொரு புறம் உண்மை தெரிந்து மன்னன் கோபம் கொண்டால் அதை எப்படிச் சமாளிப்பது என்ற பயம்.

இந்த நிலையில், மந்திரி காஹன் அழுதுகொண்டிருந்த தன் மனைவியைப் பார்த்துக் கூறினான்: "என் விரோதியான ஸவி நம் மகன்

தோஷம் உண்டாகவில்லை. "இங்கே ஏன் வந்து சிக்கிக் கொண்டேன்? ஹரிகதைக்கே நானும் போயிருந்தால் நன்றாயிருந்திருக்கும்" என்று எண்ணி வருத்தப்பட்டான். அங்கே நான்கு பேர் கூடி சீட்டு ஆடிக்கொண்டும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டுமிருந்தார்கள். அவர்களோடு இவனும்கலந்து உட்கார்ந்தான். ஆனால் மனம் அங்கே இல்லை. திண்ணையில் பாகவத பக்தர் கூட்டத்து நினைப்பாகவே இருந்தான்.

திருவேங்கடமோ காலட்சேபக் கூட்டத்தில் உட்கார்ந்திருந்தாலும் அவனுடைய உள்ளம் கதையில் செல்லவில்லை. பாகவதர் நன்றாகப் பாடவில்லையென்று அவர் குரல் கம்மியிருப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தானேயொழிய, கதையில் அவனுக்குப் பிடிப்புண்டாகவில்லை. "சாம்பன் இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பானோ? எவ்வளவு சந்தோஷமாக இருப்பானோ? நானும் அவனோடு போயிருந்தால் நன்றாக இருந்திருக்கும்" என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தான். சாம்பனைப் பற்றியும் அவன் போயிருக்கும் இடத்தைப் பற்றியும் அங்குள்ள சிநேகிதர்களைப் பற்றியும் தாசிகளைப் பற்றியுமே யோசித்துக் கொண்டிருந்தான். பாகவதர் கதையில் கவனமே இல்லாமல் அவன் மனம் தாசி வீட்டிலேயே இருந்தது.

தாசி வீட்டில் இருந்தாலும் சாம்பனுடைய மனம் ஹரிகதா காலக்ஷேபம் நடக்கும் திண்ணையில் திருவேங்கடத்துடனேயே இருந்தது. "திருவேங்கடம் எவ்வளவு சந்தோஷமாக இருப்பான்? புண்ணியமும் சம்பாதித்துவிட்டான். நான் இங்கே மடையர்கள் கூட்டத்தில் இருக்கிறேனே" என்று எண்ணிக் கொண்டே காலங் கழித்தான்.

உண்மையில் திருவேங்கடம் பக்தர் கூட்டத்திலிருந்தாலும், மனத்தூய்மை இல்லாதபடியால் தாசி வீட்டுக்குப்போன பாவத்தை அனுபவித்தான். சாம்பன் தாசியின் வீட்டில் இருந்தாலும் பக்தர் கூட்டத்து நினைப்பிலிருந்ததால் ஓரளவு தூய்மை அடைந்தான்; போகக் கூடாத இடத்துக்குப் போயிருந்தாலும் நாசமடையாமல் தப்பிப் பிழைத்தான்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

துக்கொள். ராக்ஷதர்களோடு சேருவாயா? அல்லது அனுமன் காலில் விழுந்து உன் உள்ளத்திலுள்ள மாசை ஓட்டுக்கொண்டு தாயின் அருளைத் தேடுவாயா? தேவி இந்த உருவத்தில் நின்று, உன் பக்தியை அல்லவோ கேட்கிறாள். மூர்க்கனைப்போல் உன் காமத்தைக் கிளப்பிக் கொள்ளாதே! பொய்யை மெய்யாகக் கருதி மாளும் வழியைத் தேடிக் கொள்ளாதே!

நன்மைக்கும் தீமைக்கும் ஊற்று நம் உள்ளத்தில் இருக்கிறது. அங்கே குடி கொள்ளும் எண்ணங்களே புறச் செயல்களாக உருவம் எடுக்கின்றன. புறச் செயல்தான் பெரிது, உள்ளத்திவிருப்பதை யாரும் அறியவில்லையென்று உள்ளத்தை வரவர அழுக்குக் குட்டையாய்ப் போக விடாதே. அப்படிச் செய்தால் வாழ்க்கைச் செயல்கள் அனைத்தும் தப்ப முடியாத வழியில் கெட்டுப் போகும். குடிநீர் எடுக்கும் கிணற்றில் அழுக்கு சேரும்படி விட்டால் ஊரின் ஆரோக்கிய நிலை கெட்டுப் போவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் இதுவும்.

* * *

நண்பர்கள் இரண்டு பேர் தெருவில் காரியம் ஒன்றுமில்லாமல் போய்க்கொண்டிருந்தபோது ஒரு வீட்டில் யாரோ புராணம் படித்துக் கொண்டிருக்க, அதைப் பக்த கூட்டம் கூடிக் கேட்டுக் கொண்டிருந்ததைக் கண்டார்கள்.

“வாடா! நாமும் போய்க் கதை கேட்கலாம்” என்று அழைத்தான் திருவேங்கடம்.

“இந்த ஹரிகதை காலட்சேபம் எனக்குப் பிடிக்காது. இதனால் என்ன பிரயோஜனம்? சும்மா அழுது கொண்டு நடக்காத கதையையெல்லாம் சொல்லிக் கொண்டு காலம் கழிக்கிறார்கள். அதோ அங்கே தாஸித் தெருவுக்குப் போகலாம், வா! அங்கே உல்லாசமாக இன்று மாலையைக் கழித்து விடலாம். நம்முடைய கஷ்டம் இருக்கவே இருக்கிறது. ஒரு நாள் தமாஷாக அனுபவிக்கலாமல்லவா?” என்றான் சாம்பன்.

திருவேங்கடம் இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. “எனக்கு அது வேண்டாமப்பா! நீ வேண்டுமானால் போ. நான் இவ்விடம் உட்கார்ந்து ஹரிகதை கேட்கிறேன்” என்று சொல்ல, இருவரும் பிரிந்து போனார்கள். சாம்பன் தாசித் தெருவுக்குப் போனான். திருவேங்கடம் பாகவதர் கதை சொல்லும் திண்ணைக் கூட்டத்தில் உட்கார்ந்து கொண்டான்.

தாசி வீட்டுக்குப் போன சாம்பனுக்கு அன்று ஏனோ மனசில் சங்



ராமகிருஷ்ண உபநிஷதம்

4. சித்த சுத்தி

அழகிய ஒரு ஸ்திரீயைப் பார்க்கும்போது உலக மாதாவான தேவியை தியானிக்க வேண்டும். முன் நிற்கும் ஸ்த்ரீ உலக மாதாவின் பல உருவங்களில் ஒன்று என்று நினைவூட்டிக் கொண்டு, "இது தேவியின் அவதாரம், உலக மாதா அழகாக இல்லாமல் வேறு எப்படி யிருப்பாள்? அன்புக்குரிய என் தாய் மகாதேவி எனக்குத் தரிசனம் தருகிறாள்" என்று முன் நிற்கும் தாயை வணங்க வேண்டும். உள்ளத்தைக் குழந்தை பாவத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும். தாயைக் கண்டால் வேறு எண்ணங்களுக்கு இடம் ஏது? இந்த உபாயத்தைத்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் முதலிலிருந்து கையாண்டார். விவேகமும் கல்வியும் பெற்றவர்களுங் கூடக் காம வேகத்துக்கு இரையாகி விடுவது உண்டு. இந்த அபாயத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ள பகவான் ராமகிருஷ்ணர் உபதேசித்திருக்கும் இந்த உபாயம் மிகச் சிறந்த சாதனமாகும்.


பெண்ணுருவத்தைத் துவேஷிக்கலாகாது. பெண்களைத் தாழ்த்தியும் பேசலாகாது. வஞ்சக உருவம் என்று ஸ்திரீகளை இகழ்வது தவறு. தாயை வெறுக்கலாமா, இகழலாமா? மகா புனிதமான தேவியின் அவதாரம். இவள் உனக்குத் தாய்; அனைவருக்கும் தாய், மகாசக்தி, உலகத்துக்குமாதா. எங்கும் பரவி நிற்கும் பரம்பொருளே இந்த உருவம் எடுத்து நிற்கிறது. அதன் சௌந்தர்யமும் புன்சிரிப்பும் தாய்க்குள்ள இயற்கையான பிரியத்தின் அடையாளம். தேவியை வணங்கு, காமம் மறைந்து போகும். பகவான் ராமகிருஷ்ணர் உபதேசித்த இந்த உபாயத்தைப் பயன்படுத்திக் கொண்டு பாருங்கள்; மனம் தூய்மைப் படுவதை உடனே உணர்வீர்கள்.


சட்டியும் கரண்டியும் துடுப்பும் எல்லாம் இருந்தும், நீ எழுந்து சமைத்தாலல்லவோ உணவு ஆகும்? சாமக்கிரிப் பட்டியலை வாசித்துக் கொண்டிருப்பதில் பண்டம் உண்டாகாது. உன் முயற்சி யில்லாமல் போனால் உபதேசங்கள் என்ன செய்யும்? பக்தி நெறியில் மனதைச் செலுத்து.

அழகிய பெண்ணுருவத்தைக் கண்டு மனம் தடுமாறினால் உடனே அசோக வனத்தில் மரத்தடியில் தவமிருந்த சீதாதேவியைத் தியானித்




சைபருக்குள் ஒன்று போக முடியும். அதோ பாருங்கள்!
எட்டில் பாதி என்ன, சொல்லு? வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்லணும்.
எட்டில் பாதி, மூன்று ஸார்! இதோ பாருங்கள்.
கணக்கிலே ரொம்ப 'வீக்'காக இருக்கிறாயே! ஒன்பதிலிருந்து ஏழை உன்னால் பிரிக்க முடிய வில்லையே?
"ஏழு கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இருக்கிறான், ஸார்!"
"டேய், விடாதேடா!
நான்கு யானையில் ஒரு யானை போய் விட்டால் பாக்கி எவ்வளவு? டேய், யானை! சொல்லித் தராதே.
மூன்று என்று சொல்லு.
போய்வா, அப்பா! மேகம் தயாராக இருக்கிறது. இனிமேல் நீ கணக்கில் புலி என்ற பட்டம் வாங்குவாய்.
கனவு உலகத்திலிருந்து நினைவு உலகத்துக்கு வந்தான் சேகரன்! உபாத்தியாயர், "பேஷ் சேகரா! நீ கணக்கெல்லாம் சரியாகப் போட்டு விட்டாயே! கணக்கில் புலியாகி விட்டாய்!" என்றார்.


கணக்கில் புலி?
சரித்திரத்திலும், விஞ்ஞானத்திலும், இங்கிலீஷிலும், பூகோளத்திலும், தமிழிலும் சேகரன் முதலில் பாஸ் பண்ணினான். ஆனால் கணக்குக்கும் அவனுக்கும் ரொம்ப தூரம். ஒரு நாள் கணக்கைப் போட முடியாமல்....
சேகரன், கணக்கு நோட்டைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு, வகுப்பில் தூங்கி விட்டான். உடனே கனவு உலகத்துக்குச் சென்றான்.
396
840
சேகரனுக்குக் கணக்கு வராவிட்டால் அவனை நம்மிடம் வர வழைப்போம் என்றது பூஜ்யம்.
சேகரன், கணக்கு உலகத்துக்குத் தூக்கிச் செல்லப் பட்டான்.
ஏ, மூன்று! நீ ஏன் எப்பொழுதும் இரண்டுக்குப் பின்னால் வந்து கொண்டு இருக்கிறாய்?
"இரண்டுக்குப் பிறகு மூன்றுதான் வர வேண்டும் என்று உபாத்தியாயர் சொன்னார்"
"நான்தான் உபாத்தியாயர்! சைபரில் ஒன்று போகுமா?"



நாளுக்கு நாள் உங்கள் சருமம் அதிக அழகைப் பெறுகிறது

**ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில்தான்
உங்கள் சருமத்தை அதிக ஆரோக்கியமுடையதாகவும்,
மாசற்றதாகவும், மழமழப்பாகவும் செய்கிறது.**

தினமும் குறைந்த பக்ஷம் இரு முறையாவது ரெக்ஸோனா உபயோகிக்க ஆரம்பியுங்கள். அதன் கேடில் அடங்கிய நுரையை மெதுவாக சருமத்தில் தேய்த்து கழுவுங்கள். ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில் உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்கியத்தை அளிக்கும். மேலும் சருமத்தை சுத்தம் செய்து மழமழப்பளித்து என்றும் திகழும் புதிய எழிலையும் தரும்.



ரெக்ஸோனா

கேடில் கலந்த சோப் இது ஒன்றே

RP. 47A-172 TM

"கம்பர் விழாவிற்கு இத்தனை ஆயிரம் பேர், இத்தனை ஆயிரம் தாய்மார்கள் வந்து கூடியிருக்கிறார்கள் என்றால், அது அவர்கள் ராமனிடமும் சீதையிடமும் கொண்ட அளவில்லாத பக்தியைக் காட்டுகிறது.

"வாழ்க்கைக்கு, இன்றியமையாதவை எவை என்றால் சோறும் தபாறும் என்று சொல்லத் தோன்றும்; அது சரியல்ல.

"ஒரு மரத்திற்கு, அவசியமானவை, மண்ணும் தண்ணீருந்தான் என்று சொல்வது போலாகும். உண்மையில் தாவரத்துக்கு மண்ணும் தண்ணீரையும்விட, உணவுச் சத்தும் சக்தியும் கொடுப்பது, கண்ணுக்குப் புலனாகாத காற்றில் கலந்துள்ள கரியமில வாயுவும் சூரிய வெளிச்சமும்தான். இதைத் தாவர சாஸ்திர அறிஞர் எவரும் கூறுவர். அதைப்போலவே நமது வாழ்க்கைக்கு இன்றியமையாதவை ராமாயணமும் பாரதமும். அந்த நூல்களின் சக்தியைக் கண்ணால் நாம் பார்க்கமுடியாது. ஆனால் நம்முடைய சமுதாயத்துக்கே சக்தியும் உரமும் அந்தக் காவியங்கள் தருகின்றன.

"ராமாயண காவியத்தைப் பக்திக் கண்ணோடு பார்க்காத சிலர் ராமாயணக் கதையில் குறைகள் இருப்பதைக் கண்டு பிடிக்கலாம். இன்று எத்தனையோ எழுத்தாளர்கள் குறையே இல்லாத நல்ல கதைகள் எழுதுகிறார்கள். எழுதி என்ன பயன்? காலப் போக்கில் அவையெல்லாம் நிற்குமா? நிற்காது என்னும் விஷயம் எழுதிய எழுத்தாளர்களுக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், அந்தக் கதைகளுக்கே தெரியும், அவை நிலைத்து நிற்க முடியாது என்று.

"ஆனால் ராமாயணக் கதை வைரம் போன்றது. கறப்புள்ள வைரம் எப்படி ரொம்பவும் உயர்ந்த ரக வைரமாகக் கருதப்படுகிறதோ அம்மாதிரியே குற்றம் குறைகள் உள்ள நமது ராமாயண, பாரதக் கதைகளும் காவியங்களும் உயர்ந்த வைரங்கள்."

இவ்விதம் ராமாயணக் கதையின் பெருமையை ராஜாஜி கூறிவிட்டு, தாம் கம்பராமாயணத்தைப் பற்றித் தெரிந்துகொண்டு அநுபவித்ததெல்லாம் ரசிகமணி டி.கே.சி. அவர்கள் மூலமாகத்தான் என்றும், அதுவே தமக்குப் போதுமென்றும் தெரிவித்தார்.

"கம்பராமாயணம் நல்ல நூல் என்பதனால், பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக அதை வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் கம்பராமாயணத்தின் பேரில் மாணவர்களுக்கு வெறுப்பு ஏற்படும்" என்றார்.

இந்த அபிப்பிராயத்துக்குக் கூட்டத்தில் நல்ல வரவேற்பிருந்ததாகத் தெரியவந்தது.

திரு சுப. மாணிக்கம் அவர்கள் "இராவணன் தூய்மை" என்னும் பொருள் பற்றிப் பேசினார். அதாவது, கம்பர் யுத்த காண்டம் முழுவதும் இராவணனைத் தூய்மைப் படுத்தவே பாடு பட்டிருக்கிறார் என்றும், சதா சீதையை நினைத்துக் கொண்டிருந்தவன் கொஞ்சம் கொஞ்சமாகச் சீதையை மறந்து மண்டோதரியை நினையும்படி செய்து விட்டார் என்றும் சில பாடல்களை எடுத்துக் காட்டி நிரூபணம் செய்தார்.

இடையிடையே திரு மாணிக்கம் அவர்களுக்குத் தாம் சொல்வதைச் சபையோர் ரசிக்கிறார்களா இல்லையா என்னும் சந்தேகம் தோன்றிக் கொண்டிருந்தது. ஒரு தடவை ஒரு மூலையிலிருந்து வந்த கரகோஷத்தைக் குறித்து, "இவர்கள் எதற்காகக் கை தட்டுகிறார்களோ, எனக்குத் தெரியவில்லை!" என்றார்.

இந்த சங்கடத்தைப் பற்றி ராஜாஜி முடிவுரையில் குறிப்பிட்டார். "வித்வான் சுப. மாணிக்கம் இவ்வளவு சந்தேகப்பட வேண்டிய அவசியமில்லை. கம்பர் இராவணனைத் தூய்மைப் படுத்த முயன்றிருப்பது பொருத்தமானதுதான். பெரும் இலக்கிய கர்த்தாக்கள் எந்தக் கொடுமையான பாத்திரத்தையும் அழகின்றிச் சிருஷ்டிப்பதில்லை. இது உலக இலக்கிய வழக்கு. உலக பாஷைகளில் எந்த இலக்கிய ஆசிரியரும் எந்தக் கெட்ட பாத்திரத்தையும் அழகின்றிச் சிருஷ்டிப்பதில்லை. உதாரணமாக ஷேக்ஸ்பியர் எழுதிய இரண்டாம் ரிச்சர்டு என்ற நாடகத்தில் கொடுங்கோல் அரசனை அவனை எவ்வளவு அழகாகச் சிருஷ்டித்திருக்கிறார்!" என்று கூறி மாணிக்கத்தின் சந்தேகத்தையும் சபையோரின் சங்கடத்தையும் ஒருங்கே தீர்த்து வைத்தார்.

செஞ்சிவி வீர பாண்டியன் என்னும் சிறுவன் "சிங்கக் குட்டி" என்னும் விஷயம் பற்றிச் சொற்பொழிவு செய்தான். அத்தனை ஆயிரம் மக்களுக்கு முன்னால் அச்சமென்பதை அறியாத ஒரு சிங்கக் குட்டியாகவே விளங்கிச் சக்கைப் போடு போட்டான். அங்கதன் இராவணனிடம் தூது சென்றபோது பேசிய வீர வார்த்தைகளையும் பராக்கிரமச் செயல்களையும் கம்பர் பாடல்களைக் கொண்டு அழகாக எடுத்துச் சொல்லிச் சபையோரின் பிரமாத பாராட்டுதலைப் பெற்றான்.

(அடுத்த இதழில் முடியும்)

ஐந்து இளம் பெண்கள் ஐந்து வீணைகளை மீட்டி இனிய கானம் பொழிந்தார்கள்.

கம்பர் கழகத்தின் செயலாளராகிய திரு சா. கணேசன், "கவிச் சக்கரவர்த்தி கம்பன் விழாவுக்குப் புவிச் சக்கரவர்த்தியாய் விளங்கிய ராஜாஜி தலைமை தாங்குவது இந்த வருஷத்துக் கம்பர் விழாவின் விசேஷம்" என்றார். அவ்வளவுதான்; பத்தாயிரம் ஜோடிக் கைகளுக்கு நீடித்த வேலை; சபையில் ஒரே ஆரவாரம். "இவ்வருஷ விழாவில் கம்ப ராமாயணம் பதிப்பு வேலை ஆரம்பமாவது மற்றொரு குறிப்பிடத் தக்க அம்சம்" என்று ஸ்ரீ கணேசன் தெரிவித்து விட்டு ராஜாஜிக்கும் ரஸிகமணி டி. கே. சி.க்கும் மாலையிட்டார். கரகோஷம் வானை அளாவியது!

கம்பர் விழாவின் தொடக்க உரை நிகழ்த்திய ரஸிகமணி அவர்கள் கம்பர் விழா கொண்டாடப்பட்ட இருபது வருஷ கால சரித்திரத்தைக் கூறிவிட்டு, கம்ப ராமாயணத்தில் சீதையை எப்படிக் கம்பர் சிருஷ்டித்திருக்கிறார் என்பதற்குச் சிறிய கதை ஒன்று முதலில் கூறினார்.

ஒரு தாய் தன் சிறு குழந்தையைக் கடைத்தெருவுக்கு அழைத்துச் செல்கிறாள். அங்கே குழந்தை ஒரு மரப் பொம்மையைப் பார்த்து 'வாங்கித் தா' என்று அழுகிறது. தாய் வாங்கித்தர மறுக்கிறாள். குழந்தை பிடிவாதம் செய்கிறது. கடைசியில் வேறு வழியின்றி அந்தப் பொம்மையை வாங்கிக் கொடுத்து விடுகிறாள். குழந்தை அதை வீட்டுக்கு எடுத்துச் சென்று விளையாடுகிறது. வெகுநேரம் விளையாடுகிறது. பின்னர் பொம்மையைத் தன் பக்கத்தில் வைத்துக் கொண்டே தூங்கி விடுகிறது. பொழுது விடிகிறது. அதன் பார்வை அந்தப் பொம்மையின்மேல் விழுகிறது. உடனே அதன் இளம் செவ்விதழ்கள் விரிகின்றன. புன்னகை தவழ்கிறது. உள்ளத்தில் இனம் தெரியாத உவகை பெருக்கெடுத்து ஓடுகிறது.

இத்தகைய குழந்தையின் மனோபாவம் கொண்டவள் சீதை. ராமன் முதலில் சீதையைக் காட்டுக்கு அழைத்துச் செல்ல மாட்டேன் என்றான். சீதை பிடிவாதம் செய்த பிறகுதான் அழைத்துச் சென்றான். அது சீதையின் மனதில் பதிந்து கிடக்கிறது.

காட்டில் முதல் நாள் இரவு கழிந்து சூரியோதயம் ஆகிறது. சூரியனைக் கண்ட தாமரைகள் மலருகின்றன. சீதையும் கண் விழிக்கிறாள். அப்போது சீதையின் மனோநிலை எப்படி இருந்தது?

செஞ்செவே சேற்றில்தோன் றும்
தாமரை, தேரில்தோன் றும்
வெஞ்சுடர்ச் செல்வன்மே னி
நோக்கின விரிந்த,வே றோர்
அஞ்சன ஞாயி(று)அன் ன
ஐயனை நோக்கிச்செய் ய
வஞ்சியாள் வதனம்என் னும்
தாமரை மலர்ந்த(து)அன் றே!

ஆகா! பொம்மையைக் கண்டு அந்தக் குழந்தையின் முகம் மலர்ந்தாற்போல், ராமன் முகத்தைக் கண்டு சீதையின் முக தாமரையும் மலருகிறது. "அடாடா! இந்த ராமர் நம்மைக் காட்டுக்கு அழைத்துவர முடியாது என்று சொன்னார் அல்லவா? நாம் பிடிவாதம் பிடித்து வந்து விட்டோமல்லவா? இதோ ராமர் நம் அருகில் இருக்கிறாரே!" ராமருடைய முகமும் ஒரு அதிசயமான கரிய சூரியனைப்போல் ஜொலிக்கிறதே!

ஆம்; சீதை கானகத்தின் வெம்மையை உணரவில்லை; கல்லிலும் முள்ளிலும் மெல்லிய பாதங்கள் வைத்து நடக்கவேண்டிய தொல்லையை உணரவில்லை. ராமனை இணை பிரியாது இருக்க முடிந்ததே என்பதைக் குறித்துச் சந்தோஷப்படுகிறாள்! எப்படிப் பட்ட குழந்தை மனோபாவம்!

பின்னால் இலங்கைச் சிறையில் இந்தகைய குழந்தைப் பண்பு கொண்ட சீதை தான் ராவணனைப் பார்த்துச் சீறுகிறாள்.

"ஈரேழு புவனம்யா வும்
முற்றுவித் திடுதல்வேண் டின்,

இராமபாணம் இருக்கிறது! ஜாக்கிரதை!" என்று கர்ஜிக்கிறாள். இந்தச் சீதையைக் கண்ட அநுமன் அவளைக் குறித்து ராமனிடம் பேசும் விதமும் அபாரம்!

இவ்வாறு மூன்று பாடல்களின் மூலம் சீதையின் விசேஷக் குணப்பண்பை அன்று கூடியிருந்த பத்தாயிரம் மக்களுக்குச் சொன்னார். அன்று சீதையின் குண சித்திரத்தைக் கண்டதோடு டி. கே. சி. அடிக்கடி சொல்லும் மற்றொரு உண்மையும் புலனாயிற்று! "தமிழர்கள் கவிதை என்றால் ஓட மாட்டார்கள்" என்பதும் விளங்கியது!

• • •

அன்று மாலை 4–15 மணிக்கு மறுபடியும் சபை கூடியது. ராஜாஜி தமது தலைமையுரையை நிகழ்த்தினார்.

அதில் பல நுட்பமான உண்மைகளைப் பாமர மக்களின் பச்சைத் தமிழில் வெகு அழகாக உணர்த்தினார்.

டுத் தமிழ் அன்பர்களை யெல்லாம் வசீகரித்துக் கவர்ந்ததில் ஆச்சரிய மில்லைதானே?

கொட்டகையின் நடுப்பகுதி உத்தரத்தில் கதர்த் துணிகளை விரித்து வெகு நேர்த்தியாகச் சிங்காரித் திருந்தார்கள். கொட்டகையின் நடுவில் இரு வரிசையிலும் தூண்களில் இயற்கைக் காட்சிகளின் மூவர்ணப் படங்கள் மாட்டி யிருந்தார்கள். அத்துடன் எங்கு நோக்கினும் கம்பர் பாடல்களிலிருந்து மணி வாசகங்கள் எடுத்து எழுதப்பட்ட அட்டைகள் தொங்கின.

தலைவர்களுக்கும் பேச்சாளர்களுக்கும் அமைக்கப்பட்டிருந்த மேடை வெகு கம்பீரமாக விளங்கியது. மேடையின் ஒரு புறம் கம்பர் தம்முடைய 'கற்றுச்சொல்லி'க்குக் கவி சொல்லும் படமும் மற்றொரு புறம் செங்கோட்டி யாழ் ஏந்திய கலைவாணியின் படமும் அலங்கரித்தன.

சபையில் முன்னணியில் வீற்றிருந்தவர்களின்மீது கொஞ்சம் கண்ணோட்டம் செலுத்தினேன். எனக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தவர்களோடு மற்றவர்களைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டேன்.

இந்த ஜாபிதாவைப் பாருங்கள் :—

ராயவரம் பி. வி. ஆர்எம். குழந்தையன் செட்டியார், ஸ்ரீமதி வள்ளியம்மை, கானாடுகாத்தான் வீவீ. வீடி. வி. வெங்கடாசலம் செட்டியார், காரைக்குடி மு. ராம. சொ. பெரியண்ணன் செட்டியார், கானாடுகாத்தான் வீ. வீ. ஆர்எம். ராமசாமி செட்டியார், வீவீ. ஆர்எம். அழகப்பச் செட்டியார், எஎல். ஏஆர். சோமசுந்தரம் செட்டியார், கோட்டையூர் கேவீ. எஎல். ஆர்எம். ராமநாதன் செட்டியார், காரைக்குடி கிருஷ்ணன் செட்டியார், நேமத்தான்பட்டி பழ. நாராயணன் செட்டியார், பள்ளத்தூர் ஒ. ஏஆர். லட்சுமணன் செட்டியார், காரைக்குடி சா. கா. அ. அ. சொ. அண்ணாமலைச் செட்டியார், காரைக்குடி மெ. செ. அ. மெ. பழனியப்பச் செட்டியார், காரைக்குடி கி. கா. நாராயணன் செட்டியார், காரைக்குடி சா. மெ. அரு. மெய்யப்பச் செட்டியார், காரைக்குடி மெ.கா.சித. சிதம்பரம் செட்டியார், டாக்டர் சுப்ரமணியம், எம்.எல்.ஏ., தேவகோட்டை நகரசபைத் தலைவர் அரு. அரு. சோமநாதன் செட்டியார், பள்ளத்தூர் எஸ். எம். ஆர்எம். சோலையப்பச் செட்டியார், காரைக்குடி நகரசபைத் தலைவர் சொக்கலிங்கம் செட்டியார், கானாடுகாத்தான் என். ஆர்எம். ஏஆர். ராமநாதன் செட்டியார், க. வீ. அழ. மு. ராமநாதன் செட்டியார், கல்லல் ஆ. மு. ஆ. முரு. முருகப்பச் செட்டியார், அமராவதிபுதூர் சொ. முருகப்பா, ஸ்ரீமதி மரகதவல்லியம்மையார், ஸ்ரீமதி சகுந்தலாபாரதி, ஸ்ரீமதி லீலாவதி அம்மையார், ஆத்தங்குடி சுப்பையாச் செட்டியார், அ.லெ. நடராஜன் செட்டியார், ராயவரம் ராம. சீனிவாசன், தேவகோட்டை டி. ஆர். அருணாசலம் முதலிய இன்னும் பலர்.

தற்சமயம் செட்டி நாட்டாரின் பொருள் நிலை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. எவ்வளவோ செல்வச் சீமான்கள் பலர் வெள்ளிப் பாத்திரங்களை விற்கும் நிலைக்கு வந்து விட்டார்கள்! இந்த நிலையிலும் பல ஊர்களிலிருந்தும் இவ்வளவு பெரு மக்கள் கம்பர் விழாவுக்கு விஜயம் செய்து விழாவில் ஒத்துழைத்து நடத்தி வைத்தார்கள் என்றால், செட்டிமார் நாட்டின் தமிழன்பைக் குறித்து என்னவென்று சொல்வது? அதை ஒரு கம்பர்தான் பாட வேண்டும்.

வெளியூர்களிலிருந்து சுமார் ஐந்நூறு பேர் வரையில் விழாவுக்கு வந்திருந்தார்கள். கலெக்டர் உத்தண்டராம பிள்ளை, ரெவின்யூ போர்டு மெம்பர் வி. என். குவா, ஹிந்து தேவஸ்தான போர்டு தலைவர் சின்னையாப் பிள்ளை, ராவ்சாஹிப் எஸ். வையாபுரிப் பிள்ளை, திருச்சி எப். ஜி. நடேசய்யர், கும்பகோணம் டாக்டர் எஸ். மகாலிங்கய்யர், அம்பாசமுத்திரம் கே. எ. சிவஞானம் பிள்ளை, ஆழ்வார் திருநகரி பெரியன் சீனிவாச அய்யங்கார், ஆத்தக்குடி அட்வகேட் எ. வி. பால்நாடார், தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீஸர் டி. எம். பாஸ்கரத் தொண்டைமான், சேலம் எம். என். ரங்காச்சாரி,—இப்படி இன்னும் பலர்.

வெளியூர்களிலிருந்து வந்தவர்களுக்குப் பல வீடுகளில் ஜாகை வசதிகளும் உணவு வசதிகளும் அளிக்கப்பட்டன. ஸ்ரீ சா. கணேசன் வீட்டைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. ரயில்வே ஸ்டேஷன் வெயிட்டிங் ரூமைப் போலவும் பழைய காலத்து அன்ன சத்திரங்களைப் போலவும் அவருடைய வீடு விளங்கியது.

இந்த விழாவுக்குத் தலைமை வகித்த ராஜாஜிக்கும் மகாநாட்டைத் திறந்து வைத்த டி. கே. சி.க்கும் மேடை மீது இரண்டு சிம்மாசனம் போன்ற நாற்காலிகள் பச்சை மாலைகள் சாத்தி வைக்கப்பட்டிருந்தன. அந்த நாற்காலிகளில் அவர்கள் அமர்ந்ததும் சபை களை கட்டி விளங்கியது.

“உலகம் யாவையும்” என்ற காப்புச் செய்யுளுடன் விழா ஆரம்பமாகியது. பின்னர்



கம்பர் விழாக் காட்சிகள்







காரைக்குடியில் என்றுமில்லாச் சிறப்புடன் இந்த வருஷம் நடந்த கம்பர் விழாத் தலைவர் ராஜாஜியும், விழாவைத் தொடங்கி வைத்த ரஸிகமணியும், விழாவை நடத்தி வைத்த ரஸிகர் மகா சபையும், வரவேற்பு அளித்த ஸ்ரீ சா. கணேசனும், ஆசிமொழி கூறிய குன்றக்குடி சுவாமியாரும், நடனமாடிய இனிய சிறுமிகளும் இங்கே காட்சி யளிக்கின்றனர்.

காரைக்குடி கம்பர் விழா

[எஸ். வி. எஸ்.]

"இந்த வருஷம் காரைக்குடி கம்பர் விழாவில் ராமபிரான் தலைமை வகிக்கப் போகிறாரே; நீர் வரவில்லையா?" என்று என் நண்பர் கேட்டார்.

என் நண்பர் டி. கே. சி. யின் பக்தர்.

டி. கே. சி. அவர்கள் அடிக்கடி "கம்பர் காட்டும் ராமனை, ராஜாஜி அவர்களுடன் நெருங்கிப் பழகியபின்னர்தான் நன்கு புரிந்து கொள்ள எனக்கு முடிந்தது" என்று கூறுவதுண்டு. அந்த எண்ணத்தை மனதில் கொண்டுதான் என் நண்பரும் இந்த வருஷக் கம்பர் விழாவுக்கு ஸ்ரீ ராமபிரானே தலைமை தாங்குகிறார் என்று கூறினார்.

அப்படிச் சொன்ன பிறகு புறப்படாமல் இருக்க முடியுமா? நாங்கள் புறப்பட்ட வண்டியிலேயே ராஜாஜியும் ரஸிகமணியும் காரைக்குடிக்கு வந்து கொண்டிருந்தார்கள்.

பொழுது நன்றாக விடிந்த பிறகு வண்டி திருச்சி ஜங்ஷனை அடைந்தது. அங்கே பல அன்பர்கள் ராஜாஜியைப் பார்க்க வந்திருந்தார்கள். சில பத்திரிகை நிருபர்கள் ராஜாஜியிடம் ஏதாவது கிரகிக்கும் எண்ணத்துடன் கேள்விகள் கேட்டார்கள். பக்கத்திலே பயபக்தியுடன் நின்று கொண்டிருந்த ஆலங்குடி ராமச்சந்திரனின் கட வாத்தியம் ராஜாஜிக்கு உதவியாக வந்தது. "அதோ பாருங்கள், அந்த கட வாத்தியத்தை! எவ்வளவு எளிய வாத்தியம்! ஆனாலும் எவ்வளவு அற்புதமான வாத்தியம்! அதைப் பக்குவமாகத் தட்டி வாசித்தால் மதுரமான நாதங்கள் எழும்புகின்றன; தடபுடா வென்று போட்டு அடித்தால் பானையே உடைந்துவிடும்!" என்றார். இதைத் தம்மை உத்தேசித்து ராஜாஜி சொன்னாரா, அல்லது பத்திரிகைகளின் உபயோகத்தைக் குறித்துச் சொன்னாரா என்பது தெளிவாக எனக்கு விளங்கவில்லை. எனினும், ஆலங்குடி ராமச்சந்திரன் தம் வாணாள் முழுதும் இந்த விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பார் என்பது நிச்சயம்.

திருச்சியிலிருந்து கோட்டையூர் ஸ்டேஷனில் ராஜாஜி இறங்கும்வரை ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஜனங்கள் ராஜாஜியைத் தரிசிக்கக் காத்திருந்தார்கள். ஏதோ ஒரு ரயில்வே ஸ்டேஷனில் ஜனங்களுக்கு யாரோ தவறாக "ராஜாஜி பின் பெட்டியில் இருக்கிறார்" என்று கூறிவிட்டார்கள். அத்தனை பேரும் பின்பக்கம் ஓடினார்கள். அதற்குள் கார்டு விஸில் ஊதிவிடவே, ஜனங்கள் மறுபடியும் முன்னேறி வந்து, கார்டை வண்டியை நிறுத்தும்படி சொல்லி ராஜாஜியைப் பார்த்து விட்டே போனார்கள். ராஜாஜியிடம் தமிழ் மக்கள் காட்டிய இத்தகைய அன்பைப் பார்ப்பதற்கு என்னவோ மகிழ்ச்சியாயிருந்தது.

கோட்டையூர் ஸ்டேஷனில் திரு சா. கணேசன், திரு சொ. முருகப்பா முதலிய பிரமுகர்கள் வந்திருந்து ராஜாஜியையும் டி. கே. சி. யையும் அமராவதி புதூர் மகளிர் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

நாங்கள் காரைக்குடிக்குப் போய் ஜாகை ஏற்பாடுகளைப் பார்த்து விட்டு விழா நடக்கும் கொட்டகைக்கு வந்தோம். நாங்கள் வந்தபோது கொட்டகை முழுதும் நிரம்பி பிரும்மாண்டமான கூட்டம் கூடியிருந்தது. கூட்டத்துக்குள் மெள்ள ஒட்டகையைப்போல் தலையைச் செலுத்தி ஒரு பார்வை பார்த்தேன். அப்பப்பா! எத்தனை ஜனங்கள்! எவ்வளவு பெரிய பிரம்மாண்டமான கொட்டாரப் பந்தல்! அந்தப் பந்தலுக்குத்தான் எவ்வளவு அலங்காரங்கள்!

சென்ற ஆண்டுகளில் மீனாக்ஷி பெண் பாடசாலைக்குள்ளே முற்றத்தில் பந்தல் போட்டு விழா நடத்துவது வழக்கம். சுமார் ஆயிரம் பேர் கூட்டங்களுக்கு வருவார்கள். இந்த வருஷத்தில் பள்ளிக்கூடத்தையொட்டிய திறந்த வெளியில் பெரிய கொட்டாரப் பந்தல் போட்டு விட்டார்கள்! என்ன போட்டும் என்ன பயன்? வந்திருந்த ஜனங்களுக்கு இடம் போதவில்லை! பந்தலில் நெருக்கியடித்துக் கொண்டு ஐயாயிரம் ஆறாயிரம் பேர் உட்கார்ந்திருந்தார்கள் என்றால், சுற்றிலும் திறந்த வெளியில் உட்கார்ந்திருந்தவர்களும் நின்றவர்களும் ஏழாயிரம் எட்டாயிரம் பேருக்கு மேல் இருப்பார்கள்.

ராஜாஜி இவ் வருஷக் கம்பர் விழாவுக்குத் தலைமை வகிக்கிறார் என்ற செய்தி என் நண்பரை வசீகரித்ததுபோல் செட்டிநாட்

சபையில் ஒருவர் சென்னையில் பஸ் விடுவதற்காக இத்தாலியிலிருந்து ஏராளமான பஸ்களை வரவழைத்தார். இத்தாலி பஸ் என்றால் இதில் இத்தாலியும் சம்பந்தப் பட்டிருக்கிறது என்று ஏற்படுகிறதல்லவா? எனவே விஷயம் இப்போது உள்ளூரைத்தாண்டி சர்வதேச விவகாரமாகி விட்டதல்லவா?"

"பேஷ்! பேஷ்! விடாக்கண்டர் என்றால் அந்தப் பெயர் உங்களுக்குத்தான் பொருந்தும். சர்வதேசச் சபையிலும் நியாயம் கிடைக்கவில்லை என்றால் அப்புறம் என்ன செய்வீர்கள்?"

"அப்புறமா? மேலிடத்துக்குப் புகார் செய்வேன்."

"மேலிடத்தில்தான் ஏற்கெனவே புகார் செய்து, ஒரு மாதிரி குட்டை குழப்பிக் கைவிட்டு விட்டார்களே, அப்புறம் மறுபடியும்......"

"சீச்சீ! மேலிடம் என்றால் அது ஒரு இடம்தானா என்ன? அதற்கும் மேலான இடம் ஒன்று இல்லையா, என்ன? அங்கே கடவுள் ஒருவர் இருக்கிறார் அல்லவா? அவரிடம் புகார் செய்வேன். அவரைக் கொண்டு விசாரிக்கச் சொல்வேன்."

"ஒருவேளை நம் சபாநாயகர் 'கடவுளுக்கும் 'அரசியலுக்கும் சம்பந்தமில்லை. அவர் ஒரு எம். எல். ஏ. கூட இல்லை. ஆகையால் அவரைச் சட்டசபைக்குள்ளேயே விட மாட்டேன்' என்று சொல்லி விட்டால் என்ன செய்வீர்கள்?"

"நன்றாய்ச் சொன்னாய்; உங்கள் சபாநாயகர் அப்படிப்பட்டவர்தான். சென்ற வாரம் பார்த்தாயல்லவா? மந்திரிகள் மீதுள்ள குற்றங்களை விசாரிக்க ஒரு செலக்ட் கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தேன். சபாநாயகர் சட்டம் இடம் தரவில்லை என்று கூறி என்னை ஐந்தாறு தடவை தீர்மானத்தை வாபஸ் வாங்கும்படிச் செய்தார். இருந்தாலும் நான்தான் பெரிய விடாக்கண்டன் ஆயிற்றே! என்னுடைய தீர்மானம் சட்டசபையில் இடம்தர வேண்டுமானால் அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று அவரையே திருப்பிக் கேட்டேன். கடைசியில் ஒருவழி இருப்பதாகத் தெரிந்தது. அதாவது ஏதோ. அசல் பிரேரணையாகக் கொண்டு வரலாம் என்றார். உடனே கையிலிருந்த தீர்மானத்தை அசல் பிரேரணை என்று மாற்றி மகுடமிட்டுக் கொடுத்து விட்டேன்."

"நல்ல காரியம் செய்தீர்கள்; கடைசியில் விசாரணைக் கமிட்டி ஏற்பட்டு விசாரிப்பதாகவே வைத்துக் கொள்ளுங்கள். அப்புறம் அந்தக் கமிட்டி மந்திரிகள்மீது குற்றமே இல்லை என்று முடிவுசெய்து விட்டால் என்ன செய்வீர்கள்?"

"விசாரணைக் கமிட்டியின் முடிவு சரியில்லை என்று கூறி நான் ஒரு அறிக்கை விடுவேன். விசாரணைக் கமிட்டியின் தீர்ப்பைப் பரிசீலனை செய்யும்பொருட்டு மற்றொரு புனர் விசாரணைக் கமிட்டி நியமிக்கும்படி போராடுவேன்......"

"அதுதான் சரி; எங்கே அப்புறமும் விட்டுவிடுவீர்களோ என்று பார்த்தேன். விடக்கூடாது, விடக்கூடாது! உயிர் போனாலும் விடக்கூடாது! சட்டசபைக்கு நேரமாகி விட்டது. கிளம்புங்கள்" என்று ஸ்ரீ பிரகாசம் காருவை மேலும் உற்சாகப் படுத்தி விட்டு வந்து சேர்ந்தேன்.

அட்டைப்பட விளக்கம்

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா!" என்று பாரதியார் பரவசப்பட்டுப் பாடினார். பணங்காசு செலவில்லாமல் மக்கள் அநுபவிக்கக்கூடிய இன்பங்கள் எத்தனையோ இவ்வுலகில் இருக்கின்றன. இளவேனில் இனிது; தென்றல் இனிது. மரம் இனிது; மலர் இனிது. கிளிகள் இனியன; குயில்கள் இனியன; குருவிகள் இனியன. இவற்றின் கீதங்கள் மிகவும் இனியன. சின்னஞ் சிறு குழந்தையைப் போல் இனிய பொருள் உலகில் யாங்கணுமே இல்லை.

குழந்தைக்கு உணவூட்டிய அன்னை "சின்னஞ் சிறு கிளியே! கண்ணம்மா! செல்வக் களஞ்சியமே!" என்று பாடிக்கொண்டே ஊட்டினாள். அதைக் கேட்ட குழந்தை "எனக்குக் கிளியைக் காட்டு!" என்றது. அன்னை குழந்தையை அழைத்துக் கொண்டு பூங்காவுக்குப் போனாள். பல வர்ணப் பட்சிகளைக் குழந்தைக்குக் காட்டினாள். கிளியுடன் பேசிப் பார்த்தாள். "கிள்ளையின் குரல் இனிதா, குழந்தையின் மழலை இனிதா?" என்று ஒப்பிட்டுப் பார்த்து வியந்தாள். இந்தக் காட்சியை நமது அட்டைப் படம் சித்திரிக்கிறது.

ளர்கள். அதே நாடகத்தை அரங்கமேடையில் நடிப்பதற்காகச் சீர்திருத்தி அழகாக அமைத்திருக்கிறார்கள். இந்த அபூர்வ கற்பனா சக்தி பொருந்திய நாடகத்தைக் கலைவாணர் கிருஷ்ணன்—மதுரம் கோஷ்டியார் நாளது ஏப்ரல் 23உ மாலை சென்னை ஸ்டேடியம் மைதானத்தில் நடிக்கப் போகிறார்கள். வசூல் தொகை முழுதும் மகாத்மா ஸ்தூபி நிதிக்குச் சேரும். இந்த உதவி நாடக நிகழ்ச்சியைச் சென்னை நகர மேயர் டாக்டர் செரியன் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார். சென்னை வாசிகள் பெருந் திரளாக விஜயம் செய்து நாடகத்தை அநுபவித்து நல்ல திருப்பணிக்கும் உதவ வேண்டுகிறேன்.

காரியதரிசி,

மகாத்மா ஸ்தூபி நிதிக் கமிட்டி.

பிரகாசம் காரு பேட்டி

(நமது விசேஷ விடாக்கண்ட நிருபர்)

"**வி**டக்கூடாது. விடக்கூடாது" என்று சொல்லிக் கொண்டே ஆந்திர கேசரி ஸ்ரீ பிரகாசம்காருவின் முன்னிலையில் போய் நின்றேன். மேஜையின் இரு பக்கங்களிலும் இரண்டு மலை போன்ற காகிதக் கட்டுகளுடன் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்த பிரகாசம்காரு என்னை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்து விட்டு "யாரப்பா நீ?" என்று விசாரித்தார்.

"நானா? நான்தான் விடாக் கண்டன்" என்றேன்.

"அட, நீ என்னுடைய கட்சி; வாப்பா, வா! என்ன சேதி? என்னத்தை விடக் கூடாது என்று சொல்லிக் கொண்டே வந்தாய்?" என்று கேட்டார் பிரகாசம்.

"ஆந்திர மாகாணத்தையும் விடக் கூடாது; சென்னை நகரத்தையும் விடக் கூடாது. சென்னை மந்திரிகள் பேரிலுள்ள குற்றச் சாட்டுகளையும் விடக் கூடாது" என்றேன்.

"யார் விட்டார்கள், இதோ பார்! கொஞ்ச காலமாக என்னுடைய பிரதம ஜோலியே அதுதானே? இந்தப் பக்கம் இருக்கும் பைல்கள்தான் ஆந்திர மாகாணப் பிரிவினை சம்பந்தமானவை. இதோ வலது பக்கம் உள்ளவை மந்திரிகள்மீது குற்றச்சாட்டுகள்."

"இவ்வளவும் குற்றச் சாட்டுகளா? இவ்வளவு குற்றங்களையும் செய்து விட்டா நமது மந்திரிகள் நிம்மதியாகச் சட்ட சபைக்கு வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள்! அநியாயம்! அக்கிரமம்!..." என்றேன்.

"இவ்வளவும் குற்றங்கள் இல்லை. குற்றப் பத்திரிகைகள்; அவை சம்பந்தமான கடிதப் போக்குவரத்துக்கள்; அசல் தீர்மானங்கள்; நகல் தீர்மானங்கள் எல்லாம் சேர்ந்ததுதான் இவ்வளவும்."

"மந்திரிகள் குற்றம் செய்தவர்கள் தான் என்பதற்கு இந்த தஸ்தவேஜுகளே போதுமே! இதற்கு விசாரணையே வேண்டாமே!" என்றேன்.

"அதை நாம் சொன்னால் யார் கேட்கிறார்கள்? இருந்தாலும் விட்டேனா? விடாப்பிடியாய் நானும் சட்டசபையில் எத்தனை விதமான தீர்மானங்கள் கொண்டுவந்து விட்டேன் பார்த்தாயா? முதலில் உங்கள் சபாநாயகர் என் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவே மறுத்து விட்டார். இல்லாத பொல்லாத சட்ட நுட்பங்களையெல்லாம் எடுத்துக்காட்டி என் தீர்மானம் சட்டசபையில் செல்லுபடியாகாது என்று கூறிவிட்டார். இங்கிலாந்து பார்லிமெண்டு முறையில் இத்தகைய தீர்மானங்களுக்குச் சட்டசபை விதிகள் அநுமதி தருகின்றனவாம். நம் அரசியல் முறையில் இடமில்லையாம்."

"அப்படியானால் தாங்கள் இந்தத் தீர்மானத்தை லண்டன் சட்ட சபைக்கே கொண்டு போய்ச் சென்னை மந்திரிகள் மீதுள்ள குற்றங்களை விசாரிக்கச் சொல்வது தானே?" என்று கேட்டேன்.

"விடவா போகிறேன். லண்டனுக்கு என்ன? இங்கே ஒன்றும் பலிக்கவில்லையென்றால் சர்வதேசச் சபைக்கே கொண்டு போய் ஒரு கை பார்த்துவிடுவதாகத் தான் உத்தேசம்."

"சர்வதேசச் சபைக்கா? பலே, அது தான் சரியான யோசனை! ஆமாம்; சர்வதேசச் சபையில் இது உள்ளூர் விஷயம் என்று சொல்லி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மறுத்து விட்டால் என்ன செய்வீர்கள்?"

"அதற்கெல்லாம் யோசனை செய்து வைத்திருக்கிறேன். என்னுடைய குற்றச்சாட்டுகளையெல்லாம் நீ படிக்கவில்லைபோலிருக்கிறது. சென்ற மந்திரி

அஸ்திவார விழா

ஏப்ரல் 13உ நடத்தலாம் என்று உத்தேசித்திருந்த மகாத்மா காந்தி ஸ்தூபி அஸ்திவார விழாவைத் தள்ளிப்போட்டிருக்கிறது. இந்தத் திருப்பணியில் சிரத்தையுள்ள அன்பர்களையும் சிற்பக் கலைஞர்களையும் கலந்தாலோசித்து ஸ்தூபி நிர்மாணத்துக்குத் தக்க திட்டம் தயாரித்த பிறகு அஸ்திவார விழாவுக்கு நாள் குறிப்பிடப்படும்.

* * *

மகாத்மா ஸ்தூபி எட்டுப் பக்கங்களிலும் மகாத்மா மணி மொழிகள் பொறிக்கப்பட்ட ஸ்தம்பமாக மட்டும் நிற்குமா அல்லது அதனடியில் மண்டபம் ஏதேனும் இருக்குமா என்று சில அன்பர்கள் விசாரித்திருக்கிறார்கள். மண்டபம் நிச்சயமாக இருக்கும். அந்த மண்டபத்தில் மகாத்மா நூல் நிலையமும் படக்காட்சியும் வைக்கப்படும். அதாவது காந்தி மகான் எழுதிய எல்லா நூல்களும் காந்தி மகானைப் பற்றி உலகமெங்கும் எழுதப்பட்டிருக்கும் நூல்களும் சேகரித்து அதில் வைக்கப்படும். காந்திஜியைப் பற்றிச் சிறந்த கலைஞர்கள் எழுதிய ஓவியங்களும் வைக்கப்படும்.

இந்தியா தேசமெங்கும் ஐம்பது காந்தி மியூஸியங்கள் ஏற்படுத்துவதற்குப் புத்தகங்களும் படங்களும் சேகரிக்கப்பட்டு வருவது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

சகல சமயத்தினரும், சாதி மத வேறுபாடின்றி ஓரிடத்தில் கூடி இறைவனைத் தியானிப்பதற்குரிய பிரார்த்தனை மண்டபம் ஒன்றும் மகாத்மா ஸ்தூபியை யொட்டி அமைக்க வேண்டுமா என்னும் விஷயம் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

* * *

பாரத நாட்டின் புராதனப் பெருமையை இக் நாளில் உலகமெல்லாம் அறியும்படி செய்து கொண்டு விளங்குபவை இந் நாட்டின் புராதன சிற்பங்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. அஜந்தா, எல்லோரா சிற்பங்களும், மாமல்லபுரத்து ரதங்களும், தஞ்சாவூர்ப் பெரிய கோயிலும் இல்லாத இந்தியா தேசத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அது எவ்வளவு மேன்மைகுன்றியிருக்கும்! அந்த நாளில் கோடானு கோடி பொருள் செலவு செய்துதான் மேற்கூறிய சிற்பங்களை அமைத்திருக்கவேண்டும். அப்படிச் செலவிட்ட பொருள்தான் நல்ல முறையில் செலவிட்ட பொருள் என்று சொன்னால் மிகையாகாது. அந்தக் காலத்துச் சிற்பக் கலைஞர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் அந்தப் பணம் உதவியது; அத்துடன் பாரத நாட்டின் பெருமையை ஆயிரம் வருஷம் நிலை நாட்டுவதற்கும் உதவியது.

கலைகளுக்குள் அழியாவரம் பெற்ற கலை சிற்பக் கலை; கல்விகளுக்குள்ளே, மேன்மையான கல்வி சிற்பக் கல்வி. இதை அறியாதவர்கள் உண்மையில் அறியாதவர்களே யாவர். உலகத்து மகான்கள், அவதார புருஷர்களின் நினைவையும் போதனைகளையும் நிலைநாட்டுவதற்கு ஆதிகாலத்திலிருந்து சிற்பக் கலை உதவி புரிந்திருக்கிறது. ஆகா! புத்த பகவானிடம் மக்கள் கொண்ட பக்தி காரணமாக எவ்வளவு அற்புதமான சிற்பங்கள் சிருஷ்டி செய்யப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணினால் பிரமிப்பு உண்டாகும்.

நமது நாளில் இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்து நமக்காகத் தமது இன்னுயிரையும் ஈந்த மகா புருஷரின் நினைவைச் சிற்பக் கலை மூலம் நிலைநாட்ட வேண்டும் என்பது சில அன்பர்களின் நோக்கம். இந்த நோக்கத்தில் நம்பிக்கையும் ஆர்வமும் உள்ளவர்கள் மகாத்மா ஸ்தூபி நிதிக்குப் பொருள் உதவி செய்கிறார்கள். வேறு வழிகளில் மகாத்மாவிடம் தங்களுக்குள்ள பக்தியைக் காட்ட விரும்புகிறவர்கள் அவ்விதமே செய்யலாம்.

மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபிக்காகச் செலவாகும் பணமெல்லாம் நமது நாட்டுச் சிற்பக் கலைஞர்களுக்கும் தொழிலாளருக்குந்தான் போகும் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்வது நலம்.

* * *

கோயமுத்தூர் ஜில்லாவுக்கும் மகாத்மாவுக்கும் உள்ள சொந்தம் பிரசித்தமானது. கோயமுத்தூர் ஜில்லா போர்டார் மகாத்மா ஸ்தூபி நிதிக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடையளிப்பதென்று ஏகமனதாகத் தீர்மானித்துத் தொகையைப் பொக்கிஷதார் கனம் ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். இந்த முதல் நன்கொடைக்காக, கோயமுத்தூர் ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ வி. கே. பழனிசாமிக் கவுண்டர் அவர்களுக்கும், ஏனைய அங்கத்தினருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறேன்.

* * *

சுதந்திர இந்தியாவில் 1950-ல் உள்ள நிலைமையையும் 1960-ம் ஆண்டில் இருக்கக்கூடிய நிலைமையையும் ஒப்பிட்டுக் கலைவாணர் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் அவர்களும் ஸ்ரீமதி டி. ஏ. மதுரம் அவர்களும் ஒரு அற்புதமான ரேடியோ நாடகம் நடத்தி

அக்கப் போர்

ஸ்ரீமான் பொதுஜனம் அவர்களுக்கு உள்ள கஷ்டங்கள் போதாவென்று, சட்ட சபையிலும் அவரைக் கரித்துக் கொட்டத் தொடங்கியிருக்கிறார்கள். சென்னைச் சட்ட சபையில் 29-ம் தேதியன்று கனம் கோபால் ரெட்டி பட்ஜட் விவாதத்துக்குப் பதிலளிக்கும்போது, "பொதுஜனம் ஒரு விநோதப் பிரகிருதி. இருநூறு வருஷமாகத் தூங்கிக் கொண்டிருந்தவர் இப்பொழுது விழித்துக் கொண்டு 'அது வேண்டும் இது வேண்டும்' என்று கேட்கிறார்" என்று கோபித்துக் கொண்டார். ஜனாப் ஹுஸைன் என்ற அங்கத்தினர், "பொதுஜனம் விநோதப் பிரகிருதி மட்டுமல்ல. துரதிர்ஷ்டசாலி. ஊமையுங்கூட" என்றார். பேஷ், பேஷ் ஸ்ரீமான் பொதுஜனம் விநோதப் பிரகிருதி ஆகி, துரதிர்ஷ்டசாலியாகி, ஊமையாகவும் ஆகி விட்டார்! இனிமேல் செவிடாகிக் குருடாகிப் பிராணனை விடவேண்டியதுதான்! ஆனால் அதற்குப் பிறகாவது பொதுஜனத்தைப் பற்றிச் சட்டசபைகளில் பேச மாட்டார்களல்லவா? உயிரை விட்டும் பிரயோஜனம் இல்லாமல் போய் விடப் போகிறது! உயிரை விட்ட பொதுஜனத்தைப் பிசாசு என்று திட்டாமலிருக்க வேண்டுமே!

★

தேர்தலுக்குப் பின் சட்டசபையில் சுமார் 350 அங்கத்தினர்கள் இருப்பார்களாம். இவ்வளவு பேரும் சௌகரியமாக உட்காரும்படியாகப் புதிய சட்டசபைக் கட்டிடம் கட்டுவதற்குச் சர்க்கார் திட்டம் போட்டு வருகிறார்கள். அது வரை எழும்பூரிலுள்ள மியூஸியம் தியேட்டரைத் தாற்காலிகமாகச் சட்டசபைக் கட்டிடமாய் உபயோகித்துக் கொள்ளலாமென்று யோசனை செய்தார்களாம். சட்டசபை மியூஸியம் தியேட்டருக்குள் போவதை நாம் ஆட்சேபிக்கவில்லை. நம்முடைய சென்னைச் சட்டசபை 'மியூஸிய'த்துக்குள்ளேயே போய் உட்கார்ந்தாலும் மிகவும் பொருத்தமாகத்தானிருக்கும்!

★

"கம்பர், வால்மீகியைக் கற்க வேண்டும்" சிதம்பரத்தில் கல்வி மந்திரி பிரசங்கம்.

—ஒரு தினப் பத்திரிகை.

"வால்மீகி, கம்ப ராமாயணங்களைப் படிக்க வேண்டும்" கனம் மாதவ மேனன்.

—இன்னொரு தினப் பத்திரிகை.

கம்பரும் வால்மீகியும் ஒருவரையொருவர் கற்பது இருக்கட்டும்; நாம் கம்பர்—வால்மீகி இருவரையும் கற்று வைக்கலாம்!

"கோவில்பட்டியில் நடைபெறும் கால் நடைக் கண் காட்சிக்கு ஜில்லா வாசிகள் அனைவரும் வரவேண்டும்."

—பத்திரிகை அழைப்பு

ஜில்லாவாசிகள் அனைவரும் கால்நடைக் காட்சிக்கு வருவதாயிருந்தால் கால் நடையாகவே வரவேண்டியிருக்கும்!

★

சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தொழிற் கல்விச் சாலையில் மராமத்து மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் பேசியபோது, பழங்காலத்தில் கோயில்கள் பள்ளிக்கூடங்களாகவும் விளங்கின என்பதைக் குறிப்பிட்டார். பள்ளிக்கூடத்துக்கு இடம் அகப்படாமல் தவிக்கும் இக்காலத்தில் கோயில்களைப் பள்ளிக்கூடங்களாக உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் ஆலோசனை கூறினார். இந்த யோசனையை ஏற்றுக் கொண்டால் புதிய பள்ளிக்கூடங்கள் கட்டவேண்டுமென்று மராமத்து மந்திரியை யாரும் கஷ்டப்படுத்த மாட்டார்கள் அல்லவா? இந்த யோசனையுடன் திருப்பதியில் சுகாதார மந்திரி டாக்டர் ராஜன் சொன்ன இன்னொரு யோசனையையும் கவனிக்க வேண்டும். திருப்பதி வேங்கடாசலபதி கோயிலை டாக்டர் பார்வையிட்டுவிட்டு, "நமது கோவில்களில் மடப் பள்ளிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். சுவாமிக்கு நைவேத்தியம் செய்யும் பதார்த்தங்களை ருசிகரமாகவும் சுத்தமாகவும் உயர்ந்த முறையிலும் தயாரிக்கவேண்டும். அப்பொழுதுதான் அதைச் சாப்பிடுகிறவர் ஆரோக்கியம் கெடாமல் இருக்கும்" என்று கூறினார். மேற்கண்ட இரண்டு யோசனைகளையும் ஏற்றுக்கொண்டால் மராமத்து, சுகாதார மந்திரிகளின் கவலை விடுவதுடன், கல்வி மந்திரியின் கவலையும் அகலும் என்று சொல்லலாம். பள்ளிக்கூடங்களைக் கோவில்களில் வைத்துக்கொண்டு காலாகாலத்தில் சுடச் சுட ருசிகரமான பிரசாதங்களும் கொடுத்து வந்தால், குழந்தைகள் தாங்களாகவே பள்ளிக்கூடம் வருவார்கள். கட்டாயக் கல்வித் திட்டமும் சுலபமாக நிறைவேறுமென்பதில் என்ன சந்தேகம்?

★

ருஷ்யா தேசம் தனக்குத் தேவையான அளவு ரப்பர் கிடைக்காமல் தவிப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

ருஷ்யாவுக்கு உலகத்தைக் கட்டி ஆள வேண்டுமென்ற ஆசை ரப்பரைப்போல் நீண்டுகொண்டே போகிறபடியால் மேற்படி தவிப்பு அதிகமாகத்தானிருக்கும்.

"பாகிஸ்தானில் முஸ்லிம்களைப் போல் சிறுபான்மையோர் எல்லோருக்கும் சகல உரிமைகளும் உண்டு. சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது நமது புனிதமான கடமை. இந்தக் கடமையைப் பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையும் பிரகடனம் செய்திருக்கிறது.

"சமத்துவம், சகோதரத்துவம், சமுதாய நீதி இவற்றை அஸ்திவாரமாகக் கொண்டே பாகிஸ்தானை உருவாக்க வேண்டும் என்று நான் அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறேன்.

"ஆனால் நான் கிழக்கு வங்காளத்தில் கண்ட நிலைமை எனக்கு மிகுந்த மன வேதனையைக் கொடுத்திருக்கிறது.

"அந்த மாகாணத்தில் வெறிபிடித்த முஸ்லிம்கள் பலாத்காரம், கொள்ளை, தீ வைத்தல் போன்ற கொடும் செயல்களில் ஈடுபட்டதைப் பார்க்க மிகவும் வருந்துகிறேன்.

"நிரபராதிகளான, உதவியற்ற ஜனங்களை ஹிம்சிப்பது பாகிஸ்தானுக்கே மானக்கேடான காரியம். அது இஸ்லாமியக் கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமானது.

"எனவே, கிழக்கு வங்காளத்தில் அட்டூழியம் செய்தவர்களும் அதற்கு உடந்தையாக இருந்தவர்களும் பாகிஸ்தானின் நண்பர்கள் அல்ல. அவர்கள் பாகிஸ்தானின் பிரஜைகளாகவே இருக்கத் தகுதியற்றவர்கள்" என்று லியாகத் அலிகான் கிழக்கு வங்காளத்தில் மதவெறி பிடித்து அட்டூழியங்களைச் செய்த முஸ்லிம்களை அழுத்தமாகக் கண்டித்தார்.

இதற்கு முன் பாகிஸ்தானிலுள்ள முக்கியமான எந்தத் தலைவரும் பாகிஸ்தான் முஸ்லிம்களின் பாதகச் செயல்களை இவ்வாறு கண்டித்ததில்லை. அதிலும் பாகிஸ்தான் பிரதம மந்திரியே அதை இப்போது பகிரங்கமாக ஒப்புக்கொண்டு அவர்களைக் கண்டித்ததைக் காட்டிலும் பாகிஸ்தான் சர்க்காரின் மன மாற்றத்துக்கு வேறு உதாரணம் என்ன வேண்டும்?

புது டில்லியிலே பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கும் ஜனாப் லியாகத் அலிகானுக்கும் நடந்த சம்பாஷணைகள் முடிந்துவிட்டன வென்றாலும், இந்தியா—பாகிஸ்தான் பிரச்னைகள் திருப்திகரமாகத் தீருவது இரு நாடுகளிலும் உள்ள சர்க்கார், தலைவர்கள், பத்திரிகைகள், பொது ஜனங்கள் எல்லோரையும் பொறுத்திருக்கிறது.

இந்தியா — பாகிஸ்தான் தகராறு முற்றும்படியாக பத்திரிகைகளும் பொதுஜனங்களும் நடந்து கொள்ளக் கூடாது என்று பண்டித ஜவாஹர்லால் நேரு இடைவிடாது வற்புறுத்தி வருவதுபோல், பாகிஸ்தான் பிரதம மந்திரி பாகிஸ்தான் பத்திரிகைகளையும் மக்களையும் வற்புறுத்தி வரவேண்டும்.

ஒரு புறத்தில் ஜனாப் லியாகத் அலிகான் இந்தியா—பாகிஸ்தான் சமரசத்திற்கான முயற்சிகளைச் செய்து வருகையில், மற்றொரு புறத்தில் பாகிஸ்தான் தலைவர்களும் வானொலியும் பத்திரிகைகளும் துவேஷப் பிரசாரம் செய்யும்படி விட்டுவிடக் கூடாது.

இதுவரையில் நடந்து வந்த துஷ்பிரசாரமே கிழக்கு வங்காள அட்டூழியங்களுக்குக் காரணம் என்பதைப் பாகிஸ்தான் சர்க்கார் தலைவர்கள் உணர்ந்து தங்களுடைய போக்கை முற்றிலும் மாற்றிக் கொண்டால்தான் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நிரந்தரமான நட்பும் நல்லுறவும் ஏற்படுவது சாத்தியமாகும்.

புது டில்லிக்கு விஜயம் செய்த லியாகத் அலிகான் கோஷ்டியார் ராஜ கட்டத்திலுள்ள காந்திஜியின் சமாதிக்குப் பூமாலைகள் சூட்டி மரியாதை செய்து தங்களுக்குப் பெருமையைத் தேடிக் கொண்டார்கள். அதுபோலவே அவர்கள் இந்தியா—பாகிஸ்தான் நல்லுறவு ஏற்பட்டு நிலைப்பதற்கான காரியங்களைச் செய்து காந்திஜியின் இலட்சியத்தை நிறைவேற்றுவதன் மூலம் பாகிஸ்தானுக்குப் பெருமையைத் தேடிக் கொள்ளவேண்டும்.

இரு நாடுகளின் எதிர்கால சுபிட்சத்துக்கும் அமைதிக்கும் பரஸ்பரம் நட்பும் நல்லெண்ணமும் அத்தியாவசியம் என்று பாகிஸ்தான் தலைவர்கள் வாயளவில் சொல்லி வருகிறார்கள். அதை அவர்கள் அனுஷ்டானத்திலும் கொண்டு வருவதற்கான சூழ்நிலை ஜவாஹர்—லியாகத் அலி சந்திப்பின் பலனாக ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறாக, காந்திஜி காட்டிய வழியில் செல்லும் பண்டித ஜவாஹர்லால் நேருவின் பெரு முயற்சி வகுப்புத் துவேஷமாகிற அந்தகாரத்தை அகற்றி இந்தியா, பாகிஸ்தான் எங்கும் நம்பிக்கை ஒளி வீசும்படி செய்திருக்கிறது. இந்த ஒளி நீடித்திருக்க வேண்டுமென்று இந்தியாவின் க்ஷேமத்தில் அக்கறையுள்ளவர்கள் எல்லோரும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

நள்ளிருளில் நம்பிக்கை ஒளி!

காந்திமகான் காட்டிய வழியை உறுதியுடன் கடைப்பிடிக்கும் ஒரு தலைவர் நமக்குக் கிடைத்திருப்பது இந்தியாவின் பாக்கியமாகும்.

அவர்தான் இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

ஜவாஹர்லால்ஜியின் அத்தகைய திடசித்தமும் மன உறுதியுமே இந்தியாவின் எதிர்காலத்தில் நாம் நம்பிக்கை கொள்வதற்குக் காரணமாக இருந்து வருகின்றன.

இந்தியாவின் சுதந்திரத் தந்தை காட்டிய அஹிம்சா நெறியிலும் அன்பு முறையிலும் ஜவாஹர்லால்ஜி கொண்டிருக்கும் அசையா நம்பிக்கைதான் இன்று நாலாபுறமும் சூழ்ந்திருக்கும் நள்ளிருளில் நமக்கு ஒளி காட்டும் தீபமாயிருக்கிறது.

அதுகாரணமாகவே இன்று நடவாத காரியம் நடந்திருக்கிறது. பாகிஸ்தான் பிரதமர் புதுடில்லிக்கு வருவது சாத்தியமாயிற்று. இரு பிரதம மந்திரிகளும் அளவளாவி மனம் விட்டுப் பேசுதல் சாத்தியமாயிற்று. இந்தியாவும் பாகிஸ்தானும் சகோதர பாவத்துடன் அன்னியோன்னியமாக வருங்காலத்தில் ஒத்து வாழ முடியும் என்ற நம்பிக்கை உதயமாகி யிருக்கிறது.

இந்தியா - பாகிஸ்தான் நெருக்கடி நாளுக்கு நாள் முற்றி கிழக்கு வங்காள அட்டூழியங்களில் வந்து முடிந்திருக்கும் இச்சமயத்திலே, பலர் பலவித யோசனைகளைச் சொல்லி வருகிறார்கள். ஜனப் பரிவர்த்தனை அல்லது யுத்தம் தான் இந்தியா - பாகிஸ்தான் பிரச்னைகளைத் தீர்க்கவல்லது என்று முன் யோசனையின்றி முழங்குகிறார்கள்.

போர் தொடரவேண்டும் என்று கூறுவோர் தங்களுடைய அந்தக் கூற்றுக்கு ஆதாரமாக ஹைதராபாத்திலும் காஷ்மீரத்திலும் இந்திய சர்க்கார் கைக்கொண்ட நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஹைதராபாத்தும் காஷ்மீரமும் இந்தியாவைச் சேர்ந்த பிரதேசங்களாகும். எனவே உள் நாட்டைச் சேர்ந்த குறிப்பிட்ட இடங்களில் சர்க்கார் கைக்கொள்ளும் போலீஸ் நடவடிக்கைகளுக்கும் பிறநாட்டின்மீது தொடுக்கும் போருக்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு.

பாகிஸ்தான் அன்னிய நாடு என்பதை இந்தியா உலகம் அறிய ஒப்புக் கொண்டிருக்கிறது என்பதை அத்தகையோர் உணரவேண்டும்.

ஆனால் அத்தகைய விபரீதமான யோசனைகளுக்குச் செவிசாய்க்காமல் பண்டித ஜவாஹர்லால் நேரு காந்திஜியின் வழியைப் பின்பற்றியதால்தான், பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனாப் லியாகத் அலிகானும் பாகிஸ்தான் சர்க்காரைச் சேர்ந்த மற்றப் பிரமுகர்களும் புதுடில்லிக்கு வந்து சமரச சம்பாஷணைகளில் ஈடுபடுவது சாத்தியமாயிற்று.

காந்திஜியின் கொள்கை இறுதியில் பிரிட்டிஷாரின் மனதையே மாற்றியது போல, அவரது வழியைப் பின்பற்றி ஜவாஹர்லால்ஜி அனுஷ்டித்து வரும் கொள்கையும் இறுதியில் பாகிஸ்தானிகளின் மனதை மாற்றலாம் என்பதற்கு ஜனாப் லியாகத் அலிகானின் புதுடில்லி விஜயமே தகுந்த சான்றாகும்.

சில நாட்களுக்கு முன் கல்கத்தாவில் நடந்த வகுப்புக் கலகத்திலே பதினாயிரம் முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள் என்ற பாகிஸ்தான் வானொலியின் புளுகைப் பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனாப் லியாகத் அலிகானே பகிரங்கமாக மறுத்து அந்தக் கூற்று உண்மையல்ல என்பதை ஒப்புக் கொண்டார்.

"நாம் இருவரும் சேர்ந்து கிழக்கு வங்காளத்தில் யாத்திரை செய்தால் முஸ்லிம்களிடையே மனமாற்றமும் ஹிந்துக்களிடையே நம்பிக்கையும் ஏற்படக்கூடும்" என்று ஜவாஹர்லால்ஜி கூறிய யோசனையை ஏற்க பாகிஸ்தான் பிரதம மந்திரி மறுத்து விட்டார் என்றாலும், உண்மை நிலைமையை அறிந்து வருவதற்காக அவர் கிழக்கு வங்காளத்துக்குச் சென்று கலகம் நடந்த பல இடங்களையும் நேரில் பார்வையிட்டார்.

லியாகத் அலிகான் தாம் நேரில் கண்டதை மறைத்து கிழக்கு வங்காளத்தில் பாலும் தேனும் வழிந்தோடுகிறது என்று சொல்லி விடாமல் அங்கு நடைபெற்ற கோரச் சம்பவங்களை உலகம் அறிய ஒப்புக் கொண்டார்.

சம்புதூர், (6) சாம்பவர் வடகரை ஆகிய ஆறு கிராமங்கள் திருநெல்வேலி ஜில்லாவுக்குள் திட்டுப் பிரதேசங்களாயிருந்து வருகின்றன. அப்படியென்றால் இந்தக் கிராமங்களைச் சுற்றிலும் திருநெல்வேலி ஜில்லாதான். ஆனாலும் திருவாங்கூர் அரசாங்க நிர்வாகத்துக்கு உட்பட்டவை. "இந்தப் பிரதேசங்களை இந்திய சர்க்காரின் கொள்கைப்படி திருநெல்வேலி ஜில்லாவில் சேர்த்திருக்க வேண்டுமே? ஏன் சேர்க்கவில்லை?" என்று ஸ்ரீ எல். கிருஷ்ணசாமி பாரதி ஒரு கேள்வியைக் கிளப்பினர்.

நொண்டிச் சாக்கு

மேற்படி கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியது அவசியம் என்று சென்னை சர்க்கார் கருதி ஒரு அறிக்கை விடுத்தார்கள். அதில் சென்னை சர்க்கார் சொல்லிய காரணமாவது:—"திட்டுப் பிரதேச மாறுதல்கள் சிறிய துண்டுப் பிரதேசங்களின் அளவில்தான் இருக்க வேண்டுமே யொழிய அரசாங்க விஸ்தீரணத்தைக் கணிசமாகக் காட்டுவதாகவோ குறைப்பதாகவோ இருக்கக் கூடாது. மேற்படி ஆறு கிராமங்களின் விஸ்தீரணம் 28 சதுர மைல். இவ்வளவு பெரிய பிராந்தியத்தை எடுத்துக் கொள்வது இத்திட்டத்தின் நோக்கமல்ல."

இந்த சர்க்கார் சமாதானத்தை நொண்டி சால்ஜாப்பு என்று ஸ்ரீ எல். கிருஷ்ணசாமி பாரதி கருதி இன்னொரு அறிக்கை விடுத்திருக்கிறார். அதில் அவர் சொல்வதைக் கேளுங்கள் :—

"இந்திய அரசாங்கத்தின் நோக்கம் தெளிவானது. சிறிய துணுக்குகள் என்ற கேள்வியே இல்லை. நிர்வாக வசதியின் காரணமாகத் திட்டுப் பிரதேசங்கள் (Enclaves) எல்லாம் இணைக்கப்பட வேண்டும் என்பதே இந்திய அரசாங்கத்தின் அடிப்படை நோக்கம்.

கவர்னர் ஜெனரல் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட திட்டுப் பிரதேச பரிவர்த்தனைச் சட்டம் ஒன்பதாவது பகுதியில், எடுக்கப்பட்ட திட்டுப் பிரதேசங்களின் ஒரு பகுதியைத் தனி ஜில்லாவாக அமைக்கலாம் என்று கண்டிருக்கிறது. எனவே ஜில்லாக்களாக அமைவதற்குத் தகுதியான அவ்வளவு விஸ்தீரணமுள்ள திட்டுப் பிரதேசங்களாயிருந்தால் மாற்றப்படலாம் என்பது தெளிவல்லவா?

இதுவரையில் பின்வரும் மாறுதல்கள் நடந்திருக்கின்றன :—

விந்தியப் பிரதேசம், ஐக்கிய மாகாணத்திற்கு 491 திட்டுப் பிரதேச கிராமங்களை மாற்றி உள்ளது. (அநேக நூற்றுக் கணக்கான சதுர மைல் விஸ்தீரணம்.)

மத்திய மாகாணம், மத்திய பாரத அரசாங்கத்துக்கு 44 கிராமங்களை வழங்கி உள்ளது. அவைகளின் விஸ்தீரணம் 93·28 சதுர மைல்.

பஞ்சாப் 'பெப்சு'க்கு 109 கிராமங்கள், 'பெப்சு' பஞ்சாபுக்கு 296 கிராமங்கள் வழங்கி உள்ளன. இவையெல்லாம் எத்தனையோ 28 சதுர மைல் கொண்டவை!

எனவே, இந்த 6 திருவாங்கூர் திட்டுப் பிரதேசங்கள் 28 சதுர மைல் விஸ்தீரணம் கொண்டதால், தாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை என்று சென்னை அரசாங்கம் கூறுவது அசம்பாவிதம்.

ஆறு கிராமங்களையும் 28 சதுர மைலையும் கண்டு மிகப் பிரம்மாண்டமானது என்று நடுநடுங்கிக் கேளாது விடுக்கத் துணிந்த இந்தச் சென்னை அரசாங்கமே தங்கள் பகுதியிலிருந்த 67 கிராமங்களை மைசூர் அரசாங்கத்துக்கு மாற்றிவிட இசைந்துள்ளதே! இந்த 67 முழுக் கிராமங்கள் எல்லாம் மிகச் 'சிறிய துண்டுகள்'தானோ? இவைகளின் மொத்த விஸ்தீரணம் என்னவோ? எத்தனை 28 சதுர மைல்களோ? சிறிய துணுக்குப் பிரதேச வாதம், சென்னை கொடுக்கும் பிரதேசங்களுக்கு இல்லைபோலும்! எடுக்கும் பிரதேசங்களுக்கு மட்டும்தானோ?"

இவ்வாறு சொல்கிறார் ஸ்ரீ எல். கிருஷ்ணசாமி பாரதியார். அவர் பொறுப்பு அறியாமல் வாயில் வந்ததைச் சொல்லக் கூடியவர் அல்ல. இந்த விவாதத்தில் ஸ்ரீ பாரதியின் கட்சியிலேயே நியாயம் இருக்கிறது என்பது வெளிப்படை.

சென்னை சர்க்கார் தூங்கிப் போய் விட்டார்களா, அல்லது 'இந்த வம்பு நமக்கு என்னத்திற்கு?' என்று சும்மா இருந்து விட்டார்களா என்று தெரியவில்லை. அநேகமாக இரண்டாவது காரணமாகவே இருக்கலாம். சென்னை சர்க்காருக்கு எத்தனையோ தொல்லைகள்; தீர்க்க வேண்டிய எத்தனையோ பிரச்னைகள். இந்தத் திருவாங்கூர் திட்டுப் பிரதேசங்களைக் கொடு என்று கேட்டுத் திருவாங்கூர் ஆசாமிகளுடன் சண்டையைக் கிளப்புவானேன் என்று அவர்கள் எண்ணியிருக்கக் கூடியது இயற்கையே. அப்படியானால், யார் ஏதேனும் சொல்லிக் கொண்டு போகட்டும் என்று எருமை மாட்டின்மேல் மழை பெய்ததுபோல் சும்மா இருந்துவிடலாம். காரியம் செய்ய முடியாத வெறும் வாதங்களைச் சொல்லி எதற்காக அறிக்கை விட வேண்டும்?

கல்கி

மலர் 9

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 36

என்ன சேதி?

தூபியும் ஜோதியும்

தமிழ் மொழியில் கடல் மடை திறந்தாற்போல் வெள்ளமெனச் சொற்பொழிவு ஆற்றக்கூடிய சக்தி வாய்ந்தவர்களில் ஸ்ரீ கிருபானந்த வாரி என்னும் பெரியார் ஒருவர். இவர் பரம பக்தர்; சமரச சன்மார்க்க நெறியை நாட்டில் வளர்த்து வருகிறவர். இத்தகைய திருத்தொண்டர் ஒரு பெரும் திருப்பணியைச் சில காலத்துக்கு முன்பு மேற்கொண்டார். அருள் ஞானவள்ளலாகிய ஸ்ரீ ராமலிங்க அடிகள் தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள வடலூர் என்னும் திருப்பதியில் சத்திய ஞான சபையையும் அதில் அருட்பெருஞ் ஜோதியையும் நிறுவி யருளினார் அல்லவா? அந்தச் சத்திய ஞான சபைக் கட்டிடம் பழுதுபட்டிருந்தது. ஸ்ரீ கிருபானந்தர் தன்னந் தனியே முயற்சி தொடங்கிப் பல அன்பர்களின் பேருதவி கொண்டு வடலூர் ஞான சபையை மேன்மையாகப் புதுப்பித்துக் கட்டினார். இந்தத் திருப்பணிக்காக ஏறக்குறைய மூன்று லட்சம் ரூபாய் அன்பர்களிட மிருந்து வசூலித்துச் செலவு செய்தார். திருப்பணி இப்போது பூர்த்தியடைந்து விட்டது. நாளது ஏப்ரல் மீ 24உ திங்கட்கிழமை 'புதுப்பித்த ஞான சபையின் உச்சியில் தூபி அமைத்து நீராட்டிச் சபைக்குள்ளே ஜோதியை நிறுவப் போகிறார்கள். இந்தத் திருவிழாவைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு ஸ்ரீ கிருபானந்தவாரி ஏற்பாடு செய்து வருகிறார். செஞ்சொல் விரிவுரைகளும் இன்னிசை விருந்துகளும் அச்சமயம் நிகழும் என்று அறிகிறோம். ஸ்ரீ ராமலிங்க அடிகளின் தேனொழுகும் அருட் பாடல்களைப் பாடியும் கேட்டும் படித்தும் இன்புற்ற அன்பர்கள் அனைவரும் ஸ்ரீ கிருபானந்தவாரி அவர்களுக்குப் பூரண உதவி செய்து தூபி-ஜோதி விழாவைச் சிறப்பாக நடத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

புது டில்லியில் ஒருவர்

புது டில்லியில் உள்ள தமிழர்களில் ஒருவர் தமிழ்நாட்டு உரிமைகளின் விஷயத்தில் கண்ணுங் கருத்துமா யிருந்து வருகிறார் என்று அறிந்து மகிழ்கிறோம். மதுரை ஸ்ரீ எல். கிருஷ்ணசாமி பாரதி எம். பி. தமிழ்நாட்டின் பிரதிநிதியாக இந்தியப் பார்லிமெண்டில் ஸ்தானம் வகிப்பவர்களில் ஒருவர். சில காலத்துக்கு முன்பு இவர் சென்னை மாகாண சர்க்கார்மீது ஒரு புகார் கூறினார். திருவாங்கூர் சமஸ்தானத்தில் தற்போது சேர்ந்து, ஆனால் தமிழ்நாட்டுக் குள்ளே திட்டுக்களாக வந்திருக்கும் பிரதேசங்கள் விஷயமாகச் சென்னை சர்க்கார் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான்.

சுதந்திர இந்தியாவில் மாகாணங்களும் சமஸ்தானங்களும் ஒன்று பட்டு ஒரே தலைமை அரசாங்கத்துக்கு உட்பட்டு விட்டனவல்லவா? இதன் பயனாக ஆங்காங்கு ஒரு மாகாணத்தின் பகுதிகள் இன்னொரு மாகாணத்துக்குள் புகுந்திருந்தால் அத்தகைய திட்டுப் பிரதேசங்களை மாற்றி இணைப்பதற்குச் சட்ட திட்டங்களை இந்திய சர்க்கார் செய்திருக்கிறார்கள். இச்சட்ட திட்டங்களின்படி இந்தியாவில் பதினாறு மாகாணங்களில் இதுவரை திட்டுப் பிரதேசப் பரிவர்த்தனை மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன.

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த (1) இலத்தூர், (2) ஆய்க்குடி, (3) களங்காடு, (4) மார்த்தாண்டபுரம், (5) அச்

கொஞ்சம் பொறு! பார்க்கலாம்!



புது டில்லியிலே பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கும் ஜனாப் லியாகத் அலிகானுக்கும் சம்பாஷணை நடந்தபோது வான வெளியில் மேற்கண்ட சம்பாஷணை நடந்திருக்கலாம் என்று நமது சைத்திரிகர் கற்பனைக் கண் கொண்டு சித்திரிக்கிறார்



கல்கி

பொருளடக்கம்

மலர் 9 இதழ் 36 | ஏப்ரல் 9 | விரோதி பங்குனி 27

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ரிஜிஸ்டர்டு

கோத்ரெஜ் நெ.1 நெ.2

No.1 No.2

டாய்லெட் (ஸ்நான) சோப்புகள்

பொருக்கி எடுக்கப்பட்ட புஷ்டியளிக்கும் தாவர எண்ணைகளையும் இதர மூலங்களையும் சேர்த்து புகழ் வாய்ந்த சிறந்த முறையில் பிரத்யேகமாய் திறம்பட தயாரிக்கப் படுகின்றன. அவைகளின் பரிமளம் கமழும் சிறந்த நுரையே அழகை யூட்டி கிருமிகளையும் கொல்லுகிறது.



நெ. 1 — இப் பெரிய கட்டி பணத்திற்கேற்ப உத்தமமான மதிப்பு வாய்ந்தது. உங்களுடைய ஸ்நானங்களில் நீங்கள் திருப்தியைக் காண்பீர்கள்.

கவனியுங்கள்

இந்த சௌந்தர்ய சோப்புக்கள் சாஸ்த்ரீய முறைப்படி பரிசுத்தமானவை என்றும் நன்மை பயக்கும் பவன என்றும் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. சில சோப்புகள், தவறுதலாக, பரிசுத்த மானவைகளாக கருதப்படுகின்றன. ஏனெனில் உதாரணமாய் பார்ப்பதற்கு பளிங்குபோல் தென்படுவதினால்; இது அவைகளின் பரிசுத்தத்திற்கோ அல்லது தரத்திற்கோ எவ்வித அறிகுறியுமாகாது.

ஆராய்ந்தறிந்தோர் உபயோகிக்கும் சோப்புகள்



கோத்ரெஜின் இதர உயர்தர தயாரிப்புகள்

ஷேவிங் ஸ்டிக், கிளிசரின்

ஷேவிங் 'ரவுண்டு' கூந்தல் தைலம்

100 சதம் தூய்மைக்கும் மிருகக் கொழுப்பற்று தென்பதற்கும் உத்தரவாதமானது.

கோத்ரெஜ் சோப்ஸ், லிட்.-மதராஸ்: 164, பிராட்வே; கொச்சின்: 6/36, கல்வத்தி




விஜயகுமாரி
புதுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு
கலையுலகுக்கு ஒரு காணிக்கை
கற்பனைக்கு ஒரு சிறப்பு
நாட்டுக்கு ஒரு நல்லபடம்
டைரக்ஷன் ஏ.எஸ்.ஏ.சாமி
ஜூபிடர் தயாரிப்பு
தமிழ்நாடெங்கும் நடைபெறுகிறது

1949ம் - வான்கார்டும்

★

1949 ஆடு வான்கார்டுகளுக்கு வெற்றிகரமான வியாபாரத்துடன் பூர்த்தி அடைந்தது. இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்வோரின் நம்பிக்கை படிப்படியாக அதிகரித்ததனாலும், எமது பிரதிநிதிகளின் இடைவிடாத முயற்சியினாலும், ஒத்துழைப்பினாலும் எமது இரு கம்பெனிகளுக்கும் நல்ல பிரீமிய வருமானம் கிடைத்து, முந்திய வருஷ ரிகார்டு முறியடிக்கப்பட்டது.

20,000க்கு மேற்பட்ட மோட்டார் சொந்தக்காரர்கள் வான்கார்டுகளின் சேவை பெற்றுள்ளனர். இதனால் பதின்மூன்று லக்ஷம் ரூபாய்க்குமேல் பிரீமியம் கிடைத்தது. 20,000க்கு மேற்பட்ட மோட்டார் சொந்தக்காரர்களும், மூன்றாம் பார்ட்டி விஷயமான தமது பொறுப்பைப் பற்றி கவலை நீங்கினர். சிறியதாயினும், பெரியதாயினும் சரி எல்லா பிரச்னைகளுக்கும் நுட்பமான கவனம் செலுத்தப்பட்டு, மோட்டார் சொந்தக்காரர்கள் திருப்தியடையும் வகையில் பிரச்னைகள் தீர்க்கப்படுகின்றன.

ஆயுள் விஷயத்திலும் அப்படியே. செலவுகளைக் குறைத்து நிதியை படிப்படியாக உயர்த்துகிறோம். பாலிஸிதாரர்களின் சிரத்தையே கம்பெனிக்கு பிரதானமாக இருந்து வருகிறது.

எல்லா இலாகாக்களிலும் மொத்த பிரீமிய வருமானம் இருபத்து மூன்று லக்ஷம் ரூபாய்க்குமேல் அதிகரித்துவிட்டது. இத்தகைய வியாபாரப் புள்ளி விவரங்களை எழுதும்படிச் செய்த பொதுஜனங்களுக்கும் ஏராளமான பிரதிநிதிகளுக்கும் எமது வந்தனத்தைத் தெரியப் படுத்துகிறோம்.

திறமையான சேவை — சிக்கனமான விகிதங்கள் — நிரந்தர கவனம், இவைதான் எமது முன்னேற்றத்திற்கு வழிகாட்டிகள்.

உங்கள் எல்லா இன்ஷ்யூரன்ஸ் பிரச்னைகளுக்கும் எங்களிடம் ஆலோசனை செய்யுங்கள்

★

வான்கார்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

வான்கார்டு பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ் :

"வான்கார்டு ஹவுஸ்", 11-12, செகண்டு லைன் பீச், மதராஸ் - 1

ஏஜென்ஸிகளும் பிராஞ்சுகளும் எல்லா இடங்களிலும் உள்ளன

H. D. ராஜா, ஜெனரல் மானேஜர்



ஒவ்வொரு குடும்பத்தினரும்
அவசியம் பார்க்க வேண்டிய படம்!

ஏப்ரல் 7ஃ முதல்

சென்னை சித்ரா, கிரௌன், லக்ஷ்மி



விஜயாவின்

சௌகார்

கிராம வாழ்க்கையில் நிகழும் தினசரி
சம்பவங்கள் நிறைந்த அபூர்வ சித்திரம்

தயாரிப்பு - நாகிரெட்டி-சக்ரபாணி டைரக்ஷன் - பிரசாத்.